# கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு

ஜாண் ஓவென்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

*95* சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு

ஜாண் ஓவன்

மூலநூலிலிருந்து சுருக்கினவர்

எச். ஜே. ஆப்பிள்பீ

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்

95-A, வேப்பேரி நெடுஞ்சாலை

சென்னை - 600 007

Pub. No. 292–TAMIL

First Edition : 1981
Reprint by ELS : October 1991
Copies : 2000

THE DEATH OF DEATH IN THE DEATH OF CHRIST

John Owen

© GRACE BAPTIST PUBLICATION

Translated into Tamil by
WILFRED H. KUHRT

Printed at The Ark Printers, 196, R. K. Mutt Road,
Mandaveli Madras-600 028.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| நூன்முகம் | — | இந்நூல் ஏன் எழுதப்பட்டது | ... iv |
| அறிமுகம் | — | இந்நூல் எதைப் பற்றியது | ... vi |
| முதற்பகுதி | — | கடவுள் இயேசுகிறிஸ்துவை மரிப்பதற்காக அனுப்பிய நோக்கம் | ... 1 |
| இரண்டாம் பகுதி | — | கிறிஸ்து அடைந்த மரணத்தின் மெய்நோக்கம் | ... 15 |
| மூன்றாம் பகுதி | — | எல்லா மனிதரையும் மீட்க கிறிஸ்து மரிக்கவில்லை என நிருபிக்கும் பதினாறு நியாயங்கள் | ... 34 |
| நான்காம் பகுதி | — | மக்கள் யாவரையும் மீட்க கிறிஸ்து மரித்தார் என்ற கருத்து தர்க்கங்களுக்கு மறுப்பு விடை | ... 58 |
| வசனப்பட்டியல் | | | ... 116 |

# நூன்முகம்

## இந்நூல் ஏன் எழுதப்பட்டது ?

இந்நூலை நான் ஏன் எழுதியிருக்கிறேன் என்று விளக்கு கிறேன். கருத்து வேறுபாடுகளில் ஈடுபடுவதை நான் சிறிதளவேனும் விரும்புவதில்லை. ஆனால், கடவுளுக்குரிய மக்களிடம் எல்லா காலத்திற்குமென ஒப்படைக்கப்பட்ட கோட்பாட்டில் திரிபு ஏற்படாமல் பாதுகாக்க நீங்கள் போராட வேண்டும் என்று திருமறை கூறுகிறது (யூதா 3). இந்நூலின் பொருள்பற்றி அண்மையில் பலர் என்னைக் கலந்து கொண்டுள்ளனர். நாட்டின் பல பாகங்களிலும் பலர் இப்பொருள் பற்றித் தர்க்கித்து வருவதையும் கேள்வி யுறுகிறேன். எனவே இப்படிப்பட்ட ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று உறுதிகொண்டேன். வேறு யாரேனும் இப்பணியைச் செய்திருந்தால் நலமாயிருக்கும் என்று எனக் குத் தோன்றுகிறது. ஆனாலும் ஒருவராலும் இப்பணி மேற்கொள்ளப்படாமலேயே நின்று விடுவதைக் காட்டிலும் நான் இதைச் செய்வது நன்று என உணர்ந்தேன்.

இதைப் போன்றதொரு புத்தகத்தை எழுதுவதற்கு நானே சிறந்தவன் என்று நான் கருதவில்லை. இப்பொருள் பற்றி பலரும் நன்றாக எழுதியிருக்கின்றனர். ஆயினும், இச்சிக்கலின் சில பகுதிகளைப்பற்றி எழுதுவதோடு அவர் கள் நின்று விட்டதை நான் காண்கிறேன். கிறிஸ்து தமது மரணத்தினால் எவற்றைச் செய்யவில்லை என்று கூறுவ தோடு மட்டும் நின்று விடாமல் அவர் தமது மரணத்தினால் எவற்றை நிறைவேற்றினார் என்றும் விளக்கமாகக் கூறுவது சிறந்தது என்று எண்ணினேன்.

ஏழு வருடம் திருமறையிலும் கிடைக்கக்கூடிய மற்ற எல்லாப் புத்தகங்களிலும் இப்பொருள் பற்றிப் படித் தேன். எனவே, இப்போது இந்த என் புத்தகத்தை நீவிர் கருத்துடன் வாசிக்க வேண்டுகிறேன். இப்புத்தகத்திலுள்ள

ஏதேனும் ஒரு தனிக்கருத்திற்கு யாரேனும் மறுப்பு தெரிவிக்க விரும்பினால் அவன் தன் கற்பனை வெற்றி கொடியைப் பறக்கவிட நான் இசைவு தருகிறேன். ஆயினும், எவரேனும் கருத்துடன் இப்புத்தகத்தை ஊன்றி படித்தால் அவர்கள் தெளிவு பெறுவர் என்று நம்புகிறேன்.

இந்நூல், இவ்வுண்மைகளை அறிந்தவர்களுக்கு நிறைவையும், அறிவு நலிவுற்றோர்க்கு உறுதியையும் ஆண்டவருக்கு மகிமையையும் அளிக்கும் என நம்புகிறேன்.

நானோ அவரின் தகுதியற்ற ஊழியன்,

ஜாண் ஓவன்
*1648*

# முன்னுரை

## இந்நூல் எதைப் பற்றியது?

இயேசு கிறிஸ்துவின் மரணம் மனிதரைப் பாவத்திலிருந்து மீட்பதற்குண்டான விலைக்கிரயம் போன்றது என்று திருமறை கூறுகிறது. நல்லதுதான்; ஆனால் இங்கே ஒரு சிக்கல் இருக்கிறது. கிறிஸ்து எல்லா மனிதரையும் பாவத்திலின்று விடுவிக்க மரித்தாரா? அல்லது சிலரை மட்டும் விடுவிக்க மரித்தாரா? கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்துக்களில் வேறுபடுகின்றனர். சிலர் ஒன்றைச் சொல்லுகிறார்கள் மற்றவர்கள் வேறொன்றைச் சொல்லுகிறார்கள் (''கிறிஸ்துவின் மரணம் யாவருக்கும் உரியது'' என்னும் கருத்தை கி. பி. 350இல் பிலேஜியஸ் என்ற ஆங்கிலத் துறவி உறுதியாகப் போதித்தார். பின்பு கி.பி. 1560-இல் பிறந்த ஆர்மீனியஸ் என்ற டச்சு இறையியலார் கற்பித்தார். ''கடவுள் தேர்ந்தெடுத்த மக்களுக்காக மட்டுமே கிறிஸ்து மரித்தார்'' என்று கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் அகஸ்டினும், பின்னர் திருச்சபைச் சீர்திருத்தக் காலத்தில் லூத்தரும், ஜான் கால்வினும் மற்றும் பலரும் கற்பித்தனர்.) திருமறை என்ன கூறுகிறது? அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

கிறிஸ்து எல்லாரையும் மீட்க மரித்தார் என்ற கருத்தும் கடவுள் தெரிந்து கொண்ட மக்களுக்காக மட்டுமே கிறிஸ்து மரித்தார் என்ற கருத்தும் ஒன்றோடொன்று ஒத்துப்போகா. கிறிஸ்து யாவருக்காகவும் மரித்திருந்தால், கடவுள் சில மக்களைச் சிறப்பான ஓர் இனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமா? மாறாக, கடவுள் சில மக்களைச் சிறப்பான ஓர் இனமாகத் தேர்ந்து எடுத்திருந்தால், கிறிஸ்து யாவருக்காகவும் மரித்தார் என்பதில் பொருள் உண்டா?

கிறிஸ்துவின் மரணம் மனுக்குலத்தினர் ஒவ்வொருவருக்குமுரிய பாவப் பரிகாரம் அல்லது மீட்பின் விலைக்கிரயம் என்போமெனில்: அ. எல்லா மக்களுக்கும் அப்

பரிகாரத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது; ஆ. தள்ளி விடவோ திறன் இருக்கவேண்டும் அல்லது அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் தெரியாவிட்டாலும் எல்லா மக்களும் மெய்யாய் மீட்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முதல் கருத்தோ எல்லா மக்களும் பாவத்தில் மரித்துக் கிறிஸ்துவைக் கிட்டிச் சேரும் திறனற்றுக் கிடக்கின்றனர் என்ற திருமறை உண்மையை மறுக்கிறது. இரண்டாம் கருத்தோ சிலர் என்றுமுள்ள அழிவுக்குட்படுவர் என்ற திருமறை உண்மையை மறுக்கின்றது.

அப்படியெனில் கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்று ஏன் சிலர் சொல்லுகிறார்கள்? அதற்கு ஐந்து காரணங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது:

1. கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்று சொன்னால் அது கடவுளைச் சற்று அதிகக் 'கவர்ச்சி உள்ளவராக'க் காட்டுகிறதாம்.
2. எல்லா மக்களையும் அவர் சமமாக நேசிக்கிறார் என்று சொன்னால் அது கடவுளின் அன்பைப் 'பெரியதாகக்' காட்டுகிறதாம்.
3. எல்லா மக்களுடைய பாவங்களுக்காகவும் அவர் மரித்தார் என்று சொன்னால் அம்மரணத்தை 'விலையுயர்ந்ததாகக்' காட்டுகிறதாம்.
4. திருமறையானது 'உலகம்' அல்லது 'எல்லாரும்' என்ற சொற்களைப் பயன்படுத்தும் பகுதிகள் கிறிஸ்து ஒருவன்கூட விலக்கப்படாமல் ஒவ்வொருவருக்காகவும் மரித்தார் என்று பொருள்படுமாம்.
5. கடவுளற்ற தங்கள் வாழ்க்கையை மாற்ற விரும்பாத சிலர் கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்று சொல்லிவிட்டால் தாங்களும் அதில் சேர்ந்து நலனடையலாம் என்று நினைப்பதாகத் தெரிகிறது!

இப்புத்தகத்தில் இந்த ஐந்து காரணங்களும் தவறு என்றும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கம் பற்றித் திருமறை என்ன கற்பிக்கிறது என்றும் பார்க்கப் போகிறோம்.

# 1

முதற்பகுதி

# மரிப்பதற்காக கிறிஸ்துவை அனுப்பியதில் கடவுளின் நோக்கம்

*பிரிவு 1 — சிக்கலை அறிமுகம் செய்தல்*

*,, 2 — யார்? எவ்வாறு? எதற்காக?*

*,, 3 — தந்தை கடவுள் மீட்புக்குக் காரணம்*

*,, 4 — மைந்தராம் கடவுள், மக்களை மீட்கும் செயலாளர்.*

*,, 5 — தூய ஆவியர்ம் கடவுள் மக்களை மீட்பதற்கான செயலாளர்.*

*,, 6 — நமது மீட்பிற்கான விலைக்கிரயம் கிறிஸ்துவின் திருப்பணி*

*,, 7 — நாம் மீட்கப்பட ஒரே வழி கிறிஸ்துவின் தியாகமும், மன்றாட்டுக்களுமேயாகும்.*

*(இரண்டாம் பகுதி கிறிஸ்து தமது மரணத்தினர்ல் எவற்றை நிறைவேற்றினார் என்று விளக்கமாகக் கூறுகிறது)*

1. சிக்கலை அறிமுகம் செய்தல்

கிறிஸ்து தாமே தாம் உலகத்திற்கு வந்த நோக்கத்தை நமக்கு எடுத்துரைத்துள்ளார். 'இயேசு: காணாமற் போயிருப்பதைத் தேடுவதற்கும் அதை மீட்பதற்குமே மனுமைந்தர் வந்திருக்கிறார்' என்றார் (லூக்கா 19:10). இன்னொரு சந்தர்ப்பத்தில் மனுமைந்தர் அநேகரை மீட்கும் பொருளாகத் தம் உயிரைக் கொடுக்க வந்தார் என்றார் (மாற்கு 10:45).

**கவனம்:** *1975, 1978* புதிய மொழி பெயர்ப்பு மேற்படி மாற்கு 10:45-ஐத் திருத்தமாய் மொழிபெயர்க்கவே யில்லை. 'அநேகரை' என்ற சொல்லை 'எல்லாரையும்' என்று திரித்து மாற்றியது கண்டிக்கத்தக்க தவறு.

திருத்தூதுவர் பவுலும், கிறிஸ்து உலகத்திற்கு வந்த காரணத்தைத் தெளிவாகச் சொன்னார். 'இயேசு கிறிஸ்துவே இப்போதுள்ள பொல்லாத யுகத்தினின்று நம்மை விடுவிக்கும்படி நம்முடைய பாவங்களை நீக்கத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். (கலா 1:4) 'பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்' (1 தீமோ 1:15). 'அவர் நம்மை எல்லா அக்கிரமத்தினின்றும் விடுவித்து, நாம் தமக்குரிய சொந்த மக்களாயும், நற்செயல்களில் ஆர்வமுள்ளவர்களாயும் இருக்கும்படி நம்மை மாசறக் கழுவுவதற்காகத் தம்மைத் த்ாமே நமக்காக ஒப்புக் கொடுத்தார்' (தீத்து 2:14).

மேற்கண்ட வர்க்கியங்கள் கிறிஸ்து மரித்த நோக்கத்தை தெளிவாய்க் காட்டுகின்றன:—

மக்களைப் பாவத்தினின்று மீட்க மரித்த்ார்.

மக்களை இப்பொல்லாத உலகத்திலிருந்து விடுவிக்க மரித்தார்.

மக்களைச் சுத்திகரித்துத் தூயவராக்க மரித்தார்.

நற்பணிகள் புரியும் மக்களை உண்டாக்க மரித்தார். வேறு சில திருமறைப் பகுதிகள் இயேசு கிறிஸ்து தமது மரணத்தால் நிறைவேற்றியவற்றை விளக்குகின்றன. இவற்றுள் ஐந்து கீழ்க்காணுமாறு:—

மக்களுக்கும் கடவுளுக்கும் சமாதான நல்லுறவு உண்டாக்கப்பட்டது (ரோமர் 5:1,10).

மக்கள் மன்னிக்கப்பட்டு நீதிமான்களாக்கப்படுகின்றனர் (ரோமர் 3:24).

மக்கள் சுத்திகரிக்கப்பட்டுத் தூயவராக்கப்படுகின்றனர் (எபி. 9:14).

மக்கள் கடவுளுடைய மைந்தர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர் (கலா. 4:4,5).

மக்கள் மாட்சிமையும் என்றுமுள்ள மெய்வாழ்வும் பெறுகின்றனர் [(எபி. 9:15).

மேற்கண்ட ஆதாரங்களில் விளங்கும் திருமறைப் போதனை தெளிவாயிருக்கிறது. கிறிஸ்துவின் மரணம் மனிதருக்குத் தற்போது மன்னிப்பையும் வருங்காலத்தில் மாட்சிமையையும் அளிப்பதற்காக ஏற்பட்டது (உண்மையில் அளித்தும் வருகிறது). எனவே கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்திருந்தால் எல்லா மனிதரும் இப்போது பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மன்னிப்படைந்து இனி மாட்சிமை அடைய இருக்கிறார்கள்.

அல்லது

கிறிஸ்து தாம் கொண்டுள்ள நோக்கத்தை நிறைவேற்ற இயலாமல் தோல்வி அடைந்துள்ளார்.

முந்தியது உண்மையானதன்று என்று நாம் அறிவோம்; இதை நாள்தோறும் நாம் காணும் மக்களின் தொடர்பால் அறியலாம். இரண்டாவது, கிறிஸ்து தோல்வியுற்றார் எனக் கூறுவது கடவுளைப் பழித்துப் பேசுவதாகும்.

மேற்கண்ட இரண்டும் தவறு என்று ஒப்புக்கொண்டும் கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்று தொடர்ந்து சாதிக்கும் இறையியலாளர் சிலர் சிக்கலுக்குத் தப்புவதற்காகக் கூறுவதென்னவெனில்:— கிறிஸ்து எல்லர்ருக்காகவும் மரித்தர்ர்; ஆனால் அம்மரணத்தால் யாவரும் பயனடையவேண்டும் என்பது கடவுளின் நோக்கமல்ல என்கிறார்கள். கிறிஸ்துவைப் பற்றும் நம்பிக்கையைத் தங்கள் அகங்களில் தாங்களே வளர்த்துக்கொள்பவர்கள் மட்டுமே பயனடைவர் என்கிறார்கள். அதாவது, சிலர் தங்கள் சொந்த பக்தியினாலோ முயற்சியினாலோ விருப்பத்தாலோ விசுவாசிகளாகி இயேசு கிறிஸ்துவை நம்பி மற்றவர்களிடமிருந்து வேறுபடுகின்றனர், என்றாக வேண்டும். (விசுவாசம் கிறிஸ்துவின் மரணத்தால் நமக்கு அருளப்படுகின்ற இலவச ஈவுகளில் ஒன்றாயிருக்குமேயானால், பின்னை ஆண்டவர் யாவருக்காகவும் மரித்திருந்தால் யாவரும் உண்மையான விசுவாசிகளாவர் அல்லவா?) மேற்படி கருத்து கிறிஸ்து தமது மரணத்தால் நிறைவேற்றியவற்றை மட்டுப்படுத்துவதாகத் தெரிகிறது. ஆகவே, நான் அதை மறுக்கிறேன்; அதற்கு மர்றாக, திருமறை கற்பிக்கும் உண்மையைக் காட்ட இருக்கிறேன்.

## 2. யார்? எவ்வாறு? எதற்காக?

இப்புத்தகத்தில் மூன்று சொற்களை அடிக்கடி பயன்படுத்துவோம். அவற்றை இப்போது தொடக்கத்தில் சுருக்கமாய்ப் பார்ப்போம். ஏதாவது ஒரு வேலையைச் செய்யப்போனால்; முதலாவது, அதைச் செயல்படுத்தும் காரணர் ஒருவர் இருக்க வேண்டும் (அதைச் செய்பவன் யார்?) இரண்டாவது, அச்செயலர் மேற்கொள்ளும் வழிவகைகள் உண்டு (அது எவ்வாறு செயல்படும்?) வேலை செய்வதனால் உண்டாகும் விளைவு அல்லது பயன் ஒன்றுண்டு (எதற்காக வேலை செய்யப்படுகிறது?).

நாம் எதாவது ஒரு வேலையைச் செய்யும்போது அந்த வேலையின் பயனாக நாம் எதிர்நோக்கும் விளைவுக்

கேற்பத் தக்க வழிவகைகளைப் பயன்படுத்திக் கொள்வோம்.

எனவே நாம் செய்யும் வேலையின் நோக்கம் எதுவோ அதுவே நாம் மேற்கொள்ளும் வழிவகைகளுக்குக் காரணமாக அமைகிறது. நாம் மேற்கொள்ளும் வழிவகைகள் சரியாயிருந்தால் வேலையின் விளைவு அகப்படுவது உறுதி. எனவே மேற்கொள்ளும் வழிவகைகள் விளைவுக்குக் காரணமாக அமைகிறது எனலாம். ஆகையால் செயலர் தான் விரும்பும் நோக்கத்திற்கு ஏற்ற வழிவகைகளைச் சரியாய்ப் பயன்படுத்திக் கொண்டால், அவர் ஆற்றும் வேலை கைகூடுவது நிச்சயம்; அவ்வேலை பயனற்றுப் போகாது.

இப்போது மேற்படி விதிகளை இந்நூலின் பொருளுக்கேற்பப் பயன்படுத்திக்கொள்வோமாக.

முதலாவது நம்மை மீட்கும் நோக்கங்கொண்டு மீட்புக்கு ஆதிகாரணர் யார் என்று பார்ப்போம். பின்பு நம்மை மீட்க மேற்கொள்ளப்பட்ட வழிவகைகள் யாவை எனப் பார்ப்போம். கடைசியாக (இரண்டாம் பகுதியில்) அவ் வழி வகைகளின் விளைவு என்ன என்றும் பார்ப்போம்.

நம்மை மீட்க வேண்டும் என நோக்கங்கொண்ட ஆதி காரணர் திரியேக கடவுளாவார். வேறு துணை ஏதுக்கள் இருந்தாலும் அவை யாவும் கடவுளது கரத்தின் கருவிகள். (அப். 4:28) தூய திரியேகரே மீட்புக்கெல்லாம் தலைமையான காரணர். இவ்வுண்மையை விளக்கமாகப் பார்ப்போம்.

### 3. தந்தை கடவுள் மீட்புக்குக் காரணர்

தந்தை கடவுள் இரண்டு முறைகளில் நம் மீட்புக்குக் காரணர். 1. அவரே, தம் மைந்தரை மரிக்க அனுப்பினார்; 2. அவரே நமது பாவங்களுக்காகக் கிறிஸ்துவைத் தண்டித்தார்.

1. தந்தை கடவுள் மைந்தரை உலகத்திற்கு அனுப்பினார் என பல திருமறை வாக்கியங்களில் கண்கூடாகத் தெரிகிறது.

எடுத்துக்காட்டாக....''உரிய காலம் வந்தபோது, கடவுள் தம் மைந்தரை இவவுலகிற்கு அனுப்பினார். அவர் ஒரு பெண்ணிடம் பிறந்து, நீதிச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்ட வரானார். இதிலடங்கிய கடவுளின் நோக்கம்யா தெனில், நீதிச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை மீட்டு விடுவித்து, நம்மை ('நம்மெல்லாரையும்' என்ற 1975 புதிய மொழி பெயர்ப்பு சரி அல்ல) தம்முடைய மைந்தர்களாக்க வேண்டுமென்பதே'' (கலா. 4:4, 5). மைந்தரை இவ்வாறு அனுப்பியதில் கடவுள் ஆற்றும் மூன்று செயல்கள் அடங்கியுள்ளன :—

(அ) ஆதிமுதல் தமது திருவுளத்தில் அவர் கொண்டிருந்த நோக்கம் (I பேதுரு 1;20)

(ஆ) அவர் அனுப்பப்பட்டு நிறைவேற்ற வேண்டிய பணியைச் செய்து முடிக்க. மைந்தருக்குத் தேவையான எல்லாத் திறமைகளையும் அவர் அளித்தார். (யோவான் 3:34,35). அவர் கடவுளின் மைந்தராதலால் இறைத்தன்மையில் முழு நிறைவு பெற்றிருந்தார். ஆனால் மனுமைந்தரானபோதோ அவருக்குத் தேவையான வரங்கள் அளிக்கப்படவேண்டும்,

(இ) அவர் பணியில் வெற்றிபெற மைந்தருக்குத் தேவையான எல்லா உதவியுமளிக்க, அவருக்கு வாக்குக் கொடுத்தார் (அப். 4:10, 11).

2. தந்தை கடவுள், தமது பாவங்களினிமித்தம் இயேசுகிறிஸ்துவைத் தண்டித்தார் என்பது பல திருமறை வாக்கியங்களில் கண்கூடாக விளங்குகிறது.

எடுத்துக்காட்டாக: ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' (2 கொரி. 5:21). நமக்குப் பதிலாக கிறிஸ்து பாடுபட்டு மரித்தார் எனலாம். அவ்வாறிருக்க தங்கள் பாவங்களினிமித்தம் தாங்களே என்றென்றும் பாடுபடப்

போகிற மக்களுக்காகவும் கிறிஸ்து பாடுற்று மரித்தார் எனக் கூறுவது வியக்கத்தக்க ஒரு கருத்தன்றோ?

சிக்கலை அவிழ்க்க ஒரு முறை கீழ்க்காணுமாறு:

கிறிஸ்து எல்லா மக்களின் எல்லாப் பாவங்களுக்காகவும் மரித்தார்.

அல்லது,

கிறிஸ்து சிலருடைய எல்லாப் பாவங்களுக்காகவும் மரித்தார்.

அல்லது,

கிறிஸ்து எல்லாருடைய சில பாவங்களுக்காக மரித்தார்.

கடைசி மூன்றாவது கூற்று உண்மையானால் எல்லா மனிதருக்கும் மன்னிக்கப்படாத சில பாவங்கள் மீந்திருக்கும். எனவே ஒருவரும் மீட்கப்பட முடியாது.

முதல் கூற்று உண்மையானால், எல்லா மனிதரும் பாவத்தினின்று மீட்கப்படாத காரணமென்ன? அநேகர் மீட்பு அடையாமல் கெட்டுப்போவதற்குக் காரணமென்ன? அவர்களுடைய அவநம்பிக்கையே காரணம் என்று நீங்கள் ஒருவேளை சொல்லலாம்; ஆனால், அவநம்பிக்கை ஒரு பாவமா என்று நான் கேட்கிறேன். அது ஒரு பாவமில்லையெனில்; பின்னை, மக்கள் ஏன் பாவமல்லாத அவநம்பிக்கையினிமித்தம் தண்டிக்கப்பட வேண்டும்? அது ஒரு பாவம் என்று நீங்கள் ஒப்புக்கொண்டால், கிறிஸ்து மரிக்கக் காரணமாயிருந்த பாவங்களுள் அதுவும் ஒன்றாக இருக்க வேண்டும். எனவே முதற்கூற்றும் உண்மையாயிருக்க முடியாது.

ஆகவே, சிலருடைய, அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருடைய எல்லா பாவங்களுக்காகவும் கிறிஸ்து மரித்தார் என்னும் கருத்தே உண்மையாயிருக்கவேண்டும் என்பது

தெளிவாகிறது. இதுவே திருமறை கற்பிக்கும் கொள்கை ஆகும்.

இப்புத்தகத்தின் நான்காம் பகுதி 'உலகம்,' 'எல்லாரும்' என்ற சொற்களைக் கொண்ட திருமறைப் பகுதிகளைப்பற்றிக் கூறுகிறது.

4. மைந்தராம் கடவுள் மக்களை மீட்கும் செயலாளர்

தந்தை திட்டமிட்டதை நிறைவேற்ற மைந்தராம் கடவுள் உளமுவந்து ஒப்புக்கொண்டமையால் அவரும் நம் மீட்புக்கு ஒரு காரணராகிறார் எனக் கூறலாம். இயேசு: ''என்னை அனுப்பினவருடைய திருவுளப்படி செய்து அவருடைய வேலையை முடிப்பதே என் உணவு'' என்றார் (யோவான். 4:34). இப்படி மீட்பின் செயலராயிருக்கத் தமது சம்மதத்தைக் கிறிஸ்து மூன்று வகையாகத் தெரிவிக்கிறார் :

1. தமது இறைத்தன்மையின் மாட்சிமையை விடுத்து, ஒரு மனிதனாய்ப் பிறக்கச் சம்மதித்தார். ''பிள்ளைகள் ஊனும் இரத்தமும் உடையவர்களாயிருந்ததனால், அவ்ரும் ஊனும் இரத்தமும் உடையவராய் அவர்களைப் போலானார்'' (எபி. 2:14) இவ்வசனத்தில் மனுக்குலம் அனைத்தும் ஊனும் இரத்தமும் உடையவர்களாயிருந்ததனால் என்றல்ல, 'கடவுள் எனக்கு அளித்த பிள்ளைகள்' (எபி· 2:13) மனிதராயிருப்பதனால் அவரும் மனிதரானார் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்க. அவருடைய சம்மதம் அப்பிள்ளைகளோடு தொடர்புடையதேயன்றி மனுக்குலம் அனைத்தோடும் தொடர்பு கொண்டதல்ல.

2. தம்மைப் பலியாக்க அவர் சம்மதித்தார். அவர் அநேக பாடுகளைச் சகித்தார் என்பது உண்மை. ஆயினும் அப்பாடுகளை அவர் விருப்பத்துடன் எதிர்கொண்டு ஏற்றுக்கொண்டார் என்பதும் உண்மை. விரும்பி ஏற்றுக் கொள்ளப்படாமலிருப்பின் அப்பாடுகளில் சிறப்பு ஒன்றும் இருந்திருக்காது. எனவே, ''நான் என் உயிரைக் கொடுக்கிற

படியால் விண்ணகத் தந்தையார் என்னிடம் அன்புகொள்ளுகிறார். நான் அதை மீண்டும் பெற்றுக் கொள்ளும்படி கொடுக்கிறேன். வேறொருவன் அதை என்னிடமிருந்து பறிப்பதில்லை; நானாகவே தான் அதைக் கொடுக்கிறேன்'' (யோவான். 10:17, 18) என்று அவரால் திட்டமாகச் சொல்ல முடிந்தது.

3. தம்முடைய பிள்ளைகளுக்காக அவர் இப்போது செய்யும் வேண்டுதல்கள் அவர்களுடைய மீட்புக்கு அவர் ஒரு கா்ரணராயிருக்கச் சம்மதித்ததைக் காட்டுகிறது. கிறிஸ்து இப்போது விண்ணுலகத் தூய அகத்திற்குள் சென்றிருக்கிறார் (எபி 9:11, 12). அங்கு மன்றாட்டுகளை ஏறெடுப்பது அவரது பணியாயிருக்கிறது. ''நான் அவர்களுக்காக மன்றாடுகிறேன். உலகிற்காக அன்று; நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காக மன்றாடுகிறேன்'' (யோவான் 17:9). அவர் யாருக்காக மரித்தாரோ அவர்களுக்காகவே வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:29-34) என்பதைக் கவனிக்க. ''நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சிமையைக் காணும்படி, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்'' (யோவான் 17:24) என்று வேண்டிக் கொள்ளுகிறார். ஆகவே எல்லா மக்களையும் மீட்க அவர் யாவருக்காகவும் மரித்தார் என்று நாம் கூறுவதற்கில்லை.

**5. தூய ஆவியாம் கடவுள் மக்களை மீட்பதற்கான செயலாளர்**

தூய ஆவியானவர் நம்மை மீட்கத் தந்தையோடும் மைந்தரோடும் சேர்ந்து ஆற்றும் மூன்று செயல்களைப் பற்றித் திருமறை கூறுகிறது. அவரும் நம் மீட்பின் ஒரு செயலர் என்பதை இம் மூன்றும் காட்டுகின்றன.

1. திருமைந்தர் மனுவானபோது பெற்றுக்கொண்ட ஊனுடல் தூய ஆவியால் மரியாளிடம் உண்டாக்கப்பட்டது. மரியாள் கருவுற்றது தூய ஆவியின் செயல் (மத். 1:18).

2. மைந்தர் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தபோது, அவர் தூய ஆவியால் அப்படிச் செய்ததாகத் திருமறை கூறுகிறது. ''அவர் என்றுமுள்ள தெய்வ ஆவியால் தம்மைத்தாமே மாசற்ற பலியாகக் கடவுளுக்குப் படைத்தார்'' (எபி.9:14). ஆகவே, மைந்தர் தம்மை பலியாய் ஒப்புக்கொடுத்தபோது தூய ஆவியானவர் ஏதோ ஒரு வழியில் உதவி செய்ததாகத் தெரிகிறது.

3. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியது தூய ஆவியானவரின் செயல் எனத் தெளிவாகக் காட்டும் சில வேதப் பகுதிகள் உண்டு. ''இறந்தோரிடமிருந்து இயேசுவை உயிரோடெழுப்பினவரின் ஆவி...தமது ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர் பெறச் செய்வார்'' (ரோமர் 8:11). ரோமர் 1:4; எபே. 1:7-20; 1 தீமோ. 3:16; I பேதுரு 3:18 ஐயும் பார்க்க.

எனவே, தந்தையோடும் மைந்தரோடும் சேர்ந்து தூய ஆவியானவரும் நம்மை மீட்கும் பணியில் சிறப்பான பங்கு கொண்டார் என்பது கண்கூடு,

திரித்துவத்தில் அடங்கிய ஒவ்வொருவரும் நம்மை மீட்கும் பணியில் கலந்து கொள்ளும் செயலர்கள் என்று நாம் கற்றறிந்துள்ளோம். ஆனால் தலையாய ஒரு காரியத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆய்வினிமித்தம் நாம் தனித்தனியே ஒவ்வொருவரின் செயல்களைப் பகுத்து காட்டியிருப்பினும், உண்மையில் அவர்கள் நமது மீட்புக்குக் காரணராயிருக்கும் மூன்று செயலர்கள் அல்ல; மாறாக, அவர்கள் ஒரே செயலராகவே உள்ளனர். ஏனெனில், கடவுள் ஒருவரே. எனவே திரியேகரானவரே நமது மீட்பின் செயலர்.

## 6. மீட்பின் விலைக்கிரயம் கிறிஸ்துவின் திருப்பணி

இரண்டாம் பிரிவில் நாம் பார்த்ததுபோல, ஒரு வேலையின் செயலர்தான் எதிர்நோக்கும் விளைவுக்கேற்பத் தக்க வகைகளைப் பயன்படுத்துவார். குறிப்பாக, மக்களை

மீட்கும் பணியில் கிறிஸ்து மேற்கொண்டு ஆற்றும் இரண்டு செயல்கள் உண்டு (இவ்விடத்தில், மீட்கும் பணியாற்றக் கடவுள் அனாதியாய் வகுத்த திட்டத்தையன்று, வரலாற்றுக் காலத்தில் மைந்தர் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற பயன்படுத்தி வருகிற மீட்பின் செயல்களைக் குறித்து எழுதுகிறேன்). கிறிஸ்து ஆற்றும் அந்த இரண்டு வரலாற்றுச் செயல்கள்:

1. இறந்த காலத்தில் கிறிஸ்து தம்மை தாமே பலியாய்ப் படைத்தார்.

2. நிகழ்காலத்தில் அவர் நமக்காக மன்றாட்டு செய்து வருகிறார்.

கிறிஸ்து தம்மைத் தாம் படைத்ததில் அடங்கியுள்ளவை கீழ்க்காணுமாறு:

மரிப்பதற்கு உலகிற்கு வருவதற்கான இடர் அனைத்தையும் ஏற்க விருப்புடன் அவர் ஒப்புக்கொண்டார்.

> அவர் தமக்குரிய மாட்சிமையைத் துறந்து ஒரு பெண்ணிடம் பிறந்தார். வாழ்நாள் முழுவதும் தாழ்மையுடன் தந்தையின் சித்தத்திற்குக் கீழ் அடங்கினார். கடைசியாகச் சிலுவையில் மரித்தார்.

நமக்காக கிறிஸ்து ஆற்றும் மன்றாட்டுப் பணியில் அவரது உயிர்த்தெழுதலும் பரமேறுதலும் சேர்ந்தவையாகும். ஏனெனில் இவ்விரண்டும் அவருடைய மன்றாட்டுப் பணிக்கு அடிப்படையாகும். அவர் உயிர்த்தெழுந்து விண்ணகம் செல்லாதிருந்தால் இந்த மன்றாட்டுப் பணியை அவரால் ஆற்ற இயலாது.

அடுத்த பிரிவில் இந்த இரண்டு செயல்களையும் பற்றி விளக்கமாகப் பார்ப்போம். ஆனால் இப்பிரிவின் இறுதியில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியமுண்டு. இவ்விரு செயல்களும் ஒரே நோக்கம் கொண்டவை. பலியும் வேண்டுதலும் புதல்வர் பலரைத் தமது மாட்சிமை நிலைக்

குள் கொண்டுவந்து சேர்க்கும்படி ஏறெடுக்கப்பட்டன (எபி. 2:10). இந்த இரு செயல்களின் பலனும் குறிப்பிட்ட ஒரே மக்கள் கூட்டத்திற்காகவே ஏற்பட்டவையாகும். யாருக்காக மரித்தாரோ அதே மக்களுக்காகவே வேண்டுதல் செய்கிறார் (யோவான் 17:9). அவருடைய மன்றாட்டு கள் வெற்றிபெறும் என்று நன்கறிவோம்; ஏனெனில் அவர் தாமே ''நீர் எப்போதும் எனக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும்'' (யோவான் 11:41) என்றார். எனவே யாருக்காக அவர் மரித்தாரோ அவர்கள் எல்லாரும் அம்மரணத்தினால் விளையும் எல்லா நற்பயன் களையும் பெறுவர் என்பது உறுதி. ஆகவே, கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்ற போதனை முழுவதும் தவறு என்று தெரிகிறது.

7. நாம் மீட்கப்பட ஒரே வழி கிறிஸ்துவின் தியாகமும் மன்றாட்டுகளுமேயாகும்.

கிறிஸ்து தம்மையே பலியாய்ப் படைத்ததும் பரத்தில் அவர் செய்யும் மன்றாட்டுகளும் ஒன்றோடொன்று இணை பிரியா தொடர்பு கொண்டவை என்கிற திருமறை கூற்றை கவனிக்க:

கிறிஸ்து யாருடைய அக்கிரமங்களைச் (பாவங்களைச்) சுமந்து கொண்டாரோ அவர்களை (''அநேகரை'') நீதிமான்களாக்குவார் (ஏசாயா 53).

கிறிஸ்து யாருடைய பாவங்களை (''அநேகருடைய) சுமந்தாரோ அவர்களுக்காக மன்றாடுகிறார் (ஏசாயா 53:12).

கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களை நீதிமான் களாக்க மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் (ரோமர் 4:25).

கடவுள் தேர்ந்து எடுத்தவர்களுக்காக கிறிஸ்து மரித் தார்; இப்போது அவர்களுக்காக வேண்டுகிறார் (ரோமர் 8:33, 34).

மேற்சொல்லிய வாக்கியங்களைக் கொண்டு கிறிஸ்து எல்லாருக்காகவும் மரிக்காமல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெரிய மக்கள்கூட்டத்தை மீட்க மரித்தார் என்று நாம் திட்டமாகவும் தெளிவாகவும் அறியலாம். அவர் எல்லாருக்காகவும் பொதுவாக மரித்திருந்தால், பின்னை எல்லா மனிதரும் நீதிமான்களாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு இல்லை என்பது கண்கூடு.

பலி செலுத்துவதும் வேண்டிக்கொள்வதும் ஓர் ஆசாரியன் ஆற்ற வேண்டிய தலையாய திருப்பணிகள். இவ்விரண்டு பணிகளில் ஏதாவது ஒன்றில் தவறினால் அவன் மக்களின் உத்தம ஆசாரியனாயிருக்க முடியாது. இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி நம்முடைய பாவங்களைப் போக்கும் பரிகாரப்பலி [பு. தி.]. அதுவுமின்றி அவர் நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயும் இருக்கிறார் (1யோவான் 2:1,2). நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி அவர் ஒரே ஒரு முறை எல்லாக் காலத்திற்குமென தம் சொந்த இரத்தத்தைப் படைத்தார் (எபி.9:11,14); தவிர, ''....... முற்றும் மீட்க வல்லவராயிருக்கிறார்; அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே உயிரோடிருக்கிறார்'' (எபி. 7:25). அவர் ஓர் உத்தம ஆசாரியரானதால் இந்தஇரண்டு திருப்பணிகளையும் அவர் சரிவரச் செய்து முடிக்க வேண்டும். அவருடைய விண்ணப்பங்கள் எப்போதும் கேட்கப்படுவதால் அவர் யாருக்காக மன்றாட்டு செய்கிறாரோ அவர்கள் முற்றும் மீட்கப்படுவது உறுதி. ஆனால் மீட்கப்படாத மக்களும் உண்டென வேதம் கூறுகிறது. ஆகவே, அவர் எல்லா மக்களுக்காகவும் மன்றாட்டு செய்யாமல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காகக் குறிப்பாக வேண்டினார்; அவர்களையே மீட்கும்படி மரித்தார்.

கிறிஸ்து நமக்காக எவ்வாறு மன்றாடுகிறார்? அவர் தமது இரத்தத்தைப் படைத்து வேண்டுகிறார் என்று திருமறை கூறுகிறது (எபி. 9:11,12,24). வேறு வகையாகச்

சொன்னால் அவர் தமது பாடுகளைத் தந்தைக்குப் படைத்து வேண்டுகிறார் என்றும் சொல்லலாம். எனவே, அவர் பட்டபாடுகளும், செய்யும் மன்றாட்டுகளுமாகிய இவ்விரு செயல்களும் ஒரே மக்கள் கூட்டத்திற்காகவே செய்யப்படுகின்றன. அவ்வாறில்லாவிட்டால் இயேசு தம் மரணப்பாடுகளைத் தம் மன்றாட்டுக்கு ஆதாரமாகப் படைப்பது விருதாவாயிருக்கும்.

கிறிஸ்துவானவர் தாமே தமது மரணத்தையும் தமது மன்றாட்டுகளையும் நமது மீட்பின் ஒரே வழியாகத் தமது விண்ணப்பத்தில் (யோவான் 17-ஆம் அதிகாரத்தில்) இணைத்திருக்கிறார். இந்த வேண்டுதலில் தம்மையே மரணத்தில் ஒப்புக் கொடுப்பதையும் தந்தை தமக்கு அளித்த தம்முடையவர்களுக்காக தாம் மன்றாடுவதையும் குறிப்பிடுகிறார். கிறிஸ்து தாமே இவ்விரு செயல்களையும் இணைத்திருக்கும்போது நாம் அவற்றைப் பிரிக்க முடியாது. ஒன்றில்லாமல் மற்றொன்று பயனற்றதாக இருக்கும். ''கிறிஸ்து எழுந்திராவிட்டால்'' (எனவே அவர் இப்போது வேண்டுதல் செய்யாமலிருந்தால்) உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள் (1 கொரி. 15:17).

எனவே கிறிஸ்துவின் மரணத்தையும் அவரது மன்றாட்டுகளையும் வெவ்வேறாய்ப் பிரித்தால் நமது மீட்பை உறுதிபடுத்தக்கூடியது ஒன்றுமில்லை. கிறிஸ்து எனக்காக இப்போது வேண்டுதல் செய்யாதிருந்தால், எனக்காக அவர் முன்பு மரித்தார் எனக் கூறுவதில் பயன் என்ன? அவர் இப்பொழுது நம்மை நீதிமான்கள் என்று தீர்ப்பு செய்தால் தான் நாம் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் விடுதலை அடையலாம். கிறிஸ்து எனக்காக வேண்டுதல் செய்து பரிந்து பேசாதிருப்பாரேயானால் நான் இன்னும் ஆக்கினைக்குட்பட்ட குற்றவாளியாவேன். எனவே அவர் யாருக்காக மரித்தாரோ அவர்களுக்காகவே அவர் மன்றாடுகிறார் என்பது தெளிவாகும். ஆகவே அவர் எல்லாருக்காகவும் மரிக்காமல் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களையே மீட்க மரித்தார் என்று நாம் முடிவு செய்து கொள்ளுகிறோம்.

# 2

### இரண்டாம் பகுதி

# கிறிஸ்துவின் மரணத்தின் உண்மையான நோக்கம்; அவர் நிறைவேற்றியவை

பிரிவு 1 — சில பொருள் வரையறைகள்

,, 2 — கிறிஸ்துவின் மரணம்-யாருடைய நன்மைக்காக?

,, 3 — கிறிஸ்துவின் மரணம்-அதன் நோக்கம் என்ன?

,, 4 — கிறிஸ்துவின் மரணத்தினால் விளையும் மீட்பு எல்லாருக்கும் ஒருவேளை கிடைக்கக்கூடிய ஒரு நன்மையா, அல்லது, குறிக்கப்பட்டவர்களுக்கு அந்த நன்மை அருளப்படுவது நிச்சயமான உறுதியா?

,, 5 — கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் எல்லாரும் த்வறாமல் மீட்கப்படுவர் என்ற உண்மைக்கு ஆதாரமான சில நியாயங்கள்.

## 1. சில பொருள் வரையறைகள்

ஒரு செயலை ஆற்றும் முறைகளே அச்செயலின் பயனை விளைவிக்கின்றன என்று முதற்பகுதியின் இரண்டாம் பிரிவில் அறியலானோம். நாம் விரும்பும் விளைவு உறுதியாய் கைகூட நாம் சரியான முறைகளைக் கையாள வேண்டும். செயலர் தான் விரும்பும் நோக்கத்திற்கு ஏற்பத் தக்க வழிவகைகளைச் சரியாய்ப் பயன்படுத்திக்கொண்டால் அவர் ஆற்றும் வேலை கைகூடுவது உறுதி. அவ்வேலை பயனற்றுப்போகாது. கடவுள் (தந்தை, மைந்தர், தூய ஆவி) மக்களை விடுதலையாக்கச் சித்தங்கொண்டார் எனத் திருமறை கூறுகிறது, அந்த நோக்கத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட வழி கிறிஸ்துவின் திருப்பணியாகும். கடவுள் எப்போதும் தக்க வழிவகைகளைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு வருவதால் எத்தனை பேர் உண்மையாய் மீட்கப்படுகிறார்களோ அத்தனை பேர் மட்டும் மீட்கப்பட முன்பு கடவுளால் குறிக்கப்பட்டவர்கள் என்று நாம் முடிவுசெய்ய வேண்டும். இல்லையெனில் கடவுள் தாம் கொண்ட நோக்கத்தை நிறைவேற்ற இயலாமல் தவறியிருப்பார்.

கிறிஸ்து பட்ட பாடுகளின் நோக்கங்கள் இரண்டு. தலையாய நோக்கம் கடவுளை மேன்மைப்படுத்துவதாகும். தாம் ஆற்றும் எல்லாச் செயல்களிலும் கடவுள் முதலாவது தம்முடைய சொந்த மேன்மையை வெளிப்படுத்த விரும்புகிறார். கடவுளுக்கு என்றென்றும் மேன்மை அளிப்பதற்காகவே அனைத்தும் இயங்குகின்றன (எபே, 1 : 12: பிலி. 2 : 11; ரோமர். 11 : 36).

ஆனால் கிறிஸ்து பட்ட பாடுகளின் இரண்டாவது நோக்கம் என்னவென்றால் மக்களைப் பாவத்தினின்று மீட்டு கடவுளிடம் சேர்ப்பதுதான் எனவே, இந்த மீட்பைப் பெற்று மகிழத் தேவையான எல்லாவற்றை

யும் கிறிஸ்துவின் மரணம், எவர் நிமித்தம் அவர் மரித்தாரோ அவர்களனைவருக்காகவும் தவறாது வாங்கிச் சம்பாதித்திருப்பதைக் காட்ட விரும்புகிறேன்.

2. கிறிஸ்துவின் மரணம் யாருடைய நன்மைக்காக?

கிறிஸ்துவின் மரணத்தினால் யார் பயனடைகின்றனர் என்பது பற்றி நாம் தெளிவாக தெரிந்து கொண்டிருப்பது அவசியமாகும்.

1. பயன் பெறுபவர் தந்தையாகிய கடவுளா?

அல்லது,

2. பயன் பெறுபவர் கிறிஸ்துவா?

அல்லது,

3. பயன் பெறுபவர் நாமா?

இந்தப் பகுதியில் கிறிஸ்து பாடுபட்ட இரண்டாவது நோக்கத்தைப்பற்றி நான் எழுதிக்கொண்டிருப்பதை நினைவிற்கொள்க. இந்த இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றுவதில் கடவுள் ஏதோ பயனடைய வேண்டும் என்ற கருத்து கிடையாது.

சிலர் தவறாக, கூறும் கருத்து பின்வருமாறு:

கிறிஸ்துவின் மரணம் யாரையும் குறிப்பாக மீட்க வல்லதன்று, ஆனால் கடவுள் யாரையும் மன்னிக்கக் கூடாதபடி இடையிலிருக்கும் சில தடைகளை அகற்றுவதற்காக கிறிஸ்து மரித்தாராம். இப்பொழுது தந்தை விருப்பப்பட்டால் மக்களை மீட்கலாம் அல்லது மீட்டு இரட்சிக்காமலிருக்கலாம். ஆகவே, கிறிஸ்து தந்தையின் சில கட்டுகளை அவிழ்ப்பதற்காக மரித்தாராம். அதாவது, இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றுவதில் கடவுள் ஏதோ பயனடைவதற்காகக் கிறிஸ்து மரித்தாராம். ஆனால், இந்தத் தவறான கருத்துக்கு மாறாக, காணாமற் போயிருப்பதை

மீட்பதற்காக மனுமைந்தர் வந்ததாகத் திருமறை கூறு கிறது.

அடுத்ததாக, மேற்படி இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றுவதில் கிறிஸ்து தமக்கே ஏதோ ஒரு நலனை விளைவித்து கொண்டார் என்ற இன்னொரு கருத்து தவறானது என்பதைக் காட்ட விரும்புகிறேன்.

1. கிறிஸ்து கடவுளாதலால், அவர் பெறக் கூடிய எல்லா மேன்மையையும் ஆற்றலையும் ஏற்கெனவே பெற்றிருந்தார். ஆதலால் தமது மண்ணுலக வாழ்வின் முடிவில், முன்பு தாம் பெற்றிருந்த மேன்மையைத் தவிர வேறொன்றையும் அவர் கேட்கவில்லை (யோவான் 17:5). புதிய ஒரு நன்மையைத் தமக்கெனப் பெற்றுக்கொள்ள அவர் மரிக்க வேண்டிய தேவை இல்லாதிருந்தது.

2. எல்லாருக்கும் தீர்ப்பளிக்கும் உரிமையைப் பெறு வதற்காக கிறிஸ்து மரித்தார் எனச் சிலர் கூறுவர். ஆனால் சிலரைக் குற்றவாளிகளாய்த் தீர்ப்பது அவருடைய பாடு களின் நோக்கங்களுள் ஒன்றாயிருந்தால் அவர் அவர்களை மீட்க மரித்தார் என்று கூறுவது பொருளற்றதாகும். எனவே அவர் நியாயந்தீர்க்கும் உரிமையைப் பெறுவதற் காக மரித்தார் என்ற கருத்தை நாம் ஒப்புக்கொண்டால் கூட, மக்கள் யாவரையும் மீட்கக் கிறிஸ்து மரித்தார் என்ற எண்ணத்தை நிரூபித்துக் காட்ட நாம் அதைப் பயன் படுத்திக்கொள்ள முடியாது.

எனவே கிறிஸ்துவின் மரணம் நமக்கே பயன் விளை விக்கும் நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வருகிறோம். கடவுள் விரும்பினால் அவர் நம்மை மீட்கலாம் அல்லது இரட்சிக்காமலிருக்கலாம் என்ற உரிமையை ஈட்டுவதற்காக அது ஏற்பட்டதன்று. அது கிறிஸ்துவிற்கு ஏதோ சில புதிய நன்மைகளை அளிப்பதற் காக ஏற்பட்டதுமன்று. மாறாக தந்தை வாக்குக்கொடுத்த நன்மைகள் யாவற்றையும் எவர் நிமித்தம் கிறிஸ்து

மரித்தாரோ அவர்கள் அனைவரும் பெற்றுப் பயனடையவே அது ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே, அந்நன்மைகளை உண்மையாய்ப் பெறுகின்ற மக்கள் நிமித்தமாகவே அவர் மரித்தார், அந்நன்மைகளைப்பற்றித் திருமறை கூறுவதென்ன என்பதை ஆராய்ந்தறிய நாம் தொடர்ந்து படிப்போம்.

## 3. கிறிஸ்துவின் மரணம்—அதன் நோக்கம் என்ன ?

கிறிஸ்து மரித்த நோக்கத்தைப்பற்றித் திருமறை கூறுவதென்ன என்பதைப்பற்றி முன்பே சுருக்கமாக எழுதியுள்ளோம் (பகுதி 1, பிரிவு 1). இப்பொருள்பற்றிப் பொதுவாகப் படித்தோம்; இப்பொழுதோ குறிப்பாகவும் சற்று ஆழமாயும் ஆராய்ச்சி செய்வோம். கிறிஸ்து தம் மரணத்தால் நிறைவேற்ற வேண்டியவைகளைக் குறிக்கும் திருமறை வாக்கியங்களை விளக்கமாக ஆராயவேண்டும். இவ்வுண்மையைப் போதிக்கும் வேத வசனங்கள் மூவகைப்படும்.

முதலாவது, கிறிஸ்துவின் மரணத்தால் கடவுள் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டதைக் குறித்துக் காட்டும் சில திருமறை வாக்கியங்கள் உள்ளன. அவற்றுள் எட்டு வாக்கியங்களை நாம் ஆராயும்படி தேர்ந்தெடுத்திருக்கிறேன். மற்றும் பல வாக்கியங்களையும் பயன்படுத்தலாம்.

1. காணாமற்போயிருப்பதைத் தேடுவதற்கும் அதை மீட்பதற்குமே மனுமைந்தர் வந்திருக்கிறார். எனவே, கிறிஸ்துவின் மரணத்தால் கடவுள் காணாமற்போன பாவிகளை உண்மையில் மீட்கத் தீர்மானித்தார் என்பது காண்கூடு (லூக்கா 19:10).

2. அவருக்கு இயேசு என்று பெயரிடுவர். ஏனெனில் அவரே தம்முடைய மக்களை அவர்களுடைய பாவங்களினின்று மீட்பார் (மத். 1:21). எனவே, பாவிகளை உண்மையில் மீட்பதற்கு என்னென்ன தேவையோ அவை

அனைத்தும் இயேசு கிறிஸ்துவால் செய்யப்பட வேண்டியிருந்தது.

3. ''பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்'' (1 தீமோ. 1:15). பாவிகள் ஒருவேளை மீட்கப்படலாம் அல்லது ஒருவேளை மீட்படையாமலிருக்கலாம் என்று நினைப்பதற்கு இடமேயில்லை. அவர்களை உண்மையில் மீட்கவே கிறிஸ்து இயேசு வந்தார் என்று இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது.

4. ''மரணத்திற்குள்ளாக்க வல்ல பிசாசானவனைத் தமது மரணத்தினால் அழிக்கும் பொருட்டும் மரணத்தைப் பற்றிய அச்சத்தினால் வாழ்நாள் முழுதும் அடிமைத்தனத்திற்கு உட்பட்டிருப்பவர்கள் யாவரையும் விடுதலை செய்யும் பொருட்டும் அப்படியானார்'' (எபி. 2:14,15). கிறிஸ்து பாவிகளை உண்மையில் விடுதலை செய்யவே வந்தார்.

5. ''கிறிஸ்து...திருச்சபை... பரிசுத்தப்படுத்திக் கடவுளுக்கு உரிதாக்குவதற்கென தம்மையே அத்திருச்சபைக்காக ஒப்புக்கொடுத்தார். ஏனெனில், அதை... தூய்மையும் மாசற்றதுமான மாட்சிமை பொருந்திய திருச்சபையாகத் தம் முன்னிலையில் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்பது அவரது திருவுளம்'' (எபே. 5:25-27).

இப்பகுதியில் தூய ஆவியானவர் தெளிவாய்க் கூறியிருப்பதைவிட இன்னும் தெளிவாக இவ்வுண்மையைக் கூறுவதற்கில்லை என்று நான் நினைக்கிறேன். திருச்சபையைச் சுத்திகரித்துப் பரிசுத்தப்படுத்தி மேன்மைப்படுத்தவே கிறிஸ்து மரித்தார்.

6. ''அவர்களும் மெய்யாகவே உமக்கு உரியவர்களாயிருக்கும்படி அவர்களுக்காக நான் என்னையே உமக்கு உரியவனாக்குகிறேன்'' (யோவான் 17:19). தமது

மரணத்தின் நோக்கம் இன்னதென்று மீட்பர் தாமே கூறுவதை நாம் கேட்டுக் கவனித்தே ஆகவேண்டும். (சிலர் உலக முழுமையும் அல்ல; ஏனெனில் அதற்காக அவர் மன்றாடவில்லை என்று கூறுகின்றனர்— வசனம் 9ஐப் பார்க்க) உண்மையாகச் சுத்திகரிக்கப்பட்டுப் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்ற நோக்கங்கொண்டு மரித்தார்.

7. "...நம்மை விடுவிக்கும்படி, நம்முடைய பாவங்களை நீக்கத் தம்மையே ஒப்புக்கொடுத்தார்" (கலா. 1:4). மீண்டும் இங்கே நம்மை உண்மையாய் விடுவிப்பதே கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

8. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவமறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரி. 5:21).

எனவே, பாவிகளை நீதிமான்களாக்குவதற்காக கிறிஸ்து வந்தார் என்று நாம் கற்றறிகிறோம்;

கிறிஸ்து எவர் நிமித்தம் மரித்தாரோ, அவர்களையே மீட்டு விடுவித்துப் பரிசுத்தப்படுத்தி நீதிமான்களாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு மரித்ததாக மேற்படி வேத வாக்கியங்கள் தெளிவாய்க் கற்பிக்கின்றன; எல்லா மனிதரும் அவ்வாறு மீட்கப்பட்டு, விடுவிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு நீதிமான்களாக்கப்படுவது உண்டா? இல்லையெனில் கிறிஸ்து தாம் கொண்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் தவறிவிட்டாரா? இல்லை! அவர் எல்லாம் வல்ல ஆண்டவர் அல்லவா? அப்படியானால் கிறிஸ்து பொதுவாக எல்லாருக்காகவும் மரித்தாரா அல்லது உண்மையிலேயே மீட்கப்பட்டு நீதிமான்களாக்கப்படுகிற மக்களுக்காக மட்டுமே மரித்தாரா என்று நிதானித்துப் பாருங்கள்!

இரண்டாவதாக, கிறிஸ்து மரித்த நோக்கத்தை மட்டுமல்ல, அவரது மரணத்தினால் நிறைவேற்றப்

பட்டனதயும் கூறும் சில திருமறை வாக்கியங்கள் உண்டு. இங்கு ஆறு வசனங்களை நான் குறிப்பிடுகிறேன்:

1. அவரது சொந்த இரத்தமே. நமக்கு என்றுமுள்ள மீட்புக் கிடைக்கும்படி செய்தார்... அவரது இரத்தம் நம்முடைய பயனற்ற செயல்களால் வரும் குற்ற உணர்ச்சியை நம் மனச்சான்றினின்று நீக்கும் (எபே. 9:1 ,14). இங்கு கிறிஸ்துவின் மரணத்தால் விளைந்த இரண்டு பயன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை என்றுமுள்ள மீட்பு, சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சி, எவரெல்லாம் இவற்றைப்பெற்று அனுபவிக்கிறார்களோ அவர்களுக்காக மட்டும் கிறிஸ்து மரித்தார்.

2. பாவக் குறையை நீக்கும் வேலையைச் செய்து முடித்தபின் அவர் விண்ணுலகத்தில் மேன்மைமிக்க கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்தார் (எபி. 1:3).

எனவே, கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களுக்கென ஆன்மீக சுத்திகரிப்பு சம்பாதிக்கப்பட்டாயிற்று.

3, அவர் சிலுவைமீது தாமே தம் உடலில் நம்முடைய பாவங்களைச் சுமந்து போக்கினார் (1 பேதுரு. 2:24). கிறிஸ்து என்ன செய்தார் என்பதை விளக்கும் ஒரு வாசகம் இது.

4. உங்களையும்... இப்பொழுது ஒப்புரவாக்கினார் (கொலோ. 1:21,22):

இப்போதோ திருமைந்தர் தன் ஊன் உடலில் அடைந்த மரணத்தின்மூலம் கடவுளுக்கும் உங்களுக்கும் நல்லுறவை உண்டாக்கியுள்ளார்.

எனவே கிறிஸ்து யாருக்காக மரித்தர்ரோ அவர்களுக்கும் தந்தை கடவுளுக்கும் இடையே உண்மையில் ஓர் உறவு நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. உமது இரத்தத்தை விலையாகக் கொடுத்து, எல்லாக் கோத்திரத்தார், மொழியினர், இனத்தவர் நாட்டினரிடையேயிருந்தும் மனிதரைக் கடவுளுக்கென்று வாங்கிக் கொண்டீர். அவர்களை நம் கடவுளுக்குரிய அரச குலமாகவும் ஆசாரியத் திருக்கூட்டமாகவும் ஆக்கினீர். மேற்படி கூற்று எல்லா மனிதருக்கும் பொருந்தும் என்று சொல்வதற்கு வழியில்லை. கிறிஸ்து எவர்நிமித்தம் மரித்தாரோ அவர்களுக்கே பொருத்தமாயிருக்கிறது. (வெளி. 5:9, 10).

6. நான் அவற்றிற்கு (என் ஆடுகளுக்கு) என்றுமுள்ள மெய்வாழ்வைக் கொடுக்கிறேன் (யோவான் 10:28). இப்பகுதியில் கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை ஆடுகளுக்கு ஒப்பாக்குகிறார். ஆகவே, "நான் அவர்களுக்கு" என்ற உயர்திணை சுட்டுவினாப் பெயரைப் படிக்கலாம், தம்முடைய ஆடுகளாகக் கருதப்படுகிற மக்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டிருப்பதாகக் கிறிஸ்து தாமே விளக்குகிறார் (வ. 27ஐப் பார்க்கவும்). மெய் நம்பிக்கை கொண்டோர் (விசுவாசிகள்) துய்க்கும் ஆன்மீக வாழ்வு கிறிஸ்துவின் மரணத்தால் அவர்களுக்காக வாங்கிச் சம்பாதிக்கப்பட்டது.

(இந்த ஆறு வாக்கியங்களைவிட அநேக வசனங்களையும் காட்டக்கூடும்) மொத்த கருத்து கீழ்க்காணுமாறு— கிறிஸ்துவின் மரணம் உண்மையில் மீட்பு, சுத்திகரிப்பு, தூய்மையாக்குதல் பாவங்களைச் சுமந்து தீர்த்தல், ஒப்புரவாக்குதல், என்றுமுள்ள மெய்வாழ்வு, விண்ணுலக குடியுரிமை இவைகளையெல்லாம் ஈட்டும் விலைக்கிரயம். ஆகவே, இந்த ஆன்மீக நற்பேறுகளை அடைந்து அனுபவித்து வருகிறவர்களுக்காக மட்டும் அவர் மரித்திருக்க வேண்டும். எல்லா மக்களுக்கும் மேற்சொல்லிய நற்பேறுகள் அளிக்கப்படுகின்றன என்று எண்ணுவதற்கு வழியே இல்லை. ஆகவே எல்லா மக்களையும் மீட்டு இரட்சிப்பது கிறிஸ்து மரித்த நோக்கமாயில்லை என்பது கண்கூடு.

மூன்றாவதாக, கிறிஸ்து எவர் நிமித்தம் மரித்தாரோ அவர்களை விளக்கிக் காட்டுகிற திருமறை வாக்கியங்கள் உண்டு; சில வசனங்களில் அவர்கள் 'அநேகர்' என்றழைக்கப்படுகின்றனர். உதாரணமாக ஏசாயா 53:11; மாற்கு 10:45; எபி. 2:10 (1975, 1978 புதிய மொழிபெயர்ப்பில் மாற்கு 10:45 'அநேகர்' என்ற பதம் வாசிக்கப்பட வேண்டிய வேறு சில இடங்களில் வாங்கியங்களின் மொழி பெயர்ப்பு சரியாயில்லை; கண்டனம் பண்ணப்படத்தக்கது). இந்த ''அநேகர்'' எப்படிக் குறிப்பிடப்படுகின்றனர்? கீழ்க் காணும் வசனங்களைப் பார்க்கவும் :

கிறிஸ்துவின் ஆடுகள் —யோவான் 10:15

கடவுளின் பிள்ளைகள் —யோவான் 11:52

கடவுள் தம் மைந்தருக்களித்த பிள்ளைகள். யோவான் 17:11; எபி. 2:13

கடவுள் தெரிந்து கொண்டவர்கள். ரோமர் 8:33

கடவுள் முன்பே அறிந்த மக்கள். ரோமர் 11:2.

கடவுள் சம்பாதித்துக் கொண்ட அவருடைய திருச்சபை. அப். 20:28

எவர்களுடைய பாவங்களைக் கிறிஸ்து சுமந்து. எபி. 9:28 தீர்த்தாரோ அந்த 'அநேகர்'.

(மேற்படி வசனங்களின் புதிய மொழி பெயர்ப்பு பற்றியஎச்சரிப்பைக் கவனிக்கவும்)

இந்த விளக்கவுரைகள் எல்லா மனிதருக்கும் பொருத்தமாயில்லை என்பது நிஙசயம். ஆகவே கிறிஸ்துவின் மரணம் எல்லா மக்களையும் மீட்டு இரட்சிக்கும் நோக்கங்கொண்டதன்று என்று நாம் திருமறையின்மூலம் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

4. கிறிஸ்துவின் மரணத்தால் விளையும் மீட்பு எல்லாருக்கும் ஒருவேளை கிடைக்கக்கூடிய ஒரு நன்மையா அல்லது குறிக்கப்பட்டவர்களுக்கு அந்த நன்மை அருளப்படுவது நிச்சயமான உறுதியா?

கிறிஸ்து தம் மரணத்தால் நிறைவேற்றிய மீட்பு எல்லாருக்கும் போதும். ஆனால் விசுவாசிகளுக்கு மட்டும பலிக்கிறது எனக் கூறுவார் உண்டு. அந்த மரணம் யாரையும், மீட்க வல்லது; ஆனால் அது உண்மையில் சிலரை மட்டும் மீட்கும் என்பது சிலருடைய கருத்து.

ஓர் அடிமையை மீட்க விலைக்கிரயத்தைச் செலுத்துவது வேறு. உண்மையாய் அவ்வடிமையை விடுதலையாக்குவது வேறு என்று நான் ஒப்புக்கொள்கிறேன். கிறிஸ்து இரட்சிப்பை விலைக்கிரயம் செலுத்தி பெறுவது, அந்த இரட்சிப்பை மக்களுக்கு அளிப்பது, இரண்டும் ஒன்றல்ல; ஆனால் கீழ்க்காணும் கருத்துக்களைக் கவனிக்க :

1. கிறிஸ்து நமக்காக மீட்பின் கிரயத்தை கொடுப்பதும் பின்னர் நம்மை இரட்சித்து விடுதலையாக்குவதும், இரண்டும் வெவ்வேறான செயல்கள் என்று ஒப்புக்கொண்டாலும் இவ்விரு செயல்களும் இருவேறு மக்கள் கூட்டத்தினருக்கு உரியது என வர்திடமுடியாது, அதாவது முதற் செயல் முழு மனுக்குலத்தையும் சார்ந்தது, பிந்திய செயல் விசுவாசிக்கிற கூட்டத்தினருக்குரியது. கிறிஸ்து மரித்த நோக்கம் ஒன்றே; அது இருவகைப்பட்டதன்று என்று சாதிப்பதற்கில்லை.

2. கடவுளின் ஆதி தீர்மானம் நிபந்தனையற்றது. குறிக்கப்பட்ட மக்களுக்கென மீட்பைச் சம்பாதிக்கவும் அதே மக்களுக்கு மீட்பின் நற்பேறுகளை அருளவும் திட்டமிட்டார். கடவுளது இத்தீர்மானம் பாவிகளின் விசுவாசம் என்ற நிபந்தனையைப் பொறுத்ததல்ல.

3. நம்பிக்கையின்மூலம் மீட்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே நம்பிக்கை (விசுவாசம்) என்ற ஒரே ஒரு நிபந்த

னையின் பேரில் மீட்கப்பட்டோம் என்றாலும், அந்த விசுவாசங்கூட கடவுளின் அருள்கொடை. மீட்புக்குரிய அந்த நம்பிக்கையை எவ்வித வரையறையும் நிபந்தனையுமின்றி நமக்கருள கடவுள் திட்டமிட்டார்.

பின் ஒரு பகுதியில் இவ்வுண்மையை விரிவாய்க் காட்டப்போகிறேன்.

4. கிறிஸ்து யாருக்காக நன்மைகளைப் பெற்றுக் கொண்டாரோ அவர்கள் அவற்றைப் பெற்று அனுபவித்தாக வேண்டும். ஏனெனில்,

அ. கிறிஸ்து தம் மரணத்தால் நற்பேறுகளைச் சம்பாதித்தும் அவற்றை வழங்க இயலாதிருப்பாரேயானால் பின்னை யார் மீட்கப்படக் கூடும்?

ஆ. யார் யார் மீட்கப்படவேண்டும் என்று தீர்மானஞ் செய்யாது கடவுள் இவ்வுலகத்திற்கு ஒரு மீட்பரை அனுப்பியிருப்பாரா? என்ன முடிவாகுமோ என்று தெரியாமல் எல்லாம் வல்ல கடவுள் வழிவகைகளைத் திட்டமிடுவாரா? தாம் விரும்பும் முடிவு என்ன என்பதைத் திட்டமாகத் தெரிந்து கடவுள் அதற்கான வழிவகைகளைப் பயன்படுத்தி வருகிறார் என்பதுதான் திருமறை போதிக்கும் கருத்தாகும்.

இ. கிறிஸ்து எனக்கெனச் சில நற்பேறுகளை வாங்கிச் சம்பாதித்திருப்பாரானால், பின் அந்த நற்பேறுகளை அடைந்தனுபவிக்க எனக்கு உரிமையுண்டல்லவா?

மரபுரிமையாக எனக்களிக்கப்பட்ட பொருள் எல்லாம் உண்மையில் என்னுடையதாக வேண்டும் அல்லவா? ஆகவே, கிறிஸ்து யாருக்கென மீட்பின் நற்பேறுகளை வாங்கிச் சம்பாதித்தாரோ அவர்களுக்கெல்லாம் அந்த நற்பேறுகள் வழங்கப்படுவது திண்ணம். ''ஆனால் விசுவாசம் ஒரு நிபந்தனையாக உள்ளது. நம்பிக்கையின்றி மக்கள் எதையும் பெறமுடியாது'' என்று யாராவது

மறுப்பு கூறினால் அந்த மறுப்புக்கு நான் அளிக்கும் மறு உத்தரவு: ''மெய்தான்; விசுவாச நம்பிக்கை மீட்புக்கு ஏதுவாகும் ஒரு நிபந்தனைதான். ஆனால் நிபந்தனையாகிய அந்த விசுவாசத்தைக்கூட எந்த நிபந்தனையுமின்றிக் கடவுள் அருள்கொடையாகக் கொடுக்கிறார்.

ஈ. கிறிஸ்து யாருக்கென மீட்பை நிறைவேற்றினாரோ அவர்களையும், யாருக்கு மீட்பின் நலன்களை வழங்கு கிறாரோ அவர்களையும் திருமறை எப்பொழுதும் இணைத்துக் கூறுகிறது.

கீழ்க்காணும் வசனங்களைக் கவனிக்கவும்;

(i) ஏசாயா 53:5—கிறிஸ்து யாருக்கெனக் காயப்பட்டாரோ அவர்களைக் குணமாக்கினார்.

(ii) ஏசாயா 53:11—கிறிஸ்து யாருடைய பாவங்களைச் சுமந்துகொண்டாரோ அவர்களை நீதிமான்களாக்குகிறார்.

(iii) ரோமர் 4:25—கிறிஸ்து யாருக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டாரோ அவர்களை நீதிமான்களாக்குகிறார்.

(iv) ரோமர் 8:32-34—கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களுக்குக் கடவுள் தேவையான யாவற்றையும் அருளுகிறார்.

கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் மீது யாரும் குற்றஞ் சுமத்த முடியாது.

கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார்.

கிறிஸ்து எவர் நிமித்தம் மீட்பின் வேலையை நிறைவேற்றினாரோ அவர்களுக்கு அம்மீட்பு தவறாமல் வழங்கப்படுகிறது என்று மேற்கண்ட நியாயங்களைக் கொண்டு உறுதியாக அறியலானோம். மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒருவேளை மீட்பு கிடைக்கக்கூடிய ஒரு நன்மையை,

புண்ணியத்தை வாங்கிச் சம்பாதிக்கக் கிறிஸ்து மரிக்க வில்லை; ஆனாலோ, யாருக்கு அது வழங்கப்படுகிறதோ அவர்களுக்கு அது உண்மையாகவும், நிலையாகவும் அருளப் படக் கிறிஸ்து மாண்டார்.

மேற்கண்ட கருத்தை உண்மையாய் விளக்கும் நான்கு காரியங்களை கூறுகிறேன்:

1. தாம் தெரிந்து கொண்டவர்களின் பேரில் கொண்ட என்றுமழியாத அன்புதான், கடவுள் கிறிஸ்துவை மரிக்க அனுப்பியதற்குக் காரணமாயிற்று.

2. கிறிஸ்துவின் பிராயச்சித்த மரணம் விலை மதிப் பில்லாதது. கடவுள் திட்டமிட்ட யாவற்றையும் நிறை வேற்ற வல்லது.

3. புதல்வர் பலரைத் தம் மாட்சிமை நிலைக்குள் கொண்டு வந்து சேர்ப்பது தந்தையின் நோக்கம். அந்தப் பல புதல்வரை யூத இனத்தினின்று மட்டுமன்று, மாறாக எல்லா நாட்டினர், கோத்திரத்தார், இனத்தவர், மொழி யினரிடையேயுமிருந்து தெரிந்து கொண்டார். அவர் களுடன் புதிய உடன்படிக்கை செய்து கொள்ளத் திட்ட மிட்டார்.

4. மேற்கண்ட புதல்வர் பலருக்கெனக் கிறிஸ்து நிறைவேற்றிய யாவும் ஏற்ற காலத்தில் திட்டமாக அவர் களுடையதாகும். கிறிஸ்து அவர்களுக்கென என்றுமழியாத மீட்பின் நன்மைகளை வாங்கிச் சம்பாதித்திருப்பதால் அந்த நன்மைகள் யாவும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்க அவருக்கு உரிமை உண்டு.

### மேலும் சில குறிப்புகள்

கிறிஸ்துவின் மரணம் யாவருக்குமுரியது; ஆனால் விசுவாசிகளை மட்டும் உண்மையாய் இரட்சிக்கும் என்று நாம் சாதித்துக் கூறுவோமேயானால் கீழ்க்காணும் தவ றான கருத்துக்களில் சிக்கிக்கொள்வோம்.

1. கடவுள் எல்லா மனிதரையும் மீட்கக் கடமைப் பட்டவர்.

இக்கருத்தை நாம் மறுக்கிறோம்: மக்களை மீட்கும் காரியத்தில் கடவுள் சிறிதும் கடமைப்பட்டவர் அல்ல. தாம் விருப்பங்கொண்டு யாரை மீட்கத் திட்டமிடுகிறாரோ அவர்களை மட்டும் மீட்க அவருக்கு முழு உரிமை உண்டு.

2. மனிதர் ஒத்துழைத்தாலொழிய கடவுள் தாம் விரும்புவதை நிறைவேற்ற இயலாது.

இதையும் நாம் மறுக்கிறோம். இந்தத் தவறான கருத்து கடவுளின் மேன்மையைக் குறைக்கும்.

3. எல்லாரிடத்திலும் சமமாக அன்பு கூறுவதே சிறப்பு மிக்க அன்பாகும். அதுவே கடவுளுக்கு ஏற்றது.

இதையும் நாம் மறுக்கிறோம். இதைப்பற்றி 4-ஆம் பகுதி, பிரிவுகள் 2லும் 4லும் விளக்கமாக எழுதுவோம்.

4. கடவுள் எல்லா மனிதரிடத்திலும் சமமாக அன்பு கூறுவதால் தம் மைந்தரை மரிக்க அனுப்பினார்.

இதற்கும் மறுப்பு கூறுகிறோம்; இக்கருத்து திருமறை உண்மைக்கு முரணானது. கிறிஸ்து மரிக்கும்படி அவரை அனுப்பிய கடவுளின் அன்பில் பங்கு கொள்ளாத சில மக்களையும் பற்றி நாம் படித்தறியலாம். எடுத்துக்காட்டாக, நீதி 16:4; அப். 1:24; ரோமர் 9:11-13; 1 தெச. 5:9; 2 பேதுரு 2:12; யூதா 4.

5. மீட்புக்கேதுவான விசுவாசப்பற்று கிறிஸ்துவின் மரணத்தால் நமக்கென வாங்கிச் சம்பாதிக்கப்படவில்லை.

இதையும் மறுத்து கிறிஸ்து தம் மரணத்தால் வாங்கிச் சம்பாதித்த நன்மைகளுள் மீட்புக்கேதுவான விசுவாசப் பற்று ஒன்றாகும் என வற்புறுத்திச் சாதிக்கிறோம்.

6. மனுக்குலமனைத்திற்கும் ஈடாகக் கிறிஸ்து மரித்தார்.

இதையும் நாம் மறுக்கிறோம். ஏனெனில் கிறிஸ்து யாவரையும் மீட்க ஈடாக மரித்திருந்தால் யாவரும் மீட்கப்பட்டவர்களாயிருப்பார்கள் அல்லவா?

7. சிலர் மீட்கப்படமாட்டார்கள் என்று கடவுள் ஏற்கெனவே தெரிந்திருந்தும் (அவர் நடப்பன யாவற்றையும் முன்னறிந்த கடவுள் என்பதை மறவாதீர்) அவர்களுக்காகவும் மரிக்க அவர் தம் மைந்தரை அனுப்பினாராம். அவர் அவ்வாறு அனுப்பியதில் பயனென்ன? அத்தகைய ஒரு கருத்தைச் சாதிப்பதிலும் என்ன பயன் உண்டு என்று எனக்குப் புரியவேயில்லை.

5. கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் எல்லாரும் தவறாமல் மீட்கப்படுவர் என்ற உண்மைக்கு ஆதாரமான சில நியாயங்கள்.

கிறிஸ்து உலகின் மக்கள் யாவருக்காகவும் மரித்தும் அவருடைய மரணத்தினாலாகும் மீட்பு சிலருக்கு மட்டும் வழங்கப்படுகிறது என்ற பெருவழக்கான கருத்தின் பிழைகளைக் கீழ்க்காணும் இப்பிரிவில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன் (கிறிஸ்துவின் மரணம் எல்லாரையும் மீட்கப்போதுமானது, ஆனால் சிலருக்கே பயன்படும் என்பர் பலர்). மீட்பை வாங்கிச் சம்பாதிப்பது வேறு; அம்மீட்பின் நன்மைகளை மக்களுக்கு வழங்குவது வேறு என்பது உண்மைதான், ஆனால் இவ்விரண்டையும் ஒன்றைவிட்டுயொன்றைப் பிரிக்கக் கூடாது.

யாருக்காகவாவது ஏதாவது ஒரு பொருள் வாங்கிச் சம்பாதிக்கப்பட்டால் அப்பொருள் அவனுக்குக் கிடைப்பது உறுதியான நிச்சயம். ஏதோ கிடைக்கலாம் அல்லது ஒரு வேளை கிடைக்காமலிருக்கலாம் எனக் கூறுவது பொருளற்ற ஒரு கருத்தாகும். எனவே கிறிஸ்து தம் மரணத்தால் நிறைவேற்றியவை யாவும் யாருக்காக வாங்கிச் சம்பாதிக்கப்பட்டனவோ அவர்களுக்கே உரியனவாகும் என்பது உறுதியான நிச்சயம்.

ஒரு மனிதனுக்காகக் கிறிஸ்து மரிக்கவேண்டும் என்று கடவுள் திட்டமிட்டும் அந்த மனிதனுக்கு மீட்பின் நன்மைகள் ஒருவேளை கிடைக்காமலிருக்கலாம் என கூறுவது பொருளற்ற பேச்சாகும். அடிமைகளை விடுதலையாக்க விலைக்கிரயமாகிய பணத்தைச் செலுத்தியான பிறகு அவ்வடிமைகளைத் தொடர்ந்து அடிமைத்தனத்தில் விட்டுவிடுவது நியாயமாகுமோ? கிறிஸ்துவின் மரணம் அநேகரை மீட்டுக்கொள்ளும் பொருட்டுக் கொடுக்கப்பட்ட மீட்பு பொருள் என்று மத்தேயு 20: 28-ஆம் வசனத்தால் அறியலானோம்.

[எச்சரிக்கை: 1975 புதிய திருப்புதலின் மொழி பெயர்ப்பு மூலகிரேக்கத்திற்கு ஒத்ததன்று என்பதைக் கவனிக்க]

கிறிஸ்துவின் மரணத்தாலாகும் நன்மைகள் யாவருக்குமுரியன; ஆனால் நாம் சில நிபந்தனைகளை ஏற்று நிறைவேற்றினாலொழிய நாம் அந்த நன்மைகளைப் பெற இயலாது எனச் சிலர் கூறுவர். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதோ அல்லது அவர் பேரில் விசுவாசம் வைப்பதோ அந்த நிபந்தனை என்பர். இந்தக் கருத்துக்கு எதிர்வாதமாகக் கீழ்க்காணும் நியாயங்களைக் கூறுகிறேன்.

1. கடவுள் உண்மையாகச் சில நிபந்தனைகளுக்குட்படுகிற யாவரையும் மீட்கத் திட்டமிட்டிருப்பாரேயானால் அந்த நிபந்தனைகளைப்பற்றி யாவருக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்திருப்பார் அல்லவா? ஆனால் ஒருபோதும் கேள்விப்படாதார் பலர் உண்டு.

2. இரட்சிப்புக்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றுவது நம்மால் கூடிய காரியமாயிருக்க வேண்டும். அல்லது நம்மால் செய்ய இயலாததாயிருக்க வேண்டும். நம்மால் நிறைவேற்றக் கூடியதாயிருந்தால் பின்னர் கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைக்கும் திறன் யாவருக்குமுண்டு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் அதுவோ தவறான ஒரு கருத்து. வேதத்திற்கு ஒவ்வாதது. இரட்சிப்

புக்கேதுவான விசுவாசம் கிறிஸ்துவின்பேரில் வைக்கும் திறன் இயற்கையாய் யாருக்குமில்லை. ஆகவே, கடவுள் தாமே விசுவாசிக்கும் நிபந்தனையை நிறைவேற்றும் திறனை நமக்கு அருள வேண்டும் அல்லது அருளாதிருக்க வேண்டும். அவர் அத்திறனை யாவருக்கும் அளிப்பவரா யிருந்தால் பின்னர் எல்லாரும் மீட்கப்பட வேண்டும் அல்லவா? ஆனால் பலர் மீட்கப்படாமல் கெட்டுப் போகிற தாகத் தெரிகிறது. மாறாக, அவர் விசுவாசிக்கும் திறனை அருளாதிருப்பாரேயானால் அவர் அதை மீட்புக்குரிய நிபந்தனையாக மனிதரிடத்தில் உரிமைக் கோரக்கூடாது. தாம் மட்டும் அருளக் கூடியதை நமக்கு அளிக்காமல் அதே சமயத்தில் அதை நம்மிடம் நிபந்தனையர்கக் கேட்பதும் எதிர்பார்ப்பதும் நேர்மையற்றதும் பொருளற்றதுமான ஒரு செயலாகும். அது கண் தெரியாத ஒரு குருடனைப் பார்த்து 'நீ இதோ என் கையில் இருக்கிற இந்த வைரக் கல்லைப் பார்க்கக் கூடுமானால் நான் அதை உனக்குத் தருகிறேன்' என வாக்களிப்பதுபோலாகும்.

3. இரட்சணியத்தைப் பெற்று அனுபவிக்க விசுவாசப் பற்று இன்றியமையாத ஒரு நிபந்தனை. மீட்புக்கேதுவான இந்த நம்பிக்கை கிறிஸ்துவின் மரணத்தால் சம்பாதிக்கப் பட்ட ஒரு நன்மை; அல்லாவிட்டால் அவர் மீட்புக்குரிய எல்லா நன்மைகளிலும் இந்த ஒரே நன்மையை மட்டும் நமக்கென வாங்கிச் சம்பாதிக்கவில்லை. கிறிஸ்து எல்லா மக்களுக்காகவும் மரித்தாராம்; அவர் அவ்வாறு மரிக்கவே, அவர் இரட்சிப்புக்கேதுவான நிபந்தனையாகிய விசுவாசத் தையும் சம்பாதித்திருந்தால் பின்னர் எல்லாரிடத்திலும் கிறிஸ்துவின்பேரில் விசுவாசம் வைக்கும் திறன் இருந்திருக்க வேண்டும். ஆனாலோ, இந்த முக்கியமான நன்மையைக் கிறிஸ்து தம் மரணத்தால் நமக்கென வாங்கிச் சம்பாதிக்க வில்லையென்றால் பின்னர் நாம் மீட்கப்படுவதற்கான மிக முக்கியமான ஒரு பகுதி கிறிஸ்துவைச் சிறிதேனும் சார்ந் திராமல் மீட்கப்படவேண்டிய நம்மையே சார்ந்ததாகும். இந்தக் கருத்தோ மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் மகிமை

யைக் குறைத்துப் பாதிக்கும் அன்றோ? மேலும் அது "உங்களுக்குக் கிறிஸ்துவினிடம் நம்பிக்கை கொள்ளும் நற்பேறு... அருளப்பட்டிருக்கிறது" என்ற திருமறை போதனைக்கு மாறானதாகும் (பிலி. 1:29; எபே. 1:3; 2:8ஐப் பார்க்கவும்).

4. கிறிஸ்து யாவருக்காகவும் மரித்தார் என்கிறார்கள். ஆனால் அவர் முழு மீட்பையும் அந்த மரணத்தால் வாங்கிச் சம்பாதிக்காமல் அரை குறையான ஓர் இரட்சணியத்தை மட்டும் யாவருக்காகவும் அவர் சம்பாதித்தார் போலும். அதனால் பயன் என்ன? மீட்புக்கேதுவான இன்றியமையா நிபந்தனைகளையும் அவர் சம்பாதித்து நமக்கு அருளினாலொழிய நாம் இரட்சிக்கப்படுவதற்கு வழியே இல்லை.

தொகுப்பாகக் கீழ்க்காணும் சுருக்கம்:

மீட்பை வாங்கிச் சம்பாதிப்பது வேறு; அம்மீட்பின் நன்மைகளை மக்களுக்கு வழங்குவதோ வேறு என்று ஒப்புக் கொண்டாலும் இவ்விரண்டையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கக்கூடாது. கிறிஸ்து எதனைத் தம் மரணத்தால் சம்பாதித்தாரோ அதனை அவர் யாருக்காகச் சம்பாதித்தாரோ அவர்களிடமிருந்து பிரிக்கமுடியாது! விசுவாசித்தால் மனிதர் யாரானாலும் மீட்படையலாம் என்பதற்காகக் கிறிஸ்து மரிக்காமல், தேர்ந்து கொண்டவர்கள் எல்லாரும் விசுவாசிகளாவதற்கென அவர் மரித்தார். நாம் நம்பிக்கை கொண்டால் கிறிஸ்துவின் மரணம் நமக்கானதாகும்; நம்பாவிட்டால் அந்த மரணம் நமக்கானதன்று என்று திருமறையிலெங்கும் கூறப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவோ நாம் மெய் விசுவாசிகளாவதற்கெனவே நமக்காக மரித்தார்.

கருத்தை விரிவாக ஆராய்ச்சி செய்தாயிற்று. நான் முதல் பகுதியிலும் இரண்டாம் பகுதியிலும் சாதித்தவைகளை மெய்ப்பித்துக் காட்டுகிற சில நியாயங்களைத் தொடர்ந்து படிப்போமாக. இப்படிச் செய்யும்போது நாம் இதுவரை தெளிவாய்க் கற்றறிந்த அடிப்படை கருத்துக்களை மனத்தில் கொள்ள நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

# 3

மூன்றாம் பகுதி

# எல்லா மனிதரையும் மீட்கக் கிறிஸ்து மரிக்கவில்லை என நிரூபிக்கும் பதினாறு நியாயங்கள்

எல்லா மனிதரையும் மீட்கக் கிறிஸ்து மரிக்கவில்லை என நிருபிக்கும் பதினாறு நியாயங்கள்.

பிரிவு 1 — புது உடன்படிக்கையினாலாகும் இரண்டு நியாயங்கள்

,, 2 — மீட்புபற்றித் திருமறை கூறும் மூன்று நியாயங்கள்

,, 3 — கிறிஸ்து ஆற்றிய மீட்பின் பணியினாலாகும் இரண்டு நியாயங்கள்

,, 4 — தூய்மை விசுவாசப்பற்று இவைகளின் தன்மையாலாகும் மூன்று நியாயங்கள்

,, 5 — மீட்பு என்ற பதத்தின் அர்த்தத்தாலாகும் ஒரு நியாயம்

,, 6 — ஒப்புரவாக்குதல் என்ற பதத்தின் அர்த்தத்தாலாகும் ஒரு நியாயம்

,, 7 — பாவக் கடனைத் தீர்த்தல் என்ற கருத்தாலாகும் ஒரு நியாயம்

,, 8 — கிறிஸ்து பட்ட பாடுகளின் புண்ணிய பலன். அதனாலாகும் இரண்டு நியாயங்கள்.

,, 9 — நாம் சாதித்துக் கூறும் கருத்தை நிருபிக்கும் திருமறை வாக்கியங்கள்.

1. புது உடன்படிக்கையினாலாகும் இரண்டு நியாயங்கள்:

1-ஆம் நியாயம்: ஆண்டவர் இயேசு கிறிஸ்து மத்தேயு 26:28-ல் ''இது உடன்படிக்கைக்குரிய என் இரத்தம்'' என்றார். இந்தப் புதிய ஏற்பாடு கடவுள் மக்களை மீட்கும் படியான ஒரு புதிய உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தவும் அந்த உடன்படிக் கைக்குரிய விலைக்கிரயமாகவும் கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது. அந்த ஒப்பந்தம் யாருக்கெனச் செய்யப் பட்டதோ அவர்களுக்காகத்தான் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது.

கடவுள் பண்டை காலத்தில் மக்களோடு செய்த உடன் படிக்கைக்கு இப்புதிய ஒப்பந்தம் வேறுபட்டது. ''நீதிச் சட்டத்தின்மூலம் ஒருவன் கடவுளுக்கு ஏற்றவனாவதைப் பற்றி மோசே எழுதியது என்னவென்றால் அதன்படி நடக்கிற மனிதன் அதன்மூலம் மெய் வாழ்வடைவான் (ரோமர் 10:5, லேவி. 18:5). தாம் ஏற்படுத்திய நீதி சட்டங்களைக் கைக்கொள்ளும் மக்களுக்கு மெய்வாழ்வு அளிப்பதாகக் கடவுள் வாக்களித்தார். ஆனாலோ, உலக மக்கள் எல்லாரும் பாவிகளாயிருக்கின்றமையால் யாரும் கடவுளின் நீதிச் சட்டத்தைக் கைக்கொள்ள முடியவில்லை, ஆகவே பழைய ஒப்பந்தம் பயனற்றதாகிவிட்டது. கடவுள் தாமே அதைப் பழைமையாக்கிவிட்டார் (எபி. 8:13).

புதிய உடன்படிக்கையில் கடவுள் தமது சட்டங்களை நமது மனத்தில் பதிய வைத்து, நமது உள்ளத்தில் அவற்றை எழுதுவதாக வாக்களிக்கிறார் (எபி. 8:10). யார் யாருடைய சிந்தையிலும், இதயத்திலும் கடவுள் தம் சட்டங் களைப் பதிய வைக்கிறாரோ அவர்களோடு மட்டும் இந்தப் புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்பது கண்கூடு. ஆனால், மனிதர் எல்லாருடைய உள்ளங்களிலும் கடவுள் தம் சட்டங்களை எழுதுகிறார் என்று சொல்வதிற்கில்லை. ஆகவே கிறிஸ்துவின் இரத்தத்தையும், மரணத்தையும் உட்

கொண்டிருக்கிற இப்புதிய உடன்படிக்கையில் எல்லா மனிதரும் உட்பட்டவரல்ல என்பது தெளிவு.

நாம் கிறிஸ்துவின் பேரில் நம்பிக்கை வைத்தோமானால், அப்போது கடவுள் தம் சட்டத்தை நம் மனதில் எழுதுவார் என்று சிலர் கூறுவர். ஆனால் விசுவாசம் என்றாலும் கடவுளின் சட்டம் மனதில் எழுதப்படுதல் என்றாலும் இரண்டும் ஒன்றுதான். ஆகவே அவர்களது கூற்றுப்படி அவரது சட்டம் நம் மனதில் எழுதப்பட்டிருந்தால் (அதாவது விசுவாசிகள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அது எழுதியிருக்கிறபடி) கடவுள் தம் சட்டத்தை நம் மனதில் எழுதுவதாக வாக்களிக்கிறார் என்று தெரிகிறது. அதுவோ, பொருளற்ற முட்டாள்தனம்,

எல்லா மக்களையும் மீட்கக் கிறிஸ்து மரித்தார் என்ற கருத்திற்கு புதிய உடன்படிக்கையின் தன்மை சிறிதும் இடமும் ஆதாரமும் அளிக்கிறதில்லை.

2-ஆம் நியாயம்: புதிய உடன்படிக்கையைப்பற்றிய நற்செய்தியானது கிறிஸ்துவுக்குப் பிந்திய காலம் நெடுக அறிவிக்கப்பட்டு வருகிறது. எனினும் அப்போதைக்கப் போது சில வெவ்வேறு இனத்தவர்கள் அந்த நற்செய்தியைக் கேட்டறியா நிலைமையில் விடப்பட்டனர். மக்கள் விசுவாசம் என்னும் நிபந்தனையைக் கைகொண்டால் யாவரும் மீட்படையக்கூடும் என்ற நோக்கம் கொண்டு கிறிஸ்து மரித்திருந்தால் நற்செய்தியானது ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

யாவரும் கேட்டறியும்படி கடவுள் ஏற்பாடு செய்யாதிருந்தால் பின்னர் விசுவாசமும் நற்செய்தியுமின்றி மக்கள் மீட்படையக்கூடும் என்று சொல்வதா அல்லது கடவுளின் திருவுளம் நிறைவேறாமல் தவறியது என்று சொல்வதா? இவ்விரண்டில் முந்தியது உண்மையாகாது. விசுவாசம் இரட்சணியத்தில் அடங்கியுள்ள அவசியமான ஒரு பகுதியாகும் (2-ஆம் பகுதி, 5-ஆம் பிரிவு). ''நம்பிக்கையில்லாமல்

ஒருவனாலும் கடவுளுக்கு உகந்தவனாயிருக்க முடியாது'' (எபி. 11 : 6). பிந்தியதும் உண்மையாயிருக்காது; ஏனெனில் அது முற்றிலும் அறிவு ஞானம் மிக்க கடவுளின் தன்மைக்கு ஒவ்வாது. எல்லாரும் விசுவாசத்தைக் கொண்டு மீட்கப்பட வேண்டும் எனத் திட்டமிட்டுத் தம் மைந்தரை அனுப்பின பிறகு கேட்டறியும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படியான ஏற்பாடு செய்யாமல் தம் திட்டத்தை நிறைவேற்றாதது ஞானமும் பரிவும் மிக்க கடவுளுக்கு ஏற்குமா? அது அவருடைய நற்பண்புக்கு ஏற்கும் நற்செயலாயிருக்குமா?

எல்லா மக்களின் எல்லா நோய்களையும் குணமாக்கும் மருந்து தன்னிடம் இருப்பதாகக் கூறியும் அதைப்பற்றிய நற்செய்தியை அநேகருக்கு அறிவிக்காமல் வேண்டுமென மறைத்து வைக்கும் மருத்துவரைப்போலாவர். அவ்வாறு நடந்த மருத்துவர் எல்லாருடைய நோய்களையும் குணமாக்க உண்மையாய்க் கருதினார் என்று சாதிக்க முடியுமா?

கிறிஸ்துவைப் பற்றிக் கேட்டறியும் வாய்ப்பு கோடிக் கணக்கான மக்களுக்குக் கிட்டாது எனக் கூறும் பல வேத வசனங்கள் உண்டு. அதற்குக் காரணம் என்ன என்ற கேள்விக்கு இயேசு தாமே கூறிய பதில் தவிர வேறு பதிலை அறியோம். ''ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்'' (மத். 11:26). உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் நற்செய்தியைக் கேட்டறியும் வாய்ப்பு உண்டு என்பதை மறுக்கும் திருமறை வாக்கியங்கள் கீழ்க்காணுமாறு: சங். 147:19,20; அப். 14:16;16:6,7. நற்செய்தியைக் கேட்டறியும் வாய்ப்பு யாவருக்கும் தவறாமல் கிடைக்கும்படி கடவுள் ஏற்பாடு செய்யாததால் எல்லாரையும் மீட்க வேண்டுமென்பது அவருடைய திருவுளமன்று என்ற முடிவை நாம் தவிர்க்க இயலாது.

2. மீட்புபற்றித் திருமறை கூறும் மூன்று நியாயங்கள்:

3-ஆம் நியாயம்: இயேசு கிறிஸ்து நமக்கென வாங்கிச் சம்பாதித்தது நித்திய மீட்பு என்றழைக்கப்படுகிறது. அதாவது பாவம், மரணம், நரகம் இவைகளின் ஆட்சியிலிருந்து நாம் என்றுமுள்ள விடுதலையடைவதே இந்த நித்திய மீட்பாகும். இந்த நற்பேறு எல்லா மக்களுக்கென்றும் வாங்கிச் சம்பாதிக்கப்பட்டது என வைத்துக்கொள்வோம். அவ்வாறிருந்தால் எல்லாரும் உடனடியாக எந்தக் கட்டுபாடுமின்றி மீட்கப்படுவர் அல்லது ஏதோ சில நிபந்தனைகளை நிறைவேற்றினால் எல்லா மக்களும் மீட்படையக் கூடும்.

எல்லாரும் என்றுமுள்ள மீட்பு அடைந்து வருகின்றனர் என்று நாம் யாரும் சாதித்துக் கூறுவதற்கில்லை. ஆகையால் சில நிபந்தனைகளை நிறைவேற்றும் எவரும் இந்நித்திய மீட்படையலாம் என்று சொல்லலாமா?

நான் கேட்பது: கிறிஸ்து இந்தக் கட்டுபாடுகளை நமக்கென நிறைவேற்றினாரா? அல்லது கிறிஸ்து நிறைவேற்றின நிபந்தனைகள், வேறு சில நிபந்தனைகளை நிறைவேற்றும் மக்களுக்கு மட்டும் பயன்படுமா? முதல் கேள்விக்குப் பதிலாக. கிறிஸ்து மனிதருக்கு, நித்திய மீட்பை அருளும்படி எல்லா நிபந்தனைகளையும் முழுமையாக நிறைவேற்றியிருப்பாரானால் எல்லா மனிதரும் மீட்பை பெற்றிருப்பர். ஆனால் இதுவோ நாம் நம் அனுதின வாழ்வில் காணும் அனுபவத்திற்குப் பொருந்தாது எனக் கண்டோம். ஆகவே எல்லா மக்களும் மீட்கப்படும்படியாகக் கிறிஸ்து நிபந்தனைகளை நிறைவேற்றினார் என நாம் சொல்வதற்கில்லை. வேறு சில நிபந்தனைகளை நிறைவேற்றும் மக்களுக்காக மட்டும் அவர் அந்நிபந்தனைகளை நிறைவேற்றியிருப்பாராக்கும். ஆனால் நிறைவேறிய சில நிபந்தனைகளை, இன்னும் நிறைவேற வேண்டிய வேறு நிபந்தனைகளின்மீது மேற்கட்டுமானமாய் அமைப்பது வட்ட சுழற்சி வாதத்

தைப்போன்ற முட்டாள்தனமாகுமன்றோ? ஆகவே எல்லா மக்களுக்கும் என்றுமுள்ள மீட்பு வாங்கிச் சம்பாதிக்குமாறு கிறிஸ்து மாண்டார் எனக் கூறுவது எவ்வளவு பொருளற்ற கூற்றாகும்.

நிபந்தனைகளை நிறைவேற்றும் மக்களுக்கு நித்திய மீட்பு அளிக்கப்படலாம் என யாராவது தொடர்ந்து வற்புறுத்திச் சாதித்தால், பின்னை அந்தச் செய்தி எல்லா மக்களுக்கும் தவறாமல் அறிவிக்கப்பட வேண்டும் அல்லவா. ஆனால் எல்லாருக்கும் அது அறிவிக்கப்பட்டு வருகிறதில்லை என்பது கண்கூடாகும் (1-ஆம் பிரிவு: 2-ஆம் நியாயம்).

என்றுமுள்ள மீட்பு மக்கள் நிறைவேற்றும் கட்டுப்பாடுகளைச் சார்ந்ததென்றால், அக்கட்டுப்பாடுகளை நிறைவேற்றும் திறமை அவர்களுக்குண்டு எனச் சொல்வதா அல்லது அவர்களுக்கில்லை எனச் சொல்வதா? திறமை உண்டென்றால், மக்கள் யாரானாலும் இயற்கை விருப்பத்தாலும் திறமையாலும் நற்செய்தியை நம்பக்கூடும் என்று அர்த்தமாகும். ஆனால் அதுவோ திருமறையின் போதனைக்கு முற்றிலும் மாறானதாகும். ''அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்த'' (எபே. 2:1) மக்கள் என்ன கட்டுப்பாட்டு விதிகளை நிறைவேற்ற முடியும்? சொல்லுங்கள்; பார்க்கலாம்!

என்றுமுள்ள மீட்படைவதற்கான கட்டுப்பாடுகளை நிறைவேற்றும் திறமை மக்களுக்கில்லை. பின் கடவுள் அவர்களுக்கு இந்தத் திறமையை அளிக்கத் திட்டமிட்டுள்ளார், அல்லது அவ்வாறு அளிக்க அவர் ஏற்பாடு செய்யவில்லை. அவர் நம்பும் திறமையை யாவருக்கும் அளிக்க ஏற்பாடு செய்திருந்தால் பின் அவர் தாம் இட்ட திட்டத்தை நிறைவேற்றாத காரணம் யாது? அவர் அதை நிறைவேற்றினால் யாவரும் மீட்படைவது உறுதியான நிச்சயமாகுமன்றோ?

கடவுள் நம்பும் திறமையை எல்லாருக்கும் அளிக்கத் திட்டமிடாதிருந்தும் கிறிஸ்து எல்லா மக்களும் என்றுமுள்ள

மீட்படைவதற்காக மரித்தார் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறிருந்தால் கடவுள் அவர்களுக்குக் கொடுக்க மாட்டாத திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ள மனிதரைக் கேட்கிறாராக்கும். ஆனால் இவ்வாறு நடப்பது ஞானமும் பரிவும் மிக்க கடவுளுக்கு ஏற்குமா ? புத்துயிரடையும் திறமையைக் கொடுக்க மனமற்றும் அத்திறமையை உயிரற்ற பிணத்திற்குக் கொடுக்க வாக்களிப்பது போலும் அன்றோ !!

4-ஆம் நியாயம்: யார் யாருக்கெனக் கிறிஸ்து மரித்தார் என்பதை வேதம் திட்டமும் தெளிவுமாக விளக்குகிறது. மனித இனம் இரண்டு தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது; கிறிஸ்து இவ்விரண்டில் ஒரு பகுதி மக்களுக்காக மாண்டார்.

கடவுள் மக்களை இரண்டு தொகுதிகளாகப் பகுக்கும் காட்சி அளிக்கும் வேத வசனங்கள் கீழ்க்காணுமாறு:

மத். 25:12,32 ரோமர் 9:11-23

யோவான் 10:14,26 1 தெச. 5:9

யோவான் 17:9

கடவுள் அன்பு கொண்டு விரும்பும் மக்களுமுண்டு; கடவுள் விரும்பாத மக்களுமுண்டு; கடவுள் அறிந்திருக்கிற மக்களுமுண்டு. நான் உங்களை அறியேன் என்று அவர் புறம்பே தள்ளிப் போடுகிற மக்களுமுண்டு.

கிறிஸ்து யாருக்காக மரித்தார் என்றால்:

தம்முடைய மக்களுக்காக—மத். 1:21

தம்முடைய ஆடுகளுக்காக—யோவான் 10:11,14,15

திருச்சபைக்காக—அப். 20:28

தாம் தெரிந்து கொண்டவர்களுக்காக—ரோமர் 8:32-34

கடவுள் தமக்களித்த பிள்ளைகளுக்காக—எபி. 2:13

தம் மக்கள் அல்லாதாருக்காக

தம் ஆடுகள் அல்லாதவர்களுக்காக

தாம் தெரிந்து கொண்ட திருச்சபையைச் சேராதவர்களுக்காக கிறிஸ்து மரிக்கவில்லையாக்கும்.

பின்னர், கிறிஸ்து எல்லாரையும் மீட்க மரித்தார் என்று எப்படிச் சொல்லமுடியும்?

5-ஆம் நியாயம்: வேதம் மீட்பின் அளவு அல்லது நோக்கம் என்ன என்பதை எப்படி விளக்குகின்றதோ அவ்வாறே நாமும் அதைப் பற்றிப் பேசவேண்டும். உலகில் இருக்கும் மக்கள் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்ததாக வேதம் எங்குமே கூறுவதில்லை.

''எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு'' என்று வேதம் கூறுவதுண்டு என்பது உண்மைதான். ஆனால் இப்பகுதியிலும் அதைப்போன்ற பகுதிகளிலும் 'எல்லாரும்' அல்லது 'எல்லாரையும்' என்ற பதங்களின் உண்மையான கருத்து என்ன என்பதை முன்பின் தொடர் வசனங்களுக்கு ஏற்க நாம் ஆராய்ந்தறிய வேண்டும். கிறிஸ்து தம் ஆடுகள் என்றழைக்கப்படுகிற யாவருக்காகவும் தாம் தெரிந்து கொண்ட மக்கள் யாவருக்காகவும் மரித்தார் என்பதுவே அதன் உண்மையான அர்த்தமாகும். கிறிஸ்து உலகில் தோன்றியுள்ள எல்லா மனிதருக்காகவும் ஒவ்வொரு தனி மனிதனுக்காகவும் மரித்தார் என்பதை நிரூபித்துக் காட்டுகிற எந்த வேத வசனமும் கிடையாது.

[நான்காம் பகுதி, பிரிவுகள் 3லும் 4லும் 'உலகம்' 'எல்லாரும்' என்ற பதங்கள் காணப்படுகிற பல வேத வ்சனங்களை விவ்ரமாக விளக்கஞ் செய்வோம்.]

**3. கிறிஸ்து ஆற்றிய மீட்பின் பணியினாலாகும் இரண்டு நியாயங்கள்**

6-ஆம் நியாயம்: இயேசு கிறிஸ்து மரித்தபோது அவர் பிறருக்காகப் பொறுப்பு மேற்கொண்டதாக வேதம் பல வசனங்களில் கூறுகிறது. எடுத்துக்காட்டாக:—

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைத் தந்தார். ரோமர்: 5:8

கிறிஸ்து நம் பொருட்டுச் சாபமானார்—கலா: 3:13

பாவம் அறியாத அவரை (கிறிஸ்துவை) நமக்காகப் பாவமாக்கினார்.—2 கொரி. 5:21

கிறிஸ்து பிறருக்கெனப் பதில் ஆளாக ஏதோ செயலாற்றியதாக மேற்கண்ட திருமறை பகுதிகள் தெளிவாய் விளக்குகின்றன.

பிறருடைய நிலையில் நின்று அவர்களுக்குப் பதிலாகக் கிறிஸ்து மரித்தாரானால், அவர் யாருக்காக மாண்டாரோ அவர்கள் எல்லாரும் கடவுளின் சினத்திற்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் தப்பி விடுதலை அடைவர் அல்லவா? கிறிஸ்துவைத் தண்டித்து, பிறகு அவர் அந்தத் தண்டனையால் மீட்ட மக்களையும் தண்டிப்பது கடவுளுக்கு ஏற்கும் நியாயமான ஒரு செயலாகுமோ? என்றாலும் சிலர் கடவுளின் சினத்திற்காளாவார்கள் என்பது கண்கூடு (யோவான் 3:36-ஐக் காண்க). ஆகவே, கிறிஸ்து எல்லா மக்களையும் மீட்க மாண்டார் என்று நாம் சொல்வதற்கில்லை.

அப்படி இன்றி, கிறிஸ்து யாவருக்கும் பதிலாக உண்மையாய் மரித்தார் என்பதாக யாராவது வற்புறுத்தி கூறினால், அவருடைய மரணம் வலிமை குறைந்ததாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் எல்லா மக்களையும் கடவுளின் சினத்திற்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் தப்புவித்து விடுதலையாக்க அம்மரணத்தால் இயலவில்லை.

கிறிஸ்து எல்லாருக்கும் பதிலாக மரித்தது உண்மையானால் பின் அவர் எல்லாருடைய எல்லா பாவங்களையும் போக்க மரித்திருக்க வேண்டும். அல்லாவிட்டால் எல்லா மக்களின் சில பாவங்களை போக்க மரித்திருப்பராக்கும். முந்தியதுதான் உண்மை என்றால் பின் யாவரும் மீட்கப்பட்டாயிற்று என்பது அர்த்தமாகுமன்றோ? பிந்தியது தான் உண்மையென்றால் பின் ஒருவனாலும் மீட்படைய இயலாதாக்கும். ஏனென்றால் நீக்கப்படாத சில பாவங்கள் மீந்திருக்கின்றதாகத் தெரிகிறது. ஆகவே மேற்படி இரண்டு கருத்துகளும் உண்மையானவையல்ல. *(1-ஆம் பகுதி: 3-ஆம் பிரிவு)* ஆகவே கிறிஸ்து எல்லாருக்காகவும் மாண்டார் என்று சொல்வதற்கில்லை என்பது துலாம்பரமாகத் தெரிகிறதன்றோ?

**7-ஆம் நியாயம்:** இயேசு கிறிஸ்து ஆற்றிய பணியின் தன்மையை விளக்கும் வேத பகுதிகளில் அவர் ஓர் இணைப்பாளராகவும் அல்லது ஒரு மத்தியஸ்த நடுவராகவும் ஆசாரியராகவும் அழைக்கப்பட்டிருக்கிறார். ''புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்'' (எபி. 9:15 ப.தி). ''புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தின இணைப்பாளராயிருக்கிறார்'' (பு.தி 1975). தாம் கடவுளண்டை. கொண்டு சேர்க்கும் மக்களின் சார்பாக அவர் நடுவராகவும் ஆசாரியராகவும் செயலாற்றி வருகிறார். ஆனால் எல்லாருக்காகவும் அவர் இவ்வாறு செயலாற்றி வருகிறார் எனச் சொல்வதற்கில்லை. வேதம் அத்தகைய கருத்துக்கு ஆதாரமளிக்கின்றதில்லை; நமது அன்றாட வாழ்க்கையினால் நாம் அடைந்து வருகின்ற பொது அறிவு கூட இந்தக் கருத்துக்கு ஆதாரமாயில்லை. 2-ஆம் பகுதி 2-ஆம் பிரிவை மீண்டும் பார்க்க.

**4. தூய்மை விசுவாசப்பற்று இவைகளின் தன்மையாலாகும் மூன்று நியாயங்கள்**

**8-ஆம் நியாயம்:** கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் அந்த மரணத்தாலேயே சுத்திகரிக்கப்பட்டுத் தூய்மை

யாக்கப்படுவர் என வைத்துக்கொள்வோம்: அப்படி யானால் உண்மையாகப் பாவம் நீங்கிச் சுத்திகரிக்கப்பட்டுத் தூய்மையாக்கப்படுபவருக்காக மட்டும் அவர் மரித்திருப் பாராக்கும். எல்லா மனிதரும் இந்தத் தூய்மையான நிலையை அடைந்து வருகின்றனர் என்று யாரும் சாதிக்க முன்வரப் போவதில்லை. அவ்வாறு யாரும் சொல்வதற் கில்லை. ஆகவே, கிறிஸ்து எல்லாரையும் மீட்பதற்காக எல்லாருக்காகவும் மரிக்கவேயில்லை என்பது நாம் தவிர்க்க இயலாத முடிவாகும்.

கிறிஸ்துவின் மரணம்தான் உள்ளான சுத்திகரிப்புக்கும் தூய்மைக்கும் காரணம் என்பதை இரண்டு நியாயங்களைக் கொண்டு நிருபித்துக் காட்டுகிறேன். முதலாவது, பழைய ஏற்பாட்டு ஆராதனை வழிபாட்டு முறைகள் கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய உண்மைகளைக் கற்பிக்க நியமிக்கப் பட்டன. பழைய ஏற்பாட்டுப் பலிகளின் இரத்தம் எவர் களுக்காகச் சிந்தப்பட்டதோ அவர்களைக் கடவுளண்டை கொண்டு சேர்க்க வல்லதாயிருந்தது. அப்படியானால் கிறிஸ்துவின் இரத்தம் இன்னும் எவ்வளவோ வல்லமை யுள்ளதாய் இருக்குமன்றோ ? அந்த இரத்தம் எவர்களுக் காகச் சிந்துண்டதோ அவர்களை உண்மையாய்ச் சுத்தி செய்வது இன்னும் எவ்வளவோ உறுதியான நிச்சயமாகும் (எபி. 9:13,14).

இரண்டாவதாக; எவற்றைச் செய்யும்படி கிறிஸ்து வின் இரத்தம் சிந்தப்பட்டதோ அவற்றையெல்லாம் உள்ளபடி அவரது மரணம் செயல்படுத்தி வருகிறது என் பதைக் கூறும் வேத வசனங்கள் உண்டு. ''நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவச் சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டது'' (ரோமர் 6:6) ''அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாகியிருக்கிறது'' (கொலோ. 1:14).

''அவர் நம்மை எல்லா அக்கிரமத்தினின்றும் விடுவித்து நாம் தமக்குரிய சொந்த மக்களாயும் இருக்கும்படி நம்மை மாசறக் கழுவுவதற்காகத் தம்மைத் தாமே நமக்காக ஒப்புக் கொடுத்தார்'' (தீத்து 2:14) கிறிஸ்து யார் யாருக்காக மாண்டாரோ அவர்களுடைய வாழ்க்கையில் தூய்மை பயன்படும் விளைவாகும் என்பது உறுதியான நிச்சயம் என இவ்வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் உலகில் எல்லா மனிதரும் புனித பரிசுத்தர்களாய் விளங்குகின்றனர் என்று யார் சொல்லக் கூடும்? சுத்தமாக்கப்படாத மக்கள் நம்மிடையே இருந்து வருகின்றமையால் கிறிஸ்து யாவருக்காகவும் மரிக்காமல் குறிக்கப்பட்ட சிலருக்காக மாத்திரம் மாண்டார் என்பது தவிர்க்க இயலாத முடிவு.

ஆனால் தூய்மையான வாழ்க்கைக்குக் கிறிஸ்துவின் மரணம் மட்டுமன்று வேறு சில காரணங்களும் இருக்கின்றனவாம். தூய ஆவி தூய்மையை நமக்கு அருளினால் தான் நாம் பரிசுத்தமாவோம் அல்லது நாம் விசுவாசத்தைக் கொண்டு அதை ஏற்றுக்கொள்ளவே தூயராவோம் என்கின்றனர். ஆனால் தூய ஆவியின் செயல்களும், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமும் கிறிஸ்துவின் மரணத்தால் விளையும் பலன்களாகுமன்றோ? ஆகவே தூய ஆவியின் வல்ல செயல்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திற்கும் காரணமாகிய இயேசுவின் மரணம் தூய ஆவி அருளுகின்ற தூய்மையான வாழ்க்கைக்கும் காரணமாகுமன்றோ?

நீதிபதி விடுதலைத் தீர்ப்புச் செய்வதும் காவற்காரன் கதவுகளைத் திறந்து வைப்பதுமல்ல, யாரோ ஒருவர் தான் பட்ட கடனைத் தீர்ப்பது தான் கடனாளியின் விடுதலைக்கு உண்மையான அடிப்படையான காரணமாகும்.

9-ஆம் நியாயம்: இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் இன்றியமையாத அவசியம் என்பது வேதத்தில் தெளிவாய்க் காணப்படுகிறது. ''நம்பிக்கையில்லால் ஒருவனாலும் கடவுளுக்கு உகந்தவனாயிருக்க முடியாது''

எபி.11:6). பெரும்பாலோர் இதை ஒப்புக்கொள்வர். மீட்புக் குரியவை யாவும் கிறிஸ்துவின்மூலம் நமக்கென வாங்கி சம்பாதிக்கப்பட்டாயிற்று என்ற உண்மையை நாம் ஏற்கெனவே கண்டறியலானோம்.

மீட்பிற்கு இன்றியமையாத அவசியமாயிருக்கும் விசுவாசம் எல்லா மனிதருக்கென்றும் கிறிஸ்துவினால் வாங்கிச் சம்பாதிக்கப்பட்டாயிற்று என்று சிலர் கூறுவர். அவ்வாறிருந்தால் அந்த விசுவாசம் எந்த நிபந்தனையுமின்றிக் கொடுக்கப்பட்டுள்ளது; அல்லாவிட்டால் சில நிபந்தனைகளை நிறைவேற்றும் மக்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிபந்தனையில்லாத நன்கொடையாயிருக்குமேயானால் பின் எல்லா மனிதரும் விசுவாசிகளாவர். அதுவோ நம் பொது அறிவு, மற்றும் அனுபவத்திற்கு மாறானதாகும். ஆண்டவரைப் பற்றும் நம்பிக்கை எல்லாரிடமுமில்லை (2 தெச. 3:2). ஆனால் இந்த விசுவாசப்பற்று நிபந்தனையோடு கூடிய கொடையாயிருந்தால், அந்த நிபந்தனை யாதெனக் கேட்கிறேன்.

கடவுளின் அருளுக்கு எதிர்த்து நில்லாததுதான் அந்த நிபந்தனை என்பர் சிலர். ஆனால் எதிர்த்து நில்லாதவன் கீழ்ப்படிபவனாவான். கீழ்ப்படியும் மனிதன் விசுவாசியாவான்.

ஏனெனில் கீழ்ப்படிதல் என்பது விசுவாசிப்பது ஆகும். ஆகவே எதிர்த்து நில்லா தன்மைக்கு அவசியமான நிபந்தனை விசுவாசிப்பதே ஆகும். அதாவது நம்புகிற மக்களுக்கே (ஏற்கெனவே விசுவாசத்தைப் பெற்றவர்கள்). விசுவாசம் அருளப்படுகிறது என இம்மக்கள் கூறுகிறார்கள். இது அறிவீனமான தர்க்கமன்றோ!

மறுபக்கத்தில் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திறமை கிறிஸ்துவின் மரணத்தால் நமக்கென வாங்கிச் சம்பாதிக்கப்படவில்லை எனச் சிலர் கூறுவர். அப்படியானால் கிறிஸ்துவின் பேரில் நம்பிக்கை வைப்பது முற்றிலும்

நம் சொந்த சித்தத்தைப் பொருத்ததா? நம் சுய சித்தத்தினாலாவது நம் சொந்த விருப்பத்தினாலாவது கிறிஸ்துவை நம்பி ஏற்றுக்கொள்ளவோ அல்லது அவரை வெறுத்துத் தள்ளவோ நம் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டா? இந்தக் கருத்தோ முற்றிலும் வேத உபதேசத்திற்கு மாறானது. குணப்படாத மக்களெல்லாரும் தவறுகளிலும் பாவங்களிலும் மரித்தவர். ஆவிக்குரிய செயலாற்ற திராணியற்றவராவர் என்பதை மறவாதீர்கள். ''மனித இயல்பை மட்டும் உடைய ஒருவன் கடவுளின் ஆவிக்குரியவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றை அவனால் புரிந்து கொள்ளவும் இயலாது'' (1 கொரி. 2:14). ஆகவே மீட்புக்கேதுவான விசுவாசம்கூடக் கிறிஸ்துவின் மரணத்தால் நமக்கென வாங்கி சம்பாதிக்கப்பட்டது என்ற முடிவான நிலைக்குத் திரும்புவோம்.

விசுவாசமில்லாமல் தூய்மை என்பது இல்லை. ஆனால் தூய்மை கிறிஸ்துவின் மரணத்தால் நமக்கென வாங்கிச் சம்பாதிக்கப்பட்டது என்பதை 8-ஆம் நியாயத்தில் நிருபித்துக் காட்டியாயிற்று. ஆகவே இத் தூய்மை இன்றியமையாமல் கலந்திருக்கும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அவர் சம்பாதித்திருக்கவேண்டும். அல்லாவிட்டால் அவர் அரைகுறையான பரிசுத்தத்தை மட்டும் (அதாவது விசுவாசப் பற்றில்லாத ஒரு தூய்மையை) நமக்கென வாங்கினாரா? யாரும் அவ்வாறு கூற முன்வரப் போவதில்லை.

நாம் அவருக்குரியவர்களும் மாசற்றவர்களும் அன்பு நிறைந்தவர்களுமாய் விளங்கும்படி கடவுள் நம்மைத் தெரிந்து கொண்டார் (எபே. 1:4). விசுவாசம் மேற்படி தூய்மையான வாழ்க்கையில் இன்றியமையாத அம்சமாயிருக்குமேயானால் பின் நாம் தூயவர்களாவதற்கு நம்மைத் தெரிந்து கொண்ட கடவுள் நாம் விசுவாசிகளாவதற்கும் நம்மை தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் யாவருக்கும் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாத நற்பேறுகளும் அளிக்கப்

படவேண்டும் என்பது தந்தை தம் மைந்தரோடு செய்த ஒப்பந்தமாகும். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாச நம்பிக்கை அந்த நற்பேறுகளில் ஒன்றாகும் *(எபி. 8:10-11)*.

இயேசு கிறிஸ்துவே விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார் *(எபி. 12:1 ப.தி)*. அவரே நமது நம்பிக்கையைத் தொடங்கினவர். அதை முழு நிறைவுக்குக் கொண்டு வருபவர் (பு.தி 1975 அடிகுறிப்பு). கிறிஸ்து நமக்கென வாங்கிச் சம்பாதித்த ஆசீர்வாத நற்பேறுகளுள் மீட்புக்கேதுவான விசுவாசப்பற்று ((நம்பிக்கையானது) அவசியமான ஒன்றாகும், என்பதை மேற்கண்ட வசனங்கள் எல்லாம் வற்புறுத்திக் கூறுகின்றன. ஆனால் இந்த விசுவாசப்பற்று எல்லாரிடமுமில்லை; ஆகவே கிறிஸ்து எல்லாரையும் மீட்க மரித்தார் என்று கூறுவதற்கு வழியில்லை என்பது கண்கூடு.

**10-ஆம் நியாயம் :** புதிய ஏற்பாட்டு திருச்சபைக்குப் பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் இனம் பலவகைகளில் முன்னடையாளமாயிருந்தது *(1 கொரி. 10:11)*. அவர்களுடைய ஆசாரியரும் ஆசாரங்களும் பலிகளும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவ பணிக்கு நிழலாட்டமாயுள்ள ஒரு முன்னடையாளமாயிருந்தன. அவர்களின் தலைநகர் எருசலேம், விசுவாசிகளின் விண்ணகத்தைக் காட்டும் ஓர் அடையாளமாகும் *(எபி. 12:22)*. உண்மையான 'இஸ்ரவேலர்' விசுவாசியாவர் *(யோவான் 1:47)*. உண்மையான விசுவாசிகள் 'கடவுளின் இஸ்ரவேலராவர்' *('கலா. 3:29 6:6)*.

யூத் இனம் உலகின் மற்ற எல்லா இனங்களையும் விட்டுப் பிரித்துத் தெரிந்து கொள்ளப்பட்ட இனமாயிற்று? அது திருச்சபையின் அருமையைக் காட்டும் அடையாளமாய் அமைந்த இனம். அப்படியானால் கிறிஸ்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருச்சபைக்கு மட்டும் மீட்பு உண்டாக மாண்டார்; உலகத்தின் மக்கள் யாவருக்காகவும், ஒவ்வொருவருக்காகவும் அவர் மரிக்கவேயில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர் தாம் தெரிந்து கொண்ட

மக்களை ஆசீர்வதித்த வண்ணமாக இப்பொழுது புது ஏற்பாட்டு திருச்சபையை ஆசீர்வதித்து வருகிறார். அக்காலத்தில் மீட்பு எல்லாரிடத்திலும் அருளப்படவில்லை; இக்காலத்தில் அது எல்லாருக்கும் அருளப்படுவதில்லை; தாம் தெரிந்து கொண்டுள்ள மக்களுக்கே அதை அருளி வருகிறார்; அவர்களுக்கென அவர் அதைத் தம் விலை மதியாத இரத்தத்தால் வாங்கிச் சம்பாதித்தார்.

**4. மீட்பு என்ற பதத்தின் அர்த்தத்தாலாகும் ஒரு நியாயம்**

**11-ஆம் நியாயம்:** ஒரு கொள்கையின் கருத்து என்ன என்பதைத் தெரிந்து கொள்ளத் திருமறையானது அக்கொள்கையை விளக்கப் பயன்படுத்தும் பதங்களைக் கவனித்தல் வேண்டும். கிறிஸ்து நமக்கென வாங்கிச் சம்பாதித்த இரட்சணியத்தைப்பற்றி வேதம் கூறும் பல இடங்களில் மீட்பு என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ''அந்த மைந்தருக்குள் நமக்குப் பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டு (கொலோ. 1:14). மீட்பு என்றால் விலைக்கிரயமாகிய ஒரு பொருளைக் கொடுப்பதினால் சிறையிலிருந்து ஒரு கைதியை விடுதலையாக்குவது என்று பொருள்படும். சிறையிலிருந்து அவன் விடுதலை அடைந்தாலொழிய அவன் மீட்கப்படவில்லை. ஆகவே பாவச் சிறையில் தொடர்ந்து கிடக்கும் மக்களையும் மீட்கக் கிறிஸ்து மாண்டார் எனக் கூறுவது பொருளற்ற ஒரு கூற்றாகுமன்றோ? கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்பதும் ஆனால் சிலர் இரட்சிக்கப்படாமல் கேட்டுக்குச் செல்வர் என்பதும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற கூற்றுகளாகுமன்றோ?

சில வேத வசனங்களில் கிறிஸ்துவின் உயிராகிய இரத்தம் மீட்கும் பொருள் என்றழைக்கப்படுகிறது (மத். 20:28 புதிய திருப்புதலில்-1975. இவ்வசனம் சரியாய் மொழிபெயர்க்கப்படவில்லை என்பதைக் கவனிக்க) மீட்கும் பொருளைச் செலுத்தும் நோக்கம் யாதெனில்

சிறைகைதிகளை விடுதலையாக்குவதுதான். மீட்கும் பொருளைச் செலுத்தியான பிறகும் கைதி தொடர்ந்து சிறையில் கிடப்பது கூடாத காரியமாகும். ஆகையினால் இரட்சிக்கப்படாமல் கெட்டுப் போகிற மக்களுக்காகவும் கிறிஸ்து மாண்டார் எனச் சிலர் கூறுவது நான் விளங்கிக்கொள்ளுகிறதில்லை. யார் யார் உண்மையில் பாவச் சிறை நீங்கி விடுதலை அடைந்து வருகின்றார்களோ அவர்களுக்காக மட்டும் கிறிஸ்து மரிக்கவேண்டும். ரோமன் என்ற பெயருரிச் சொல்லும் கத்தோலிக்கர் (அனைத்துலக) என்ற பெயர் சொல்லும் ஒன்றுக்கொன்று ஒவ்வாததுபோல அனைத்துலக என்ற பெயருரிச் சொல்லுக்கும் மீட்பு என்ற பெயர் சொல்லுக்கும் இசைவு ஏது? மீட்பு குறிக்கப்பட்டுள்ள ஒரு தொகுதி யாருக்கு மட்டும் உரியதேயாகும்; அது எல்லாருக்கும் பொதுவாயுள்ள ஒரு செயலன்று. ஏனென்றால் சிலர் மட்டும் உண்மையில் மீட்கப்பட்டு இரட்சிக்கப்பட்டு வருகின்றனர் அல்லவா?

### 5. ஒப்புரவாக்குதல் என்ற பதத்தின் அர்த்தத்தினாலாகும் ஒரு நியாயம்

12-ஆம் நியாயம்: கிறிஸ்து தம் மரணத்தால் வாங்கிச் சம்பாதித்த நன்மையை விளக்கும்படி இன்னொரு சொல் திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவே ஒப்புரவாகுதல் என்ற பதமாகும்.

''முன்பு நீங்கள் கடவுளோடு தொடர்பின்றி இருந்தீர்கள்; உள்ளத்தில் அவருக்குப் பகைஞராயிருந்தீர்கள்... இப்போதோ திருமைந்தர்... அடைந்த மரணத்தின்மூலம் கடவுள் உங்களுக்குத் தம்மோடு நல்லுறவை உண்டாக்கியுள்ளார்'' (கொலோ. 1:21, 22). முன்பு பகைஞர்களாயிருந்த இருவரிடையே அன்பும், பட்சமும் உண்டாகும்படி ஆற்றும்செயல் ஒப்புரவாகுதலாகும். வேதம் புகழும் மீட்பு செயலில் கடவுள் நம்மோடு, ஒப்புரவாக்கப்பட்டுள்ளார்; நாம் அவரோடு ஒப்புரவாக்கப்பட்டோம்.

இவ்விரண்டும் நிறைவேறினாலொழிய நல்லுறவு ஏது? கடவுள் நம்முடன் ஒப்புரவாக்கப்பட்டதும், நாம் அவரோடு ஒப்புரவாக்கப்பட்டதும் வெவ்வேறு தனிச்செயல்கள் என்று ஒப்புக்கொண்டாலும் முழுமைப்பெற இரண்டும் இன்றியமையாத அவசியமானவைகளாகும். ஏதோ ஒன்று தவறினாலும் நல்லுறவு உண்டாகாது. ஆகவே, கடவுள் கிறிஸ்துவின் மரணத்தால் இப்போது எல்லா மனிதரோடும் ஒப்புரவானார் என்றும் ஆனால் சில மனிதர் மட்டும் அவரோடு ஒப்புரவாக்கப்பட்டு வருகின்றனர் என்றும் கூறுவது பொருளற்ற கருத்தாகும். இப்படிப்பட்ட ஒரு தலையான நல்லுறவு ஒற்றைக் காலில் நொண்டியாய்த் தத்தி நடக்கும் முடவனைப் போன்றதாகும். இரு சாராரும் ஒருவரோடொருவர் ஒப்புரவாக்கப்பட்டாலொழிய மெய்யான நல்லுறவும் இசைவும் உண்டாகாது.

கிறிஸ்துவின் மரணமோ இவ்விரண்டையும் உண்டாக்க வல்லது. கடவுள் மனிதரோடு ஒப்புரவானார். மனிதர் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டு வருகின்றனர். ''அவருடைய மைந்தரின் மரணத்தின்மூலம் அவரோடு நமக்கு நல்லுறவு உண்டாயிற்று'' (ரோமர் 5 : 10). ''இப்போது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து...'' (5:11). ''கடவுள்... கிறிஸ்துவுக்குள் இருந்து, அவர்களுக்கு தம்மோடு நல்லுறவை உண்டாக்கி... ''நீங்கள் கடவுளோடு நல்லுறவு கொள்ளுங்கள்'' என்கிறார் (2 கொரி. 5:19,20).

இரட்டிப்பு தன்மைக்கொண்ட இந்த ஒப்புரவாகுதல் கிறிஸ்து எல்லா மனிதருக்காகவும் மாண்டார் என்ற மனித யூகத்திற்கு ஒத்துப்போகாது. எல்லா மனிதரும் இந்த இரட்டிப்பான ஒப்புரவாகுதலில் பங்குக்கொண்டால் கடவுளின் சினம் சில மக்கள்மீது நிலைத்திருப்பானேன்? (யோவான் 3:36) உண்மையாய் ஒப்புரவாக்கப்பட்டு வருகிற மக்களுக்காக மட்டும் கிறிஸ்து மரித்திருப்பாரன்றோ ?

6. பாவக் கடனைத்தீர்த்தல் என்ற கருத்தாலாகும் ஒரு நியாயம்.

13-ஆம் நியாயம்: கடவுளுக்கு நாம் யாவரும் கடன்பட்டவர்கள், நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் மீறியிருக்கிறோம். மீறுதலின் கடனைத் தீர்ப்பதற்கு மரணம் தேவை; ஏனென்றால் ''பாவத்தின் சம்பளம் மரணம்'' அல்லது ''பாவம் தரும் கூலி மரணமே'' (ரோமர். 6:23). நீதியையும், வாய்மையையும் வெளிப்படுத்தும் கடவுளின் சட்டம் நம்மைக் குற்றஞ் சாட்டுகிறது. சட்டத்தை மீறிய குற்றவாளிகளாய் நாம் யாவரும் மரண தண்டனைக்காளர்க வேண்டியது நியாயமாகும். கிறிஸ்து நாம் பட்ட பாவக் கடனைத் தீர்த்துக் கடவுளின் வழுவா நீதியைத் திருப்தியாக்கினாலொழிய நம்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு நாம் தப்ப வழியில்லை. கிறிஸ்துவின் மரணம் (எபே 5:2) பலி என்றழைக்கப்படுகிறது. ''நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே'' (1 யோவான் 2:2). பாவக் கடனைத் தீர்க்கும் பலியானார். நீதியுள்ள கடவுளின் கோபத்தை ஆற்றும்படி அவர் கிருபாதார பலியானார். நீதிபதி கடவுளுக்கு முழு நிறைவான திருப்தி அளிக்கப்பட கிறிஸ்து மாண்டார் எனக் கூறுவது மிகையாகாது.

கிறிஸ்து எவர்களுக்காக மாண்டு அவர்களுக்கெனக் கடவுளுக்கு மனநிறைவு அளித்தாரோ, அவர்கள் பேரில் கடவுள் மகிழ்ச்சி நிறைந்த தயை பெருத்தவராயிருப்பார் அன்றோ? பட்ட பாவக்கடன் முழுவதும் தீர்ந்த பிறகு கடவுள் மக்களிடம் மீண்டும் இரண்டாம் முறையாகக் கடனைக் கேட்பாரா? அவர் அவ்வாறு கேட்கவே மாட்டார், கிறிஸ்து எல்லா மக்களின் பாவக் கடனைத் தீர்த்திருப்பாரேயானால் எல்லாரும் இரட்சிக்கப்படுவது நியாயமும் நிச்சயமுமாயிருக்குமன்றோ? ஆனால் இரட்சிக்கப்படாமல் உயிருள்ள மட்டும் பாவிகளாய்த் தொடர்ந்து நடந்து நீதிச்சட்டம் விதிக்கும் மரணத்தண்டனைக்காளாகும் குற்றவாளிகளாய் மாளும் 'அநேகர்' இருக்கின்றனர்

அல்லவா? ஆகவே உண்மையாய்ப் பாவக் கடனாகிய சுமை நீங்கி விடுதலையடையும் மக்களுக்காக மட்டும் கிறிஸ்து மரித்துத் தம் தந்தைக்கு மன நிறைவு உண்டாகும்படி செய்திருக்கிறார்.

**7. கிறிஸ்து பட்ட பாடுகளின் புண்ணிய பலன்; அதனாலாகும் இரண்டு நியாயங்கள்**

**14-ஆம் நியாயம்:** கிறிஸ்து பட்ட பாடுகள் மதிப்பு மிக்கனவென்றும் மதிப்புமிக்க அவருடைய மரணத்தாலும் இரத்தத்தாலும் அநேக நற்பேறுகள் வாங்கிச் சம்பாதிக்கப் பட்டனவென்றும், திருமறை பல வசனங்களில் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, என்றுமுள்ள மீட்பு அந்த இரத்தத் தால் நமக்குக் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது (எபி. 9:12). கடவுள் தமது சொந்த இரத்தத்தால் ''சம்பாதித்துக் கொண்ட திருச்சபை'' (அப். 20:28).

யார் யாருக்காக கிறிஸ்து மாண்டாரோ அவர்களுக் கென கீழ்க்காணும் நற்பேறுகள் அவருடைய மரணத்தின் பயனாக வாங்கிச் சம்பாதிக்கப்பட்டன, பாவத்தின் வல்ல மைக்கும் கடவுளின் கோபத்திற்கும் தப்பும்படியான விடுதலை; சாவுக்கும் வேதாளத்தின் ஆட்சிக்கும் தப்பும்; விடுதலை; நீதிச் சட்டத்தால் உண்டான சாபத்திற்கும், பாவத்தின் பயனாக உண்டான பழிக்கும் தப்பும்படியான விடுதலை; கடவுளோடுள்ள ஒப்புரவாகுதல், மன அமைதி, என்றுமுள்ள மீட்பு முதலியவை. தம் மைந்தர் இயேசு கிறிஸ்து இவையெல்லாம் வாங்கிச் சம்பாதித்தமையால் கடவுள் இப்பொழுது அவைகளை நமக்குப் பணமும் விலையுமின்றி இலவசமான நன்கொடைகளாய் அருளி வருகிறார். கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தாரே யானால் பின் அநேகருக்கு இந்த ஈவுகள் ஏன் அருளப்பட வில்லை? கிறிஸ்துவின் மரணம் மதிப்பு குறைந்ததா? கிறிஸ்துவின்மூலம் நமக்கு நியாயமாக கொடுக்கப்பட வேண்டிய நற்பேறுகளைக் கடவுள் கொடுக்க மறுக்கும்

நேற்மையற்ற ஒரு கடவுளா? மேற்சொல்லிய நற்பேறுகள் எல்லா மனிதருக்கும் அருளப்பட கிறிஸ்து மரிக்கவே யில்லை; மாறாக யாருக்கு அவை அருளப்பட்டு வருகின் றனவோ அவர்களுக்காக மட்டும் அவர் மரித்தார் என்பது கண்கூடாகத் தெரிகிறது,

15-ஆம் நியாயம்: கிறிஸ்து நமக்காக மாண்டார்; கிறிஸ்து நம் பாவங்களைச் சுமந்து தீர்த்தார்: நமக்கெனப் பிணையாளியானார், என்பவை அடிக்கடி சொல்லப்பட்டு வருகின்ற கூற்றுகளாகும். இந்தக் கூற்றுகளின் தெளிவான கருத்து என்னவென்றால் கிறிஸ்து பிறருக்கெனப் பிணை பட்டு மரித்து அவர்களுக்கு விடுதலை கிடைக்கும்படி பாடுற்றார் என்பது.

மக்களுக்காக கிறிஸ்து பிணைப்பட்டு மாண்ட பிறகு சிலர் தங்கள் சொந்த பாவங்களைச் சுமந்தவராய் மரிப்பா னேன்? அவர்கள் தாங்களே பாடுற்று மரிக்க வேண்டியதா யிருந்தால் கிறிஸ்து அவர்களுக்குப் பிணைபட்டவர் அல்ல. அவர் அவர்களுக்காக மரிக்கவேயில்லை என்பதே உண்மை.

கிறிஸ்து பொதுவாக யாவருக்காகவும் மரித்தார் என் பதன் உண்மையான கருத்து யாதெனில் அவர் எந்த மனி தனையும் உண்மையாய் மீட்க மரிக்கவேயில்லை என்பது அர்த்தம். ஏனென்றால் அவர் யாவருக்காகவும் மரித்தும் அநேகர் இரட்சிக்கப்படுவதில்லை. அவருடைய திருவுள நோக்கம் நிறைவேறவேயில்லையாக்கும்.

### 8. நாம் சாதித்துக் கூறும் கருத்தை நிரூபித்துக் காட்டும் திருமறை வாக்கியங்கள்

16-ஆம் நியாயம்: நான் பயன்படுத்தக்கூடிய பல திரு மறை வசனங்கள் உண்டு. எல்லா மனிதருடைய பாவங் களையும் போக்கக் கிறிஸ்து மரித்தார் என்பது வேத உப தேசமன்று என்பதை நிரூபித்துக் காட்டும் ஒன்பது வாக்கி யங்களை மட்டும் நான் உங்கள் முன் வைத்து அத்துடன் இந்நூலின் 3-ஆம் பகுதியை முடிக்கிறேன்.

1. ஆதியாகமம் 3:15—தேவமக்களுக்கும் அவர்கள் பகைவருக்கும் உள்ள வேறுபாட்டை பிரித்துக் காட்டும் முதல் வேத வசனம் இதுவே. பெண்ணின் வித்து வேறு; பாம்பின் வித்து வேறு; அதற்கும் இதற்குமிடையே என்றுமுள்ள பகை உண்டாக்கப்பட்டது; இயேசு கிறிஸ்துவும் அவரைப் பற்றும் எல்லா விசுவாசிகளும் ஸ்திரியின் வித்தாகும் (பெண்ணின் வித்தைப்பற்றிய தீர்க்கதரிசன சொற்கள் கிறிஸ்துவிலும் அவருடைய மக்களிலும் நிறைவேறி வருகின்றன);

இயேசுவைப் பற்றும் விசுவாசமற்றோர் யாவரும் பாம்பின் வித்தாகும் (பிசாசுதான் உங்களுக்குத் தந்தை யோவான் 8:44). பாம்பின் வித்துக்கும் பெண்ணின் வித்துக்கும் பகை நீடித்த நாளாய் இருக்குமென விளம்பின கடவுள் பிசாசின் மக்களை மீட்கத் தம் மைந்தரை அனுப்புவாரா? ஸ்திரீயின் வித்தான கிறிஸ்து பாம்பின் வித்தானவர்களுக்காக மரிக்கவில்லை!

2. மத்தேயு 7:23—ஆண்டவர் ஒரு கூட்டத்தாரிடம் ''ஒருபோதும் நான் உங்களை அறிந்ததில்லை'' என்பார். இதற்கு மாறாக தாம் இன்னொரு கூட்டத்தாரைப்பற்றி: ''நான் என்னுடைய ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளுக்காக என் உயிரையும் கொடுப்பேன்'' என்றார். அவர் யார் யாருக்காக மரித்தாரோ அவர்கள் எல்லாரையும் அவர் தவறாமல் அறிந்திருப்பார் அல்லவா? தாம் அறியாத மக்களுக்காக அவர் எப்படி மரித்திருக்கக் கூடும்?

3. மத்தேயு 11:25-27—சில மக்களுக்குக் கடவுள் நற்செய்தியை மறைத்து வைக்கிறதாகத் தெரிகிறது. இதுவே தந்தையின் திருவுளம். கடவுளின் தீர்மானத்தின் விளைவாக நற்செய்தியைப் புரிந்து கொள்ள மாட்டாத மக்களுக்காக கிறிஸ்து மரிக்க வேண்டியது அவசியமில்லை. தந்தை மக்களிடையே சிலரைப் புறக்கணித்து வேறு சிலரைந்

தெரிந்து பாகுபாடு செய்யும் தீர்ப்புக்காகக் கிறிஸ்து அவரைப் புகழ்ந்து போற்றுகிறார். கிறிஸ்து மகிழ்ச்சியோடு ஏற்கும் தீர்மானத்தை மக்கள் ஊழியர் அநேகர் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்!

4. யோவான் 10: 11, 15, 16, 27, 28-இந்த வசனங்களின்மூலம் தெற்றெனத் தெரிகிறவை கீழ்க்காணுமாறு:—

அ. உலகில் எல்லா மக்களும் ஆண்டவருடைய ஆடுகளல்ல.

ஆ. ஆடுகள் என்றும் கிறிஸ்துவின் ஆடுகள் அல்லாதார் என்றும் மக்கள் யாவரும் வேறு கூட்டங்களாகப் பிரிக்கப்படும் நாள் ஒன்று வரப் போகிறது.

இ. ஆயனுடைய குரலைக் கேட்கும் மக்கள் கிறிஸ்துவின் ஆடுகள். மற்றவர்கள் அவருடைய குரலைக் கேட்க மாட்டார்கள்.

ஈ. இதுவரை ஆடுகளாய்த் தோன்றாமல் மந்தையில் சேர்க்கப்படாதார் உண்டு. அவர்கள் ஆயனுக்குச் சொந்தமான ஆடுகளாவதற்குத் தெரிந்துக் கொள் ளப்பட்டதினால் அவர்களும் நடத்திக் கொண்டு வரப்படுவர் (வச. 16).

உ. கிறிஸ்து எல்லாருக்காகவும் பொதுவாய் மரிக்காமல் குறிக்கப்பட்ட தம் சொந்த ஆடுகளுக்காக மட்டும் மரித்தார்.

ஊ. தந்தை தமக்குக் கொடுத்தவர்களுக்காகக் கிறிஸ்து மரித்தார். ஆகவே, தமக்குக் கொடுக்கப்படாதவர்களுக்காக அவர் மரிக்கவேயில்லை என்பது அர்த்தம்.

5. ரோமர் 8:32-34—கிறிஸ்துவின் மரணத்தாலாகும் நற்பேறுகள் கடவுள் தேர்ந்து கொண்ட மக்களுக்கேயுரியன;

அவர்களுக்காகத்தான் இயேசு கிறிஸ்து பரிந்து வேண்டுதல் செய்கிறார்.

6. எபேசியர் 1:7- கிறிஸ்துவின் இரத்தம் யாருக்கெனச் சிந்தப்பட்டதோ அவர்களுக்குப் பாவ மன்னிப்பாகிய மீட்பு கிடைத்துவிடும். ஆனால் எல்லாரும் மன்னிக்கப்பட்டு மீட்கப்படுவர் எனச் சொல்வதற்கில்லை. ஆகவே கிறிஸ்து யாவரையும் மீட்க மரித்தார் என்று நாம் சொல்லலாகாது.

7. 2 கொரிந்தியர் 5:21- நாம் தேவனுடைய நீதியாகும்படி, கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டார். ஆகவே, தேவனுடைய நீதியாக்கப்படும் மக்களுக்காக அவர் பாவமாக்கப்பட்டார். எல்லாருக்காகவும் அவர் பாவமாக்கப்பட்டிருந்தால் எல்லாரும் நீதியாக்கப்பட வேண்டியது நியாயமாகுமன்றோ? ஆனால் எல்லாரும் நீதிமான் எனத் தீர்க்கப்படுவர் என்று சொல்வதற்கு வேதமெங்கும் ஆதாரம் இல்லை. ஆகவே நீதிமானாக்கப்படும் மக்களுக்காக மட்டும் கிறிஸ்து மரித்தார் என்பது நிச்சயம்.

8. யோவான் 17:9- பிதா தம்மிடம் ஒப்படைத்தவர்களுக்காக கிறிஸ்து மன்றாடினார்; உலகம் உள்ள அனைவருக்காகவும் அல்ல. யாருக்கென மன்றாட்டு செய்கின்றாரோ அவர்களுக்காகத்தான் மரித்திருக்க வேண்டும் (2-ஆம் பகுதி 4-ஆம் பிரிவும் 5-ஆம் பிரிவும் பார்க்க).

9. எபேசியர் 5:25-கிறிஸ்து திருச்சபைமீது அன்பு கூர்ந்தார்: அவ்வாறே கணவன் தன் மனைவியிடம் அன்பு கூற வேண்டும். கிறிஸ்து திருச்சபை அல்லாத மக்களையும் நேசித்து அவர்களுக்காக மரித்திருப்பாரேயானால் கணவன் தன் மனைவியை நேசிப்பதோடு பிற பெண்களையும் நேசிக்கலாமா?

வேறு சில நியாயங்களையும் சேர்த்து எழுதலாமென யோசித்திருந்தேன். ஆனால் மேற்கண்டவை போதும். ஆகவே இத்துடன் முடிக்கிறேன்.

# 4

நான்காம் பகுதி

## இயேசு எல்லாரையும் மீட்கமரித்தார் என திருமறை போதிக்கிறதாகச் சாதிக்கும் வாதிகளுக்கு நான் கூறும் பிரதிவாதம்.

பிரிவு 1 — அனைத்துலக மீட்புக்கோளுக்கு ஆதாரமாகத் தோன்றும் நான்கு கருத்துகளுக்கு ஒரு மறுப்பு.

,, 2 — 'உலகம்' என்ற சொல்லைப் பயன்படுத்தும் வசனங்களின் உண்மையான கருத்து.

,, 3 — யோவான் 3:16-ஆம் வசனத்தை நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தல்.

,, 4 — 1 யோவான் 2:1,2; இப்பகுதியை நுட்பமாக விளக்கஞ் செய்தல்.

,, 5 — ஆறு திருமறை பகுதிகளின் சுருக்கமான விளக்கம்.

,, 6 — 'எல்லாரும்' 'எல்லாரையும்' இவைகளையும் இவைகளைப் போன்ற சொற்களையும் பயன் படுத்தும் வசனங்களின் உண்மையான விளக்கம்.

,, 7 — மீட்கப்படும் மக்கள் கெட்டு அழியக்கூடும் எனச் சில திருமறை வசனங்கள் போதிக்கிற தாம். அவ்வாறு போதிக்கிறதாகத் தோன்றும் வசனங்களின் உண்மையான விளக்கம்.

,, 8 — தவறான சில கருத்துகளுக்கு ஒரு மறுப்பு.

(கவனம்: 1648இல் ஜாண் ஓவன் இயற்றிய நூலில் அவர் இந்த நான்காம் பகுதியின் பொருளை ஒழுங்கு படுத்திய முறையை நாங்கள் சற்று மாற்றியுள்ளோம். வாசிக்கும் நேயர்களுக்கு இன்னும் கருத்து தெளிவாயிருக்க வேண்டும் என்பது எங்கள் நோக்கம்).

**1. அனைத்துலக மீட்புகோளுக்கு ஆதாரமாய்த் தோன்றும் நான்கு கருத்துகளுக்கு ஒரு மறுப்பு**

1-ஆம் கருத்து: கிறிஸ்து தம் மரணத்தால் முடித்த செயலைப்பற்றி மிகவும் பொதுவாகவும், தெளிவில்லாத விதமாகவும் கூறும் சில வேத வாக்கியங்கள் உண்டு. ஆகவே, குறிக்கப்பட்ட ஒரு திட்டமான மீட்பு நோக்கத்தை நிறைவேற்றக் கிறிஸ்து மரித்திருக்க மாட்டார் எனக் கூறுவர் சிலர்.

எடுத்துக்காட்டாக, கிறிஸ்துவின் மரணம் எல்லையற்ற மதிப்பிற்குரியதெனத் திருமறை கூறுகிறது. சிந்துண்ட இரத்தம் கடவுளின் சொந்த இரத்தம் என்று அப்போஸ்தலர் 20:28 கூறுகிறது. ''கிறிஸ்துவின் இரத்தம் இன்னும் எவ்வளவோ வல்லமையுள்ளதாய் இருக்குமென்றோ? அவர் என்றுமுள்ள தெய்வ ஆவியால் தம்மைத் தாமே மாசற்ற பலியாகக் கடவுளுக்குப் படைத்தார்'' (எபி. 9:14). ''நீங்கள் வெள்ளி அல்லது பொன்போன்ற அழியக்கூடிய பொருள்களினாலன்று, மாசு மறுவற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலை மதிப்பில்லாத இரத்தத்தினால் விடுவிக்கப்பட்டீர்கள் அல்லவா?'' (1 பேதுரு 1:18,19). ஆகவே, எல்லையற்ற மதிப்பிற்குரிய இந்த மரணமானது எல்லா மக்களையும் மீட்க வல்லது என்றும் எல்லாரையும் விடுவிக்கப் போதுமான ஒரு விலைக்கிரயம் என்றும் சொல்லக்கூடாதா?

எல்லா மக்களையும் மீட்கக் கிறிஸ்துவின் மரணம் போதுமானதென்பதை மறுக்க நாம் விரும்புவதில்லை. ஆனால் யாவரையும் அந்த [மரணத்தால் விடுவித்து

மீட்பது கடவுள் தம் திருவுளத்தில் கொண்ட நோக்க மன்று. பின்வரும் பிரிவுகளில் இந்தக் கருத்து சற்று விரிவாய் விளக்கஞ் செய்யப்படும். கிறிஸ்து எல்லாரையும் மீட்க மரிக்காதிருந்தால் யாவரிடத்திலும் நற்செய்தியைக் கூறியறிவிப்பது பயனில்லை என்று சொல்லவேண்டும். ஆனால் கிறிஸ்து தாமே: ''நீங்கள் உலகெங்கும் போய், படைப்புகளான யாவருக்கும் அருட்செய்தியை அறிவியுங் கள்'' (மாற்கு 16:15) எனக் கட்டளையிட்டார் அல்லவா ? இதற்கு நான் கூறும் மறு உத்தரவு கீழ்க்காணுமாறு:

அ. எல்லா நாடுகளிலும் இனத்தவர்களிலும் மீட்கப் படவேண்டிய மக்கள் ஆங்காங்கு சிதறியிருக்கின்றனர். அவர்கள் எல்லாரையும் கூட்டிச் சேர்க்க அருட்செய்தி எல்லா நாட்டினரிடத்திலும் கூறியறிவிக்கப்பட வேண்டும்.

ஆ. கிறிஸ்து இவ்வுலகில் பிறவாததற்கு முன்னுள்ள காலத்தில் யூத இனம் சில சிறப்பு உரிமைகளை அனுபவித்த மக்களாயிருந்தனர். ஆனால் இப்பொழுதோ அருட்செய்தி யைக் கேட்கும் காரியத்தில் யூத இனத்திற்காவது வேறெந்த இனத்திற்காவது சிறப்பு உரிமை எதுவும் கிடை யாது. ஆகவே ஓரவஞ்சனையின்றி யாவரிடத்திலும் நற் செய்தியைக் கூறியறிவிக்க வேண்டியது நமது கடமை.

இ. நற்செய்தியை நாம் மக்களுக்குக் கூறும்போது தொடக்கத்தில் கிறிஸ்து அவர்களுக்காக குறிப்பாகவும் தனி யாகவும் மரித்தார் என்பதை அவர்கள் நம்பவேண்டும் என்பது நமது கருத்தன்று. இயேசுவைத் தவிர வேறு மீட்பர் ஒருவருமில்லை என்பதை நாம் தொடக்கத்தில் கூறவேண்டும். அந்தக் கூற்றை அவர்கள் முதலாவது விசு வாசித்து நம்பவேண்டும்.

ஈ. நற்செய்தியைக் கேட்கும் மக்களிடையே யார் யார் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை நாம் அறியோம். ஆகவே நாம் பொதுவாக யாவரையும்

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க அழைக்க வேண்டியது நமது கடமை. அவ்வாறு உண்மையாய் விசுவாசிக்கும் மக்கள் யாவரும் இரட்சிக்கப்படுவர் என்று நாம் வாக்களித்து அவர்களுக்குத் தைரியமூட்ட வேண்டும். விசுவாசிக்கும் மக்கள் யாவரையம் மீட்கக் கிறிஸ்துவின் மரணம் போதுமே. போதும் அன்றோ?

ஆகவே யாவரும் மீட்கப்பட்ட வேண்டும் என்பது கடவுளின் நோக்கமும் திட்டமுல்லாவிட்டாலும் யாவரிடத்திலும் நாம் நற்செய்தியைக் கூறியறிவிக்க வேண்டியது நம் கடமையாகும்.

2-ஆம் கருத்து: கிறிஸ்துவின் மரணத்தால் மீட்கப்பட்டதாகத் தெரிகிற சில மக்கள் கெட்டழிந்து போவதுண்டு, ஆகவே, கிறிஸ்து யாவரையும் மீட்க மரித்தும், ஒருசிலர் அந்த மீட்பின் நற்பேறுகளைத் தொடர்ந்துபற்றிப் பிடித்து இரட்சிக்கப்படுவர். வேறு சிலர் அந்த நற்பேறுகளைத் தூர எறிந்து கெட்டுப் போவார்கள் எனக் கூறுவாருமுண்டு.

வேதம் பலவிடங்களில் மக்களின் உண்மையான நிலையை அன்று அவர்களின் வெளித்தோற்றமாயுள்ள நிலையைக் குறிப்பிடுகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. உதாரணமாக, மத்தேயு 27 : 53இல் எருசலேம் பட்டணம் 'திருநகரம்' என்றழைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதுவோ வெளித்தோற்றத்தில் யூத மதத்தின் திருநகரமாயினும் உண்மையில் அது இயேசுவினால் புறக்கணிக்கப்பட்ட நகரமாயிற்று.

அதுபோல, திருச்சபையாருடன் பழகி வருகிற மக்கள், வெளித்தோற்ற அளவில் கிறிஸ்தவர்களாய்த் தோன்றுகின்றமையால், பரிசுத்தவான்கள் என்றாவது புனிதமான மக்கள் என்றாவது, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றாவது அழைக்கப்படுவர். "உங்கள் எல்லா

ரையும்பற்றி நான் இவ்வாறு எண்ணங்கொள்வதற்கு நியாயம் உண்டு'' என்பதாக பவுல் பிலிப்பி பட்டண விசுவாசிகளைப்பற்றி எழுதினார் (1:7). ஆனால், அந்நிருபம் எழுதப்பெற்ற மக்கள் ஒவ்வொருவரும் உண்மையான விசுவாசிகள் என்று நாம் அதனால் முடிவு செய்துகொள்ள வழியில்லை. பவுல் தமக்குத் தெரிந்த அளவில் எழுதப் பெற்ற சபையார் எல்லாரும் உண்மையான கிறிஸ்தவர்கள் எனக் கருதினார். அவர்களுள் ஒருசிலர் தவறி கெட்டுப் போயிருந்தாலும், கடவுள் எல்லாரையும் மீட்க யோசித்தார்; ஆனால் சிலர் விடாமல் பற்றிக் கொள்ளாததால் கடவுளால் அவர்களை இரட்சிக்க இயலவில்லை என்று நாம் கூறுவதற்கில்லை. கெட்டழியும் மக்கள் தொடக்கத்தில் நல்ல விசுவாசிகளாய்த் தோன்றியும் உண்மையான விசுவாசிகளாயில்லை என்பது நிச்சயம் (7-ஆம் பிரிவு பார்க்க).

3-ஆம் கருத்து : விசுவாசம் என்னும் நிபந்தனையின் பேரில் மீட்பு யாவருக்கும் பொதுவாய் வாக்களிக்கப்படுவதாகக் கூறும் சில வேதவர்க்கியங்கள் இருக்கின்றன ஆகவே கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்திருப்பாராக்கும். என்பது பலருடைய முடிவு.

மீட்புக்கும் விசுவாசத்திற்கும் இன்றியமையா தொடர்பு உண்டு என்று வேதம் கூறுகிறது மெய்தான். 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்' அதாவது, உண்மையான விசுவாசிகள் எல்லாரும் இரட்சிக்கப்படுவர் என்பது அர்த்தம். விசுவாசம் என்கிற கட்டுப்பாட்டின்மீது கடவுள் எல்லாரையும் மீட்க ஏற்பாடு செய்துள்ளாரென்பது அர்த்தமாகாது; ஏனென்றால்:

அ. கடவுள் தமது நித்திய ஜீவனை யாவருக்கும் தருவதில்லை. மேலும் கிறிஸ்துவின் நற்செய்தியை எல்லாரும் கேட்டதில்லை. சுவிசேஷத்தைக் கேட்காதார் எத்தனை ! எத்தனை !!

ஆ. கடவுளின் பொதுவான வெளிப்படை கட்டளைகள் வேறு; அவருடைய மறைவான திட்டங்கள் வேறு (உபா. 29 : 29). மக்கள் தமக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது அவருடைய பொதுவான கட்டளை; அவர் நமக்கு அதை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் பார்வோன் அரசனைப் பொருத்த அளவில் கடவுள் தாம் வெளிப்படுத்திய பொதுவான கட்டளைக்கு மாறாக அவ்வரசனின் இருதயத்தைக் கடினப்படுத்துவதாக ஏற்கெனவே மோசேக்கு அறிவித்தார் (யாத். 4:21). ஆகவே, கடவுளுக்குக் கீழ் அடங்க வேண்டியது அவ்வரசனுடைய கடமையாகும்; ஆனால் அவன் கீழ்ப்படியாதவாறு அவனைக் கடினப்படுத்துவதே கடவுளின் மறைவான திட்டமாயிற்று.

இ. விசுவாசத்திற்கும் மீட்புக்கும் இன்றியமையாத தொடர்பு உண்டு என்பதை நற்செய்தி கூறுகிறது உண்மைதான். ஆனால் எல்லாரும் மனம் மாறி நம்புவர் என்பது கடவுளின் திட்டம் என்றெண்ணுவதற்கு ஆதாரம் கிடையாது. மீட்படைவதற்காகக் குறிக்கப்பட்ட திரளான மக்களைத் தெரிந்து கொண்டார் அல்லவா ? அனைத்துலக மீட்பு என்கிற கொள்கை தெரிந்து கொள்ளுதல் என்ற உண்மைக்கு முரண்படுகிறது. கடவுள் எல்லாரையும் மீட்க யோசித்தார் என வைத்துக்கொள்வோம். அவரால் தம் யோசனையை ஏன் நிறைவேற்ற இயலவில்லை ?

மக்களின் விசுவாசமின்மை காரணமாகக் கடவுள் தம் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை எனக் கூறுவது பயனில்லை. அவர்கள் விசுவாசிக்க மாட்டார்கள் என்று கடவுள் ஏற்கெனவே அறிந்திருப்பார் அல்லவா ? அவ்வாறிருக்க ஏற்கெனவே இன்னின்ன நபர்களைத் தாம் இரட்சிக்கப் போவதில்லை என்று திட்டமாய்த் தெரிந்திருந்தும் கடவுள் அவர்களை மீட்க யோசிப்பது என்ன பயன் ?

அதோடுகூட விசுவாசிக்கப் போகும் மக்களும், விசுவாசிக்க மாட்டாத மக்களும் வெவ்வேறு தனி கூட்டங்களாய் உலகில் வாழ்கிறதில்லை. மாறாக, அவர்கள் ஒருவரோடொருவர் இடையிடையே வாழ்ந்து வருகின்றனர். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் யார் யார் என்பதைப் பிரசங்கி அறிய இயலாது. ஆகவே, அவன் நற்செய்தியை எல்லாருக்கும் பொதுவாகவும் வேறுபாடில்லாமலும் கூறியறிவிக்க வேண்டும். விசுவாசிக்கும் மக்கள் யர்வரும் மீட்படைவர் என்ற நற்செய்தியை யாவருக்கும் பொதுவாகக் கூறியறிவிக்க வேண்டியது அவனுடைய கடமையாகும். கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொள்வது விசுவாசத்தால் மட்டும் ஆகும். இந்த விசுவாசப்பற்று கடவுள் ஈவாகும். தாம் விரும்பும் மக்களுக்கு அதை ஈவாக அருளிவருகிறார்; ஆகவே, அவர் யார் யாருக்கு இந்த ஈவை அருளாதிருக்கிறாரோ, அவர்களை மீட்க அவர் திட்டமிட்டது கிடையாது என்பது அர்த்தம்.

4-ம் கருத்து: கிறிஸ்து யாவரையும் மீட்க மரிக்கவில்லை எனில், பின், எல்லாரையும் பொதுவாய் விசுவாசிக்க அழைக்கும் வேத வசனங்களின் பயன் என்ன ? இரட்சிப்புக் கேதுவான விசுவாசம் நாளுக்கு நாள் ஒழுங்காக வளரும் தன்மையுடையது. தொடக்கத்தில், கிறிஸ்து எனக்காய்த் தனிப்பட்டமுறையில் மாண்டார் என்பதை விசுவாசிக்க வேதம் என்னை அழைக்கிறதில்லை. ஆரம்பத்தில் மக்கள் யாவரும் பொதுவாய் நம்பக்கூடிய சில உண்மைகளை விசுவாசிக்க நம்மை அழைக்கிறது. எடுத்துக்காட்டாக:

அ. மக்கள் பாவிகளாயிருக்கின்றமையால் அவர்கள் தங்களையே இரட்சித்துக் கொள்ள முற்றிலும் திராணியற்றவர்கள் என்ற உண்மையை அவர்கள் நம்பவேண்டும். இது உண்மை என்பதை நிரூபித்துக் காட்டும் சான்றுகள் பல இருக்கின்றன. இவை மனிதனுடைய உள்ளத்திலிருந்தே எழும்புகின்ற சான்றுகளாகும் (ரோமர் 1-3). மறுக்க இயலாத இத்தனை சான்றுகள்

இருந்தும் எத்தனை எத்தனையோ பாவிகள் இந்த ஆரம்ப உண்மையைக்கூட ஒப்புக்கொள்ளமாட்டார்கள்!

ஆ. கடவுள் தம் மைந்தர் இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படுவதற்கான ஒரே நல்வழியைத் திறந்து வைத்திருக்கிறார் என்ற உண்மையை நம்ப நற்செய்தி பாவிகளை ஏவியழைக்கிறது. ஆனால் இந்த நற்செய்தியைக் கேட்ட எத்தனையோ மக்கள் அதை ஏற்க மறுத்து அதற்கு ஆதாரமாயுள்ள பல சான்றுகளை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

இ. இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு மீட்பர் எவரும் இல்லை என்ற உண்மையையும் நம்ப வேதமும் நற்செய்தியும் நம்மை அழைக்கிறது. யூதர்களோ அதையே நம்ப மறுத்தனர் இயேசு கடவுளால் சபிக்கப்பட்ட மோசக்காரன் என அவரை இகழ்ந்தனர்.

மேற்படி பொதுவான அழைப்பு சுவிசேஷத்தைக் கேட்கும் மக்கள் யாவருக்குமுரியது. இந்தத் தொடக்க உண்மைகளை நம்பும் மக்கள் மட்டும் பின்னர் கிறிஸ்து தங்களுக்கெனக் குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் மரித்தார் என்பதையும் விசுவாசிக்கலாகும்.

**2. 'உலகம்' என்ற சொல்லைப் பயன்படுத்தும் வசனங்களின் உண்மையான கருத்து.**

திருமறையின் முழு கருத்திற்கும் இசைந்தவாறு வசனத்தை, ஏன், வேதத்தின் எந்தப் பகுதியையும், விளக்கஞ் செய்தல் வேண்டும். வேதமே வேதத்திற்குத் தெய்வீக விளக்கவுரையாகும். திருமறையின் முழு மொத்தக் கருத்துக்கு முரண்படுகிற முறையில் நாம் எந்த வாக்கியத்தையும் விளக்கஞ் செய்யக்கூடாது.

ஒரே சொல்லுக்கு முன் பின்னுள்ள வசனங்களுக்கேற்ப வெவ்வேறு கருத்துகள் இருக்கலாம் 'உலகம்' என்ற சொல்லுக்கு ஐந்து வெவ்வேறு கருத்துகள் இருக்கின்றன.

1. நாம் குடியிருக்கும் பருப்பொருளான உலகம்

| | |
|---|---|
| யோபு | 34:13 |
| மத். | 13:38 |
| அப். | 17:24 |
| எபே. | 1:4 முதலியவை |

2. உலக மக்கள் ஒருவராகிலும் விலக்கப்படாமல் உலக மக்கள் எல்லாரும்—ரோமர் 3:6.

   இனவேற்றுமை முதலிய வேற்றுமைகள் காட்டாதவாறு உலக மக்கள் எல்லாரும்—யோவான் 7:4.

   மக்கள் பலர்—மத். 18:7.

   மக்கள் பெரும்பாலார்—ரோமர் 1:8.

   அன்றைய ரோமை பேரரசு—லூக்கா 2:1.

   உலகில் நல்ல மனிதர்—யோவான் 6:33.

   உலகின் தீய மக்கள் — யோவான் 14:7 — முதலியவை.

3. பொல்லாப்பு நிறைந்த யுகம்—கலா. 6:14—முதலியவை.

4. அரசியல் உலகம்—யோவான் 18:37—முதலியவை.

5. சாத்தானுடையஆட்சி— யோவான் 14:30—முதலியவை.

ஒரு சொல்லானது எப்பொழுதும் வேதமெங்கும் ஒரே பொருள் கொள்ளும் என்று மறுப்பு கூறுவாருண்டு. ஆனால்

அந்த மறுப்பு ஒப்புக்கொள்ளப்படக்கூடிய ஒரு கருத்தன்று. ஒரே வசனத்தில் இரண்டு வெவ்வேறு பொருள்கள் கொண்ட சொற்கள் சில வேதப் பகுதிகளில் உண்டு. உதாரணமாக, மத்தேயு 8:22இல் ''இறந்தோர் தம் இறந்தோரை அடக்கஞ் செய்யட்டும்''. முதலாம் 'இறந்தோர்' [என்ற சொல்] நிலைபெறு வாழ்வைப் பெறாதவரைக் குறிக்கும். இரண்டாம் 'இறந்தோர்' உடலுயிரற்றவரைக் குறிக்கும். யோவான் 1:10இல் 'உலகம்' என்னும் சொல்லுக்கு மூன்று வெவ்வேறு கருத்துகள் உண்டு.

1) மக்கள் குடியிருப்பிற்கு ஏற்ற உலகம்.

2) படைக்கப்பட்ட பூமி.

3) உலகம் மக்களும் ஒரு பெரும் பகுதியார்.

சிலவிடங்களில் ''உலகம்'' என்ற சொல்லானது எல்லா மக்களையும் குறிக்காமல் ஒருசில மக்களை மட்டும் குறிக்கின்றது; கீழ்க்காணுமாறு:—

லூக்கா 2:1— ''உலகமெங்கும்''—ரோம பேரரசெங்கும். உலகிலுள்ள எல்லா மக்களும் என்பது அர்த்தமன்று.

யோவான் 1 : 10—'' உலகமோ அவரை அறிந்து கொள்ளவில்லை'' ஆனால் சிலர் அவரை ஏற்றுக்கொண்டார்சுள்; சிலர் அவருடைய திருப்பெயரில் நம்பிக்கை வைத்தார்கள் (1 : 12) ஆகவே, இவ்விடத்தில் 'உலகம்' எல்லா மக்களையும் குறிக்காது.

யோவான் 8 : 25—''நான் உலகத்திற்குச் சொல்லுகிறேன்'' ஆனர்ல் அவர் சொல்லக் கேட்டவர்கள் யூத மக்களுள் ஒரு சிலர். இவ்விடத்தில் 'உலகம்' என்ற சொல் உலகத்தின் குடிகள் எல்லாரையும் குறிக்கின்றதில்லை.

யோவான் 12 : 19—''இதோ, உலகமே அவன் பின்னே போய்விட்டது,'' இதன் கருத்துயாதெனில்; ''நம் இனத்து

மக்களுள் பெரும்பகுதியார் அவன் பின்னே போய் விட்டனர்'' என்பது. இவ்வசனத்திலும் 'உலகம்' எல்லாரையும் குறிக்காது.

1 யோவான் 5 ; 19—''உலகம், முழுவதும் தீயோனுடைய ஆட்சிக்குள் இருக்கிறது'' ஆனால் உண்மையான விசுவாசிகள் பலர் உலகத்தில் வாழ்ந்து வருகின்றனர்; அவர்கள் தீயோனுடைய ஆட்சிக்குட்பட்டவர்கள் அல்ல. ஆகவே, 'உலகம்' என்ற சொல் இவ்விடத்திலும் உலக மக்கள் ஒவ்வொருவரையும் குறிக்காமல் உலக மக்களுள் ஒரு பெரும் பகுதியைக் குறிக்கின்றது.

ஆகவே, மீட்பைப்பற்றிய பகுதிகளிலும், 'உலகம்' என்ற சொல்லானது உலக மக்கள் ஒவ்வொரு தனி நபரையும் குறிக்காமல் அவர்களுள் பெரும்பகுதியைக் குறிக்கின்றது என்பது நமது நியாயமான முடிவு.

இறையியல் தாதிகளில் சிலர் 'உலகம்' என்ற சொல்லைப் பபன்படுத்துகின்ற திருமறைப் பகுதிகளை ஆதாரமாக வைத்து (யோவான் 1 : 29; 3 : 16; 4 : 42; 6 : 61; 2 கொரி. 5 : 19; 1-யோவான் 2 : 2 போன்ற வசனங்கள்) கீழ்க்காணும் முக்கூற்றுத் தர்க்க ரீதியைக் கூறுவர்.

1. உலகம் மக்கள் யாவரையும் (உட்கொண்டிருக்கிறது. மற்றும் தோன்ற இருக்கிற ஒவ்வொருவரும்)
2. கிறிஸ்து உலகத்திற்காக மரித்ததாக கூறப்படுகிறது.
3. ஆகவே கிறிஸ்து உலகத்தில் தோன்றியுள்ள மற்றும் தோன்றயிருக்கும் மக்கள் ஒவ்வொருவருக்காகவும் மரித்தார்.

ஆனால் மேற்படி வாதத்தில் தர்க்க ரீதிக்கு மாறான ஒரு தப்பிதம் உண்டு. 'உலகம்' என்ற சொல் இரண்டு வெவ்வேறு கருத்துகளைக் குறிக்கிறது. முதற் கூற்றில் படைக்கப்பட்ட கோளாகிய பூமியைக் குறிக்கும். ஆனால்

இரண்டாம் கூற்றிலோ அந்த பூமியெனும் கோளில் வாழ்ந்து வருகிற மக்களைக் குறிக்கின்றது. முதற் கூற்றுக்கும் இரண்டாம் கூற்றுக்கும் தர்க்கத் தொடர்பு கிடையாது. ஆகவே முடிவு சரியாயிருப்பதற்கு வழி யில்லை. கிறிஸ்து பூமியெனும் கோளுக்காக மரித்தார் என் பதை ரூபகாரப்படுத்த விரும்புவோருக்காக மட்டும் மேற் படி முக்கூற்று வாதரீதி பயன்படும்.

ஆகவே, சிலர் மேற்கூறிய வாதத்தைத் திருத்த முயற்சி செய்கின்றனர்; கீழ்க்காணுமாறு :

1. சில வேதப் பகுதிகளில் உலகம் என்ற சொல்லானது உலகத்தார் எல்லாரையும் ஒவ்வொருவரையும் குறிக் கின்றது.
2. கிறிஸ்து உலகத்திற்காக மரித்ததாக கூறப்படுகிறது.
3. ஆகவே, கிறிஸ்து உலகத்தில் தோன்றியுள்ள மற்றும் தோன்றயிருக்கும் மக்கள் ஒவ்வொருக்காகவும் மரித்தார்.

ஆனால் இந்த வாதத்திலும் தர்க்கரீதிக்குச் சில தவறு கள் காணப்படுகின்றன. முதற்கூற்றில் சில வேதப்பகுதி களில் என்றிருக்கிறது. எல்லா வேதப் பகுதிகளிலும் என்றிருந்தால் மாத்திரம் தர்க்கரீதி நியாயமாகும். மற்றப்படி அது பயன்படாது. இரண்டாம் கூற்றும் திருத்தப்படவேண்டும். ஏனென்றால் சில வேதப்பகுதிகள் கிறிஸ்து உலகத்திற்காய் மரித்தார் என்றிராமல் கிறிஸ்து ஆடுகளுக்காய் அல்லாவிட்டால் திருச்சபைக்காய் மரித் தார் என்கின்றன.

பின்னும் நாம் இந்த முற்கூற்று வாதத்தை மீண்டும் ஒருமுறை திருத்த முயற்சி செய்வோமாக :

1. சில வேதப் பகுதிகளில் 'உலகம்' என்ற சொல் எல்லா மக்களையும் குறிக்கிறது.

2. சில வேதப் பகுதிகளில் கிறிஸ்து முழு உலகத்திற்காக மரித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

3. ஆகவே, கிறிஸ்து உலக மக்கள் ஒவ்வொரு தனி நபருக்காகவும் மரித்தார்.

ஆனால் இந்த முக்கூற்று வாத ரீதி இகழப்படத்தக்கது என்பது யாவருக்கும் பிரத்தியட்சமாக தெரிகிறது அன்றோ? முதற்கூற்றின் 'சில வேதப் பகுதிகள்' இரண்டாம் கூற்றின் 'சில வேதப்பகுதிகள்' இரண்டும் அதே வேத வசனங்களைக் குறித்தாலொழிய இந்த ரீதி பயன்படாது. அது எதையும் மெய்யெனக் காட்டாது. அது மட்டுமன்றி, முதற்கூற்று 'சில' என்ற சொல்லை ஆதாரமாகக் கொண்டு மூன்றாவது கூற்று 'எல்லாரையும்' அல்லது 'ஒவ்வொருவரையும்' எனக் கூறுவதற்கு எந்த நியாயமும் கிடையாது.

ஆகவே, தொடக்கமாக, உலகம் என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்ற தர்க்க ரீதிகளில் தவறுகளை நான் திறந்து காட்டியாயிற்று. மேற்படி கூற்றுகளைக் காட்டிலும் உதவாத வலுவற்ற வாதரீதிகள் எங்கேயாகிலும் காணப்பட்டதுண்டா? தர்க்க ரீதி கூற்றுகளை விட்டுவிட்டுப் பொருத்தமான திருமறை பகுதிகளையே விளக்கஞ் செய்வோமாக.

**3. யோவான் 3:16-ஆம் வசனத்தை நுணுக்கமாக ஆராம்ச்சி செய்தல்.**

அநேகர் இவ்வசனத்தைக் கீழ்க்காணுமாறு விளக்க முயல்வர்:

''அன்பு கூர்ந்தார்''—கடவுளுக்கு இயற்கையாக எல்லாருக்கும் நன்மை செய்யும் விருப்பம் இருப்பது.

''உலகத்தின்மீது''—உலகில் தோன்றியதும் தோன்றப் போகிறதுமான மனித இன மக்கள் எல்லாரும்.

''அவரைத் தந்தருளினார்''—ஒருவனையாவது நிச்சயமாக மீட்பதற்கென்று அல்ல. ஆனால் எல்லாருக்கும் இரட்சிக்கப்படுவதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்குமாறு கடவுள் தம் மைந்தரைத் தந்தருளினார்.

''எவனோ''—விசுவாசிக்கக்கூடிய தன்மை இயற்கையாக வாய்ந்தவர்.

''மெய்வாழ்வைப் பெறும்படி''—யாரானாலும் அதினால் மெய்வாழ்வைப் பெறலாம்.

மாறாக, நாம் இந்த அடிப்படை வேத வாக்கியத்தை விளங்கிக் கொள்ளுகிறது பின்வருமாறு:—

''அன்பு கூர்ந்தார்''—தாம் தெரிந்துகொண்ட கணக்கில்லா மக்களில் கடவுள் சிறப்பான ஒப்பற்ற அன்பு கொண்டு வகுத்த திட்டம்.

''உலகத்தின்மீது''—முழு உலகில் எல்லா நாடுகளிலும் இனங்களிலும் மொழிகளிலும் சிதறியிருக்கும் தம் மக்கள் அனைவரையும் மீட்பதற்காக.

''அவரைத் தந்தருளினார்''—தம் மைந்தரை வல்லமை வாய்ந்த பூரண இரட்சகராய் உலகிற்கு அனுப்பி வைத்தார்.

''எவனோ''—மெய்விசுவாசிகள் யாவரும், யாரானாலும் தவறாது இரட்சிப்படைய உறுதிப்படுத்தியுள்ளார்.

''மெய்வாழ்வைப் பெறும்படி''—தாம் அவர்களுக்கென பட்டபாடுகளினால் மெய்வாழ்வுக்குரிய எல்லா நற்பேறுகளையும் பெறுவதற்காக ஆண்டவர் நிச்சயமான ஏற்பாடு செய்தார்.

கருத்தாய் கவனிக்கப்படவேண்டிய மூன்று காரியங்கள்.

அ. கடவுளின் அன்பு.

ஆ. அன்பு கூறப்படுகின்ற பொருள்—உலகம்.

இ. கடவுள் அன்பு கூரும் நோக்கம்— விசுவாசிகள் கெட்டும் போகாமல் மெய் வாழ்வைப் பெறுதல்.

1. கடவுளிடம் எந்தக் குறைபாடுமில்லை என்பதை மறவாதீர். ஆகவே அவர் குறைபாடுள்ளவராயிருப்பதாக நாம் அவரைப்பற்றி எதையும் கூறவே கூடாது. அவர் ஆற்றும் செயல்கள் யாவும் குறையற்ற பூரணமானவை. ஆனால அவர் யாவரையும் பொதுவாய் நேசித்து யாவரையும் மீட்க முயற்சி செய்தும் ஐயோ! அநேகர் அவரால் இரட்சிக்கப்படமுடியவில்லை என்போமானால், அவருடைய வல்லமை குறைவுள்ளது, அவருடைய விருப்பமும் மகிழ்ச்சியும் பெலவீனமானது என்று அர்த்தம்.

கடவுள் இயற்கையாக எல்லாருக்கும் நன்மை செய்ய விரும்புகிறார் என வேதம் எங்கும் கூறுவதில்லை. மாறாக, ''யாருக்கு நான் இரக்கங் காட்ட விரும்புகிறேனோ அவனுக்கு இரக்கங் காட்டுகிறேன்; யாரிடம் உருக்கங்கொள்ள விரும்புகிறேனோ அவனிடம் உருக்கங்கொள்ளுகிறேன்'' (ரோமர் 9: 15).

கட்டுப்பாடு எதுவுமில்லா தம் திருவுளத்திற்கேற்ப அவர் மக்களிடம் அன்பு கூறுகிறார். அது அவர் நம் கடுந்துயரத்தைக் கண்டதினால் விளைந்த உணர்ச்சி அல்ல. கடவுள் இயற்கையாய்க் கடுந்துயரத்தில் ஆழ்ந்திருப்பவர். யாவருக்கும் உதவிசெய்ய விரும்பும் கடவுளாயிருப்பாரானால், பின், பேய் பிசாசுகளுக்கும், நரக வாசிகள் யாவருக்கும் அவர் அதிகமதிகமாய் இரக்கங்காட்ட நேரிடும் அல்லவா?

இவ்வசனம் கூறுகிற அன்பு, கடவுள் தம் திருவுளப்படி சிறப்பாகவும் ஒப்பற்ற விதமாகவும் விசுவாசிகளிடம் கூறும் அன்பாகும். 'இவ்வளவாய்' (ப.தி) 'இந்த அளவுக்கு' (4.தி) என்ற சொல் இவ்வன்பின் சிறப்புத்தன்மையை வற்புறுத்திக் காட்டுகிறது. 'அடையும்படிக்கு' (ப.தி) என்ற சொல் அவ்வன்பின் தவற மாட்டாத நோக்கத்தைக்

காட்டுகிறது. 'மைந்தரிடம் நம்பிக்கை கொள்ளும் எவனும் கெட்டழிந்து போகாதிருந்து மெய்வாழ்வைப் பெற வேண்டும்' என்பது அந்த நோக்கம். ஆனால் உலக மக்களுள் சிலர் கெட்டழிவர். ஆதலால், மேற் சொல்லிய அன்பு வேறுபாடில்லாமல் யாவரிடமும் பொதுவாய்க் கூறப்படு கிற ஒரு பரிவு அன்று.

மேற்சொல்லிய கருத்துக்கு ஆதாரமளிக்கிற வேறு வேத வசனங்களுண்டு. உதாரணமாக, ரோமா 5:8 அல்லது யோவான் 4:9,10 கடவுளின் அன்பு மிகவும் சிறப்பு தன்மை வாய்ந்ததென்றும் அது விசுவாசிகளிடம் குறிப் பாகக் காட்டப்படுகிறதென்றும் இவ்விரண்டு வசனங்கள் போதிக்கின்றன. யாவரையும் பொதுவாய் நேசிக்கிற ஓர் இயற்கையான பரிவைப்பற்றி இவ்வளவு வற்புறுத்தி அழுத்தமாகப் பேச வேண்டியது தேவையில்லை.

கடவுள் தாம் யாரிடம் அன்பு கூருகிறாரோ அவர்களின் பூரண நன்மையை விரும்புவார். ஆகவே அந்த நன்மை யைப் பெறும் மக்களிடம் தான் அவர் அன்பாயிருக்கிறா ரென்று கூறவேண்டும். கிறிஸ்துவை மீட்பராக அளித்த அன்பு பிற நன்மைகளையும் சேர்த்து அளிக்காதா? ''கிறிஸ்துவைத் தம் சொந்த மைந்தர் என்றும் பாராமல், அவரைக் கடவுள் நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத் தார். அவ்வாறு செய்தவர் நமக்குத் தேவையான யாவற்றையும் அருளாதிருப்பாரா?'' (ரோ.8:32) ஆகவே தெய்வீக அருள், விண்ணக மாட்சிமை இந்தச் சிறந்த நன்மைகளை அடையும் மக்கள்தான் கடவுளின் மேற்படி சிறந்த அன்பினால் நேசிக்கப்படுவராவர்.

இதை வாசிக்கும் கிறிஸ்தவ நண்பா! நீரே தீர்ப்புச் செய்யவும். தம் ஒரே மைந்தரை அளித்து ஒப்புக் கொடுத்த கடவுளின் பேரன்பு யாவர் பேரிலும் கடவுளுக்குள்ள பொதுவான ஒரு பரிவு ஆகுமா? மாறாக, தாம் தெரிந்து கொண்ட விசுவாசிகளிடம் கடவுள் கூறும் சிறப்புமிக்க ஓர்

அன்பாகாதா? உலகின் மக்கள் யாவரும் பொதுவாக அறிந்து அனுபவிக்காத ஓர் ஒப்பற்ற உன்னத அன்புதான் அது இல்லையா? கடவுளது இப்பேரன்பின் இலக்கைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

2. கடவுள் அன்பு கூருகிற உலகம் என்றால் என்ன? உலகில் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்து வந்தும் வாழப் போதுமான மக்கள் ஒவ்வொருவரும் இச்சொல்லால் குறிக்கப்பட்டுள்ளனர் என்பது சிலருடைய கருத்து. இக்கருத்து எப்படிப்பொருந்தும் என்பதை விளங்கிக் கொள்ள இயலவில்லை: திருமறையில் உலகம் என்ற சொல்லுக்குப் பல வெவ்வேறு கருத்துக்கள் உண்டென்பது ஏற்கெனவே காட்டியாயிற்று.

அன்பு கூர்ந்தார் என்ற வினைச்சொல்லின் கருத்திற்கும் அவ்வன்பின் நோக்கத்திற்கும் உலகம் என்ற செயப்படு பொருளின் கருத்திற்கும் ஓர் இசைவு இருக்கவேண்டுமல்லவா? ஆனால் உலகம் என்பதற்கான மேற்கண்ட கருத்து, ஆரம்பத்தில் வரும் அன்பின் தன்மைக்கும் முடிவில் கூறப்படும் அவ்வன்பின் நோக்கத்திற்கும் பொருத்தமாக இல்லை.

முழு உலகில் எல்லா இனங்களிடையே சிதறியிருக்கும் கடவுளின் மக்கள் என்பது இப்பதத்தின் உண்மையான அர்த்தமாகும். கடவுள் அருளி வருகிற நற்பேறுகள் இனிமேல் யூத இனத்து மக்களுக்கு மட்டுமன்று இன வேற்றுமை சிறிதுமின்றி எல்லா ஜாதியாருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. "முழு உலகிலும் எங்குமே சிதறியிருக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள்மீது கடவுள் அன்பு கூர்ந்தார். விசுவாசிகளை ஈடேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு தம் ஒரே மைந்தரைத் தந்தருளும் அளவுக்கு அன்பு கூர்ந்தார்." என்பதுதான் இந்த வாக்கியத்தின் உண்மையான கருத்தாகும். இந்தக் கருத்துக்கு ஆதாரமளிக்கும் சில நியாயங்கள் உண்டு.

நாம் ஆராய்ந்து வருகிற கடவுளின் அன்பு எல்லா மக்கள் மீதிலும் பொதுவாய்க் கூரப்பட்டது என்றெண்ணு வதற்கு வழியே இல்லை. எந்த 'உலகம்' உண்மையாய் மெய் வாழ்வை அடைந்து வருகிறதோ அந்த 'உலகத்தின் மீது' தான் கடவுள் அன்பு கூர்ந்தார். யோவான் 3 : 17. ''உலகம் அவரால் மீட்புபெற வேண்டுமென்றே அவரை அனுப்பினார்.'' மீட்பு பெறா மக்களையும் 'உலகம்' என்ற சொல்லில் அடக்கியிருப்பாரேயானால் பின் கடவு ளின் திருவுள திட்டம் நிறைவேறாமல் தவறியிருக்கு மன்றோ? ஆனால் கடவுள் வகுத்த எந்தத் திட்டமும் நிறைவேறாமல் தவறவே தவறாது.

கடவுள் தெரிந்தெடுத்து மீட்ட மக்கள் கூட்டத்தின ரைத் திருமறையில் 'உலகம்' அல்லது 'உலக மக்கள்' (வெளி. 21 : 24 பு. தி.) 'பூமியிலுள்ள வம்சங்களெல்லாம்' (ஆதி. 12 : 3 முதலியவை) என்றழைக்கப்படுகின்றன. திரு வெளிப்பாடு 21 : 24 பழைய திருப்புதலில் இரட்சிக்கப் படுகிற ஜனங்கள்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. யோவான் 4 : 42இல் ''அவர் உண்மையாகவே உலகத்தின் மீட்பர்'' என்றழைக்கப்படுகிறார். ஆனால் மீட்கப்படாத மக்களுக்கு அவர் எப்படி மீட்பராவார்? ஆகவே இந்தப் பகுதியில் உலகம் என்றால் 'இரட்சிக்கப்படுகிற மக்கள்' என்பதே வேதம் தரும் அர்த்தமாகும்.

விசுவாசிகளின் கூட்டத்தார் 'உலகம்' என்றழைக்கப் படுவதற்கு சில காரணங்கள் உண்டு. 1. அவர்கள் தேவ தூதர்கள் அல்ல என்பதைக் காட்ட. 2. தாங்கள் மட் டுமே தேவ மக்கள் என்று வீண்பெருமை பாராட்டி மத வெறிகொண்ட யூத மக்களுக்கு மறுப்புகூற. 3, ஒரே இனத்து மக்களுடன் செய்த பழைய உடன்படிக்கைக்கும் எல்லா சாதிகளிலுமிருந்து மக்களை மீட்கும்படியான இரண்டாம் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வேற்றுமை யைக்காட்ட. 4. விசுவாசிகளின் இயற்கையான பூமிக்

குரிய, சிருஷ்டிகளாக தாழ்ந்த் நிலைமையை எடுத்துக் காட்டவே.

உலகில் தோன்றின, தோன்றும் மக்கள் ஒவ்வொருவரையும் தான் அது குறிக்கிறது என்று இன்னும் வாதிட்டால், கடவுள் தாம் இவ்வளவாய் நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஏன் இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்தவில்லை? ஏனெனில், எண்ணிறந்த மக்கள் நற்செய்தியைக் கேட்டதே கிடையாது. கடவுள் தமது ஒரே பேறான குமாரனை அவர்களுக்காக கொடுத்தப் போதிலும் தமதன்பை அவர்களுக்கு அறிவிக்காமல் இருப்பது எத்துணை விகற்பமாக இருக்கிறது. அவரது சர்வ ஆளுகை ஒவ்வொருவருக்கும் இவ்வன்பை கிடைக்கச் செய்யாத நிலையில் அவர் எல்லாரையும் நேசிக்கிறார் என்று எப்படி கூறமுடியும்? கடவுளின் அன்பு பயனற்றதா? கிறிஸ்துவின் மீட்பு பயன்படாததா?

கடைசியாக உலகம் என்றால் உலகில் தோன்றின, தோன்றும் மக்கள் எல்லாரும் என்றே அர்த்தமாகுமெனத் தொடர்ந்து பிடிவாதமாய் வற்புறுத்திக் கூறுபவர் கீழ்க்காணும் முடிவுகளை ஒப்புக்கொள்ள நேரிடும்:

1. கெட்டழிந்து போகிற பலரைப் பொருத்த மட்டில் கடவுளின் அன்பு பயனற்றது.

2. அவரைப்பற்றி ஒருநாளும் கேட்டறியாத பல கோடி மக்களுக்காய் கிறிஸ்து மரித்தார்.

3. கிறிஸ்துவின் பேரில் நம்பிக்கை வைக்க முடியாத அநேகருக்காய் அவர் மரித்தார்.

4. கடவுளின் அன்பு; மாறக்கூடிய அன்பு; முன்பு தாம் நேசித்து மீட்ட மக்களை இப்போது புறம்பான இருளில் என்றும் துயரடைவதற்காக அவர் தள்ளுகிறார். அல்லாவிட்டால் நரகவாசிகளை அவர் தொடர்ந்து நேசித்து வருகிறார்.

5. மக்களுக்கெனத் தம் ஒரே மைந்தரைக் கொடுத்தும் மீட்பர் சம்பாதித்த நற்பேறுகளை அம்மக்களுக்குக் கடவுள் அளிப்பதில் தோல்வியுற்றார்.

6. யார் யார் இரட்சிக்கப்படுவர் என்பதைப்பற்றிக் கடவுளுக்கு முன்னறிவு கிடையாது.

மேற்படி ஆறு கூற்றுகள் முற்றிலும் நம்பமுடியாதவை. ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஆகவே, யோவான் *3:16*இல் வருகின்ற உலகம் என்பதற்கு உலகமெங்கும் சிதறியிருக்கும் கடவுள் தெரிந்தெடுத்த மக்கள் எல்லாரும் என்பதுவே மெய்யான அர்த்தமாகும்.

*3*. கடவுள் கூறும் அன்பின் நோக்கம். கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் விசுவாசத்தைக் கொண்டே மெய்வாழ்வை அடைவர் எனக் கூறப்படுகிறது. ''நம்பிக்கை கொள்ளும் எவனும் கெட்டழிந்து போகாமல் என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெறும்படி'' (பு.தி) ''விசுவாசிக்கிறவன் எவனோ...நித்திய ஜீவனை அடையும்படிக்கு...'' (ப.தி).

கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என சிலர் வாதிட்டாலும் விசுவாசிகள் மட்டுமே மீட்கப்படுவர் என நாம் இப்போது கற்றோம். விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்குமுள்ள வேற்றுமை யாரால் அல்லது எதனால் உண்டாக்கப்படுகிறது? விசுவாசிகளால் தங்கள் விசுவாசத்தைத் தாங்களே உண்டாக்கிகொள்ள முடியாது. (*1* கொரி. *4:7*ஐப் பார்க்கவும்). ''உனக்கிருக்கிற அனைத்திலும் நீ கடவுளிடமிருந்து ஈவாகப் பெறாதது எது?'' விசுவாசிகளுக்கு கிறிஸ்துவை நம்பும் திறமையைத் தந்தவர் கடவுளே. விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் வேற்றுமை உண்டாக்கினவர் கடவுளே. அவ்வாறிருந்தால் அவர் எல்லா மக்களையும் மீட்க கிறிஸ்துவை மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார் என எப்படி கூறமுடியும்?

கடவுள் அன்பு கூறுகிற நோக்கம் விசுவாசிகள் என்றுமுள்ள மீட்பு பெறுவதே என்று இவ்வசனம் கூறுகிறது. ஆகவே, அவிசுவாசிகளுக்காய் கடவுள் தம் மைந்தரை ஒப்புக்கொடுக்கவில்லை என்றே கூறவேண்டும். விசுவாசிக்கக்கூடிய கிருபையை யாருக்கு அருளாதிருந்தாரோ அவர்களுக்கென்றும் தம் மைந்தரை மீட்பராக உலகில் எப்படி அனுப்பி வைத்திருக்கக்கூடும்?

இதை வாசிக்கும் நண்பரே நீரே நிதானித்து பாரும். அநேகர் கெட்டழிந்து போகிறார்கள் என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற திருமறை உண்மையாகும். அவ்வாறிருக்க, கடவுள் சமமாகவும் பொதுவாகவும் எல்லாரிடத்திலும் அன்பு கூறுகிறார் என்று எப்படிச் சாதிக்க முடியும். மாறாக, நாம் தெரிந்து கொண்ட மக்களிடம் சிறப்புமிக்க அன்பு பாராட்டி அவர்களுக்கு விசுவாசத்தையும் மற்றும் தேவையான எல்லா நற்பேறுகளையும் அருளி என்றுமுள்ள மெய்வாழ்வு அவர்களுக்கு நிச்சயமாய்த் தவறாமல் கிடைக்கும்படி செயலாற்றும் அன்பே இவ்வசனத்தில் சொல்லியிருக்கும் அன்பாகும் அல்லவா?

மேற்கூறியவற்றை கவனத்துடன் ஆராய்ந்து பாரும். அப்போது இந்நூலின் பெரும் பிரச்சினையான கேள்விக்கு உங்களால் விடை அளிக்கக்கூடும். கிறிஸ்து பொதுவான பரிகாரமாக யாவருக்காகவும் மரித்தாரா? அதாவது கெட்டுப்போகும் பலரைப் பொருத்தமட்டில் பயனில்லாத ஒரு மீட்பு கிரயமாக தம் ஆருயிரைத் தியாகஞ் செய்தாரா? அல்லது விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் மகிமையான மீட்பு நிச்சயமாய்க் கிடைக்கும்படி அவர்களுக்காக மட்டும் குறிப்பாக மரித்தாரா? அநேகர் இவ்வாக்கியத்தைப் பொதுவான எல்லாருடைய மீட்புக்கு ஆதாரமாகக் கொண்டாலும் யோவான் 3:16இல் ஆண்டவர் கூறியுள்ள சத்தியம், அவ்வாறான கருத்துக்கு முற்றிலும் மாறானதும் முரணானதுமானதாயிருக்கிறதை மறவாதீர்கள்.

குறிப்பு:— ''விசுவாசிக்கிறவன் எவனோ'' (Whosoever) என்ற சொற்களைத் தங்கள் தவறான கருத்திற்கு, ஆதாரமாக அநேகர் கொள்வர்.

1. ஆனால் மூல கிரேக்க மொழியில் புதிய திருப்புதலின் படிதான் ''நம்பிக்கை கொள்ளும் எவனும்'' என்று எழுதப்பட்டுள்ளது.

2. எவனோ என்ற திருப்புதல் சரி என வற்புறுத்தினாலும் கடவுளின் அன்பு யாவரிடத்திலும் பொதுவாயும் சமமாயும் கூறப்படுகிற ஓர் அன்பு என்ற கருத்திற்கு 'எவனோ' ஒரு மறுப்பு கூறுவதுபோலும்! 'எவனோ' அவனுக்கே சிறப்பு வாய்ந்த அன்பு காட்டப்படுகிறது அல்லவா ? பின்னர் யாவரிடத்திலும் கூறப்படுவதாகச் சிலர் சாதிக்கிற அந்தப் பொதுவான அன்பு ஏது? விசுவாசியாதிருக்கும் வகுப்பினரைக் காட்டிலும் 'எவர்களோ' என்ற விசுவாச வகுப்பாரை அதிகமாய் நேசித்திருப்பதாகவே தெரிகிறது.

1 யோவான் 2:1,2— இப்பகுதியை நுட்பமாக விளக்கஞ் செய்தல்.

கிறிஸ்துவின் மரணம் யாவருக்காகவும் ஒவ்வொருவருக்காகவும் எனச் சாதிக்கும் வாதிகள் அநேகர் இந்த வாக்கியத்தைத் தங்களுக்கு அநுகூலமாயுள்ளது என்று நம்புகின்றதாகத் தெரிகிறது. 'முழு உலகத்தின் பாவங்களையும்' என்ற சொற்றொடர், முழு உலகிலிருக்கும் எல்லா மக்களின் பாவங்களையும் குறிக்கிறது எனச் சாதிப்பர். நம்முடைய (விசுவாசிகளாகிய நம்முடைய) பாவங்களை மாத்திரமல்ல அவிசுவாசிகளாயிருந்தாலும் உலகிலிருக்கிற ஒவ்வொரு மனிதனுடைய பாவங்களையும் போக்கும்படி கிறிஸ்து மரித்தார் என்கின்றனர்.

இந்தக் கருத்தோ தவறு என்பதைக் காட்ட நான்கு கேள்விகளைக் கேட்கிறேன்:

1. யாருக்கு இந்த நிருபம் எழுதியனுப்பி வைக்கப் பட்டது?

திருமறையின் எல்லா நூல்களும் சபை முழுவதிற்கும் பயனுடையவை என்பது மறுக்கப்படாத உண்மைதான். என்றாலும் சில பகுதிகள் குறிப்பான சூழ்நிலையில் ஈடுபட்டிருக்கும் தனி வகுப்பாரான மக்களுக்கெனத் தொடக்கத்தில் எழுதப்பெற்றன என்பதை நாம் மறுக்கலாகாது. ஆகவே, இப்பகுதிகளை நிருபாசிரியர்கள் எழுதிய சூழ்நிலையையும் நோக்கத்தையும் நன்கறிந்து நாம் அவற்றை விளக்கஞ் செய்யவேண்டும்.

1. ''யாக்கோபும், கேபாவும். யோவானும்... யூதருக்கு அருட்செய்தியை அறிவிக்கவேண்டும்...'' (கலா. 2:9).
2. அவர்கள் தொடக்கத்திலேயே கடவுளின் செய்தியைக் கேட்டவர்கள் அருட் செய்தி முதலில் யூதருக்கு (ரோமர் 1:16) அறிவிக்கப்பட்டதாக நாம் அறிவோம்.
3. 'நம்முடைய' 'முழு உலகம்' என்ற வேறுபாட்டுச் சொற்களை நன்றாகக் கவனித்தோமானால் நிருபாசிரியர் தன் சொந்த இன மக்களாகிய யூதரிடமே தன் கடிதத்தை எழுதியனுப்பி வைத்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது.
4. எதிர் கிறிஸ்துகளாகிய கள்ள போதகர்களைக் குறித்து அடிக்கடி எச்சரிக்கின்றார் (1யோவான் 2:18 முதலியன). சபையின் ஆரம்பத்தில் தோன்றிய கள்ள போதகர்கள் பெரும்பாலும் விருத்தசேதனக்கட்சியைச் சேர்ந்த யூதர், அவர்கள் 'நம்மை விட்டு பிரிந்து சென்றவர்கள்' ஆகவே யூதரிடமே அவர் எழுதுகிறார் என்பது கண்கூடு.

புறச்சாதி மக்களை யூதர் வெறுத்த வெறுப்பையும் பகைத்த பகையையும் மறவாதீர்கள். தங்களது இனம் கடவுளின் மக்கள், மற்ற இனங்கள் எல்லாம் புறச்சாதி

கள் என்ற இனவெறியை மறக்கவும் கூடாது. அவ்வாறான ஒருதலை தப்பெண்ணம் நிலவிக் கொண்டிருக்கும் சூழ் நிலையில், யோவான் கிறிஸ்துவின் மீட்பு மரணம் யூத இன விசுவாசிகளுக்காக மட்டுமன்று, இன வேற்றுமையில்லாமல் முழு உலகத்தின் விசுவாசி கள் யாவருக்குமுரியது என்பதை அழுத்தமாகப் போதித்து சாதிப்பது வியப்பான ஒரு காரியமன்று. இதே உண்மையை தாம் இயற்றிய நற்செய்தி நூலிலும் வலியுறுத்திப் போதிக்கின்றார் அல்லவா? (யோவான் 11:52) தாங்கள் மட்டுமே கிறிஸ்தவர்கள் என்ற ஆணவ மிக்க மனப்பான்மையைப் போக்க தன் சொந்த இனத்து மக்க ளுள் விசுவாசிகளாகும் யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். இல்லை! புறவினத்து மக்கள் அநேகர் உண்மையான கிறிஸ்த வர்களாகவும் கடவுளின் மக்களாகவும் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும் என்று அழுத்தமாகச் சாதிக்கின்றார். கிறிஸ்து எல்லாருக்காகவும், ஒவ்வொருவருக்காகவும் மாண்டார் என்ற தப்பெண்ணத்திற்கோ இப்பகுதியில் ஆதாரமே கிடையாது.

2. யோவான் இந்நிருபம் எழுதிய நோக்கம் யாது?

தங்கள் பாவங்களினிமித்தம் வருந்துகிற விசுவாசிகளை ஆறுதல் படுத்தும் நோக்கங்கொண்டு எழுதுகிறார். அவ் வாறு வருந்தும் விசுவாசிகள் சோர்ந்து சலித்து நம் பிக்கையை இழக்காதபடி அவர்களுக்கு எழுதுகிறார் ''நம்முள் ஒருவன் பாவம் செய்வானானால்......'' கீழ்க் காணும் குறிப்புகளைக் கவனிக்கவும்:—

அ. பரிந்து பேசும் சகாயர் கிறிஸ்துவைப்பற்றிய நற் செய்தி, விசுவாசிகளுக்கேயல்லாமல் பிறருக்கு ஆறுதல் அளிக்காது.

ஆ. விசுவாசிகளை மட்டுமே ஆறுதல்படுத்த முடியும்; கீழ்ப்படியமாட்டாத அவிசுவாசிகளின்மீது கட வுளின் சினந்தான் நிலைத்திருக்கும்.

இ. ''என் பிள்ளைகளே... உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன'' என்று ஆசிரியர் தம் கடிதம் எழுதப் பெற்றவர்களை அழைக்கிறார்.

ஆகவே, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை ஆறுதல் படுத்துவதே யோவானின் நோக்கமாகும். மீட்பு ஒருநாளும் பெற மாட்டாத மக்களுக்காகவும் ஆண்டவர் மரித்தார் எனக் கூறுவதினால் விசுவாசிகளுக்கு என்ன ஆறுதல் உண்டாகும்? உலகமெங்குமுள்ள உண்மையான விசுவாசிகள் யாவருக்கும் அவர் என்றுமுள்ள மீட்பு அளிக்கும் இரட்சகராயிருக்கிறார் என்று அவ்வசனம் கூறினாலொழிய ஆறுதல் ஏது?

3. 'பரிகாரப்பலி' (பு.தி.) அல்லது 'கிருபாதாரபலி' (ப தி.)

என்ற சொற்களின் அர்த்தமென்ன? கிருபாதார பலி என மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூலபதத்திற்கும் எபிரெயர் 9:5-இல் கிருபாசனம் என்பதின் மூலபதத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்விரண்டு கிரேக்க சொற்களைத் தமிழ் எழுத்துக்களில் காட்ட முயன்றோம்.

எபி. 9:5-இலஸ்தேரியோன்

1 யோவான் 2:2-இலஸ்மொஸ்

பத்து கற்பனைகள் பொறிக்கப்பட்ட இரண்டு பலகைகள் அடங்கிய உடன்படிக்கை பெட்டியை மூடுவதற்கான தங்க மூடிக்குக் கிருபாசனம் என்று பெயர் (யாத். 25:17-22). மக்களைப் பாவிகளாய்க் குற்றப்படுத்தி வருகிற நியாயப் பிரமாணம் கிருபாசனத்தால் மூடியிருந்தது.

நம்மைக் குற்றப்படுத்தி நமக்கு விரோதமாய் ஆக்கினை தீர்ப்பிடுகிற நீதிச் சட்டத்தைக் கிருபாசனபதி இயேசு கிறிஸ்து தம் மரணத்தால் மூடி மறைத்து வைத்திருக்கிறார். இந்த நீதிச் சட்டமானது இனி இயேசுவைப் பற்றும் விசுவாசிகளைக் குற்றஞ்சாட்ட இயலாது. இயேசுவே விசுவாசிகளின் கிருபாசனபதி. கடவுளின் கிருபைக்கு ஆதாரம

விக்கும் பலி அவரே. விசுவாசிகளின் பாவங்களைப் போக்கும் பலி அவரேயாவார்.

உலகத்திலிருக்கிற மக்கள் யாவரும் ஆக்கினைக்குத் தப்பியாயிற்று எனக் கூறுவது மெய்யாகுமா? ஆனால், ஆண்டவர் எல்லா மக்களின் பாவங்களையும் போக்கி யிருந்தால் அவ்வாறு கூறவேண்டியது அவசியமாயிருக்கும் அல்லவா?

4. 'முழு உலகம்' என்ற சொற்றொடரின் அர்த்தமென்ன இச்சொற்றொடர் பலவிடங்களில் காணப்படுகின்றன. பெரும்பாலும் இந்தச் சொற்றொடர் உலக மக்கள் ஒவ் வொருவரையும் குறிக்கவே குறிக்காது. எடுத்துக்காட்டாக:

லூக்கா 2:1—'உலகமெங்கும் மக்கள் தொகை...' ரோமை பேரரசு.

ரோமர் 1;8—'உலகமெங்கும் . தெரிந்திருக்கிறது...' ஆனால் ரோமாபுரியில் நிறுவப்பட்ட திருச்சபையைப் பற்றிப் பல அயல்நாடுகளில் மக்கள் இன்னும் கேள்விப் பட்டதே கிடையாது.

கொலோ. 1:6—'அந்த அருட்செய்தி...உலகமெங்கும் பரவி' மேற்சொல்லிய மூன்று பகுதிகளில் 'உலகம்' என்ற பதம் மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள உலகத் தைக் குறிக்கிறதாகத் தெரிகிறது.

வெளி. 3:10—'முழு உலகின்மீதும்' ஆனால் சிலர் அந்தக் கடுஞ்சோதனைக்குத் தப்பப் போவதாகத் தெரி கிறது. ஆகவே, 'முழு உலகம்', அல்லது 'உலகமெங்கும்' உலக மக்களுள் அநேகர் என்று பொருள்படும்.

சங். 98:3—பூமியின் எல்லைகளெல்லாம்

யோவேல் 2:28—மாம்சமான (மனுமக்கள்) யாவர் மேலும் (திருத்தூதுவர் 2:17-ஐயும் பார்க்க). எல்லா வகையான மக்களையும் குறிக்கின்றன. இந்தச் சொற்

றொடர்கள்; ஒருவன் கூட விலக்கப்படாமல் எல்லா மனிதரையும் குறிக்கின்றதில்லை.

1 யோவான் 5 ; 19-இலும் வெளி 12 : 9-இலும் 'உலகம் முழுவதும்' 'உலகம் அனைத்தையும்' என்ற சொற்றொடர்கள் விசுவாசமில்லாதாரின் உலகத்தைக் குறிக்கின்றன.

ஆகவே முன்பின்னுள்ள வசனங்களுக்கு ஏற்ப நாம் 'முழு உலகம்' 'உலகமெங்கும்' 'உலகமனைத்தையும்' 'மனுமக்கள் யாவர் மீதும்' முதலிய சொற்றொடர்களை நாம் விளக்கஞ் செய்யவேண்டும்.

முடிவாகக் கூறின், 1 யோவான் 2:2 யூத விசுவாசிகள் புறவினத்து விசுவாசிகள் யாவருக்காகவும் கிறிஸ்து ஆற்றிய பரிகாரத்தைக் குறிக்கிறது. அவர்கள் எல்லாருடைய எல்லாப் பாவங்களையும் போக்கும் பரிகார பலி அவரேயாவார். மனிதர் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படுவர் என்று சாதிப்பார் யாருமிலர். கிறிஸ்துவின் பரிகார மரணம் எல்லா மக்களுக்கும் போதும் எனச் சாதிப்பதனால் பயனில்லை. எகிப்து நாட்டில் நவதானியம் மிகுதியாயிருப்பதாக யாக்கோபு கேள்விப்பட்டதினால் ஆறுதலடையவில்லை. யோசேப்பு அவனுடைய பசியை ஆற்ற அள்ளி அள்ளிக் கோணிப்பைகளை நிரப்பி அனுப்பினதால் மாத்திரம் சோர்ந்து சலித்துப் போன அவனுக்குப் புத்துயிர் கிடைத்தது. அதுபோல முழு உலகத்தில் சிதறியிருக்கும் எல்லா வகை மக்களிலும் கிறிஸ்துவின் கிருபாதாரப் பலியினால் மீட்கப்பட்டவர்களே ஆற்றப்படுவர். அவர்களே இரட்சிக்கப்படுவர்; அவர்களுக்காகவே கிறிஸ்து மீட்பராக மரித்தார்.

## 5. ஆறு திருமறை பகுதிகளின் சுருக்கமான விளக்கம்

கிறிஸ்து யாவரையும் மீட்க மரித்தார் என்ற கருத்தினை தருவதாக கூறப்படுகிற இன்னும் சில திருமறை பகுதிகளுக்கு சுருக்கமான விளக்கம் காண்போம்.

1. யோவான் 1:9 பழைய திருப்புதல் :

''உலகத்திலே வந்து, எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி''.

புதிய திருப்புதலில்: ''எந்த மனிதனுக்கும் ஒளி தருகிற அந்த மெய்யான ஒளி அப்போதே உலகத்துக்கு வந்தார்.

கிறிஸ்து இவ்வுலகில் வந்தமையால் மனிதருக்குள் மெய்ஞான ஒளி பிரகாசிப்பிக்க ஏதுவாயிற்று. (யோவான் 3:19ஐயும் 12:46 இத்துடன் ஒப்பிட்டு பார்க்கவும்). எங்கே சத்தியத்தின் வெளிச்சம் விளங்குகின்றதோ அது கிறிஸ்துவினால் உலக மக்களுக்கு அருளப்படுகிற ஒளியேயாகும். ஆனால் கிறிஸ்து யாவரையும் மீட்க மரித்தார் என்ற தப்பான கருத்தை ஆதரிக்க இந்த வேத வசனத்தைப் பயன்படுத்துவது தவறும் பெலவீனமும் ஆகும்.

2. யோவான் 1:29—உலகமெங்குமே நிலவி மனிதரை அடிமைப்படுத்தும் பாவத்தைப் போக்க கிறிஸ்து மரித்தார் எனச் சாதிப்பது சரி. ஆனால் உலகில் பிறக்கும் ஒவ்வொரு தனி மனிதனுடைய பாவத்தையும் அவர் சுமந்து தீர்த்தார் எனக் கூறுவதோ இவ்வசனத்தின் உண்மையான கருத்தன்று. தவிர அந்தக் கருத்து நமது நடைமுறையான அறிவுக்கும் அனுபவத்திற்கும் மாறானதாகும்.

3. யோவான் 3:17—கிறிஸ்து எல்லா மக்களையும் மீட்க மரித்தார் என்ற கருத்துக்கு இவ்வசனம் ஆதரவு அளிக்காது. ஏனென்றால்:

அ. எல்லா மக்களும் உண்மையில் மீட்கப்படுவதில்லை.

ஆ. கிறிஸ்து இவ்வுலகில் தோன்றிய காலத்திற்கு முன்னுள்ள நூற்றாண்டுகளில் பலர் ஏற்கனவே கடவுளின் சினத்திற்கும் ஆக்கினைக்கும் ஆளாகி மாண்டு போயிருந்தனர்.

இ. சிலர் விழுகிறதற்கு... கிறிஸ்து நியமிக்கப்பட்டிருந்தார் (லூக்கா 2:34).

ஈ. கிறிஸ்து இவ்வுலகில் தோன்றிய நோக்கம் கடவுளின் அநாதி திட்டத்திற்கு மாறானதாயிருக்க முடியாது. ஆனால் கடவுள் சிலரை இரட்சிக்கவும் வேறு சிலரையோ அவர்களுடைய பாவங்களினிமித்தம் நரகாக்கினையில் தண்டிக்கத் திட்டமிட்டுருந்தார். தண்டிக்கப்பட போவதாகத் தாம் ஆதி தீர்மான மாய் நியமித்த மக்களையும் மீட்க கடவுள் தம் மைந்தரை அனுப்பியிருப்பாரா?

இவ்வசனத்தில் கடவுளின் அநாதி திட்டத்திற்கேற்ப மீட்பு பெறப்போகும் உலகம் கடவுளின் மக்களாகிய (விசுவாசிகளின்) உலகந்தான்.

4. யோவான் 4: 42 } அவர் உண்மையாக
1யோவான் 4: 14 } உலகத்தின்மீட்பர்.

அ. அவரைத் தவிர உலக மக்களுள் யாரையும் இரட்சிக்கக் கூடிய வேறு மீட்பர் இல்லை.

ஆ உலகமெங்கும் இரட்சிக்கப்படுகிற மக்கள் எல்லாரையும் மீட்பவர் இயேசு கிறிஸ்துவே.

அவர் உலக மக்கள் ஒவ்வொருவரையும் இரட்சிக்கும் மீட்பர் என்பது இந்தச் சொற்றொடரின் அர்த்தமாயிருப்பதற்கு வழியேயில்லை. ஏனென்றால் அப்படி அவர் எல்லாரையும் இரட்சிக்கவேயில்லை.

5. யோவான் 6:51—''நான் இதை உலகம் மெய்வாழ்வைப் பெறுவதற்காகக் கொடுக்கிறேன்''

உலக மக்கள் எல்லாரும் இந்த மெய்வாழ்வைப் பெற்றதுண்டா? பெறப் போவதுண்டா? ஆக்கினைக்குட்பட்ட மக்களும் இந்த மெய் வாழ்வைப் பெற்றதுண்டா? இவ்வசனத்தில் கூறியிருக்கும் 'உலகம்' என்ற சொல் ஒருவன் கூட விலக்கப்படாமல் ஒவ்வொருவனையும் குறிக்குமேயா

னால் அப்போது மேற்படி கேள்விகளுக்கு நாம் 'ஆமாம்' எனப் பதில் சொல்ல நேரிடும். ஆகவே இங்கு 'உலகம் என்ற பதம் எல்லாரையும் குறிப்பதில்லை.

6;2 கொரிந்தியர் 5-19- மறுபடியும் முன்பின்னுள்ள வசனங்களுக்கேற்ப 'உலகம்' என்ற சொல்லை விளக்கிப் பொருள் கூற வேண்டும். 'உலகம்' என்றழைக்கப்படுவர் (வ.சி.19) 'நம்மை' (வ.18) என்றும் 'நாம்' 'நமக்காக' (வச.21) என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்கு மிக திட்டமாக பேசப்படுபவர்கள்விசுவாசிகள் மாத்திரமே. உண்மையான விசுவாசிகள் மாத்திரம் கடவுளுடன் ஒப்புரவாக்கப்பட்டவர்கள்; கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகக் கூடியவர்கள் உண்மையான விசுவாசிகளே யல்லாமல் வேறில்லை. இங்கே 'உலகம்' என்ற சொல், பாவமன்னிப்பு பெற்று கடவுளோடு ஒப்பரவாக்கப்பட்ட மக்களின் தொகுதியைக் குறிக்கின்றது.

மாறாக ''உலகம்'' ஒருவன்கூட விலக்கப்படாது எல்லாரையும் குறிப்பதாயிருந்தால் பின் எல்லாரும் கடவுளோடு ஒப்புரவாக்கப்படாத காரணமென்ன? உலகின் எல்லா மக்களும் சில நிபந்தனைகளை நிறைவேற்றினால் அப்போது கடவுள் அவர்களை தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்வார் என்றல்ல, ஏற்கெனவே அவர்களை ஒப்புரவாக்கினார் என்றிருக்கிறது.

கிறிஸ்து யாவரையும் மீட்க மரித்தார் என்ற தவறான போதனையை ஆதரிக்கச் சில திருமறை வாக்கியங்களைத் திரித்துக் கூறுபவருக்கு இதுவே நாம் கூறும் பிரதிவாதம்; மேலும் 'உலகம்' என்ற இந்த ஒரு சொல்லை நம்பியே தங்களுடைய அபிப்பிராயத்தை நிலைநாட்டப் பார்ப்பது தர்க்கரீதியாக மிகப் பரிதாபமான நிலையாகும். ஏனெனில் உலகம் என்ற பதம் பல வெவ்வேறு பொருள் கொண்ட ஒரு பதம் என்று அறியலானோம். வாசகரே இவை ''எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து நலமானதைப்பற்றிக் கொள்ளுங்கள்'' (I தெச. 5:21)

6. 'எல்லாரும்', 'எல்லாரையும்' இவைகளையும் இவை போன்ற சொற்களையும் பயன்படுத்தும் வசனங்களின் உண்மையான விளக்கம்:

'எல்லாரும்' என்ற பதத்திற்கு இரண்டு வெவ்வேறு கருத்துக்கள் உண்டு. சில வேளைகளில் அது மனுமக்கள் எல்லாரையும் மனிதர் ஒவ்வொருவரையும் குறித்தாலும் குறிக்கும். அல்லாவிட்டால், ஒவ்வொரு மனித வகையிலும் இனத்திலும் சிலரைக் குறித்தாலும் குறிக்கும். வேதத்தில் இந்தச் சொல் முதல் கருத்துக்கொண்டு மீதமில்லாதவாறு எல்லா மக்களையும் குறிப்பது சற்று அபூர்வமான ஒரு காரியமாகும். பத்து தடவைகளுள் ஒரு தடவைதான் அவ்வாறு பொருள்கொள்ளும் என்று கூற நான் துணிவேன். எல்லா வகைகளிலும் இனங்களிலும் சிலர் என்பது தான் சாதாரணமாக வேதம் குறிக்கும் கருத்தாகும். எடுத்துக் காட்டாக :

லூக்கா 11 : 42—புதிய திருப்புதல் மூலச் சொற்களுக்குச் சொல் சரியாயுள்ளது ''எல்லா பூண்டுகளிலும்'' ஆனால் பழைய திருப்புதல் உண்மையாண அர்த்தத்தைக் கூறுகிறது. ''சகலவித பூண்டுகளிலும்.''

யோவான் 12:32—மனுமக்கள் எல்லாரும் கிறிஸ்துவினிடம் ஈர்த்துக்கொள்ளப்படுவர் என்பது இவ்வசனத்தின் அர்த்தமாகாது; ஆனால் எல்லா மனித இனங்களிலும் மொழிகளிலும் இருந்து மக்கள் இழுத்துக் கொள்ளப்படுவர் எனப் பொருள் கொள்ளும்.

அப். 2 : 17—'மனுமக்கள் யாவர் மேலும்'. ஒவ்வொரு தனி மனிதன் மீதிலும் தூய ஆவி பொழியப் படுவது கிடையாது என்பது கண்கூடு. ஆனால் எல்லாவகையான மக்கள்மீதும், இளைஞர், முதியோர், ஆண்கள், பெண்கள், யூத இன விசுவாசிகள், புறச்சாதி விசுவாசிகள் யாவர்மேலும்

கடவுள் தம் ஆவியைப் பொழிந்தார். பொழிந்து வருகிறார்.

அப். 10 : 12 மூல கிரேக்கு கூறுவதாவது : ''எல்லா நடப்பன, ஊர்வன...'' ஆனால் தமிழ் பழைய புதிய திருப்புதல்களும் சரியாய் உண்மையான கருத்தைக் கூறுகின்றன :—''எல்லா வகையான நடப்பன, ஊர்வன, வானில் பறப்பன ஆகியவை இருப்பதையும் கண்டார்.''

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளை ஆதாரமாகக் கொண்டு) தேவைப்பட்டால் வேறு அநேக எடுத்துக்காட்டு அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடும்)

கீழ்க்காணும் மூன்று முடிவுகளைக் கூறுகிறேன் :

அ. 'எல்லாரும்' அல்லது 'எல்லாம்' என்ற சொற்கள் அடிக்கடி எல்லா வகைகளிலும் என்று பொருள்படும்.

ஆ. சில வேளைகளில் 'எல்லாரும்' என்ற சொல், ஏதோ ஒரு வகுப்பார் எல்லாரும் எனப் பொருள் படும். உதாரணமாக, ரோமர் 5:18-இல் 'எல்லா மனிதருக்கும் ஜீவனை அளிக்கும் நீதி, நீதிமானாக் கப்பட்ட எல்லா மனிதருக்கும், அல்லது விசுவாசிகளாகிய எல்லா மனிதருக்கும் எனப் பொருள்படுவது கண்கூடாகும்.

இ. எல்லா ஜாதிகளும் குணப்படுவர் என்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் உரைத்தபோது, எல்லா இனங்களிலுமிருந்து கடவுள் தெரிந்து கொண்ட மக்கள் குணப்படுவர் எனப் பொருள்படும் என்பதைப் புதிய ஏற்பாடு தெளிவாய்க் காட்டுகிறது.

ஒவ்வொரு தனி மனிதனுக்காகவும் கிறிஸ்து மரித்தார் என்ற தப்பான கொள்கைக்கு ஆதாரமாய்த் தோன்றும் சில திருமறை பகுதிகளைக் கருத்தாய்க் கவனிப்போமாக :

1. 1 தீமோ. 2:4-6—''ஏனெனில், எல்லா மனிதரும் மீட்பைப் பெறவும் சத்தியத்தை அறிந்துகொள்ளவும் வேண்டும் என்பதே அவரது திருவுளம்.''

அப்படியானால், கிறிஸ்து எல்லாரும் மீட்கப்பட வேண்டுமென விரும்புவாரேயானால் அவர் யாவரையும் மீட்க மரித்திருப்பாராக்கும். இந்தப் பகுதியில் இரண்டு வெவ்வேறு பொருள்கள் கொண்ட 'எல்லாரும்' என்ற சொல்லின் அர்த்தமென்ன? எல்லா மனித வகைகளிலும் இனங்களிலும் 'பலர்' என்று பொருள்படுமேயானால் பின்னர் மேற்படி தர்க்கரீதி நியாயமாகும் என ஒப்புக் கொள்வேன். ஆனால் 'மனுமக்கள் எல்லாரும்' என்று பொருள்படுவதாகச் சாதிக்கும் கருத்துக்கு நாங்கள் மறுப்பு கூறுகிறோம்.

கடவுளின் சித்தம் இருவகைப்படும் :

அ. நம்மைப் பொருத்தமட்டில் கடவுளின் வெளிப்படையான சித்தம்—நாம் செய்ய வேண்டும் என அவர் நமக்குக் கொடுக்கும் கட்டளைகள்.

ஆ. நம்மைப் பொருத்தமட்டில் கடவுளின் மறைவான திட்டம்—தாம் தவறாமல் செய்யப்போவதாக வகுத்த திட்டம்.

1 தீமோத்தேயு 2:4இல் கூறியுள்ள கடவுளின் திருவுளம் மக்கள் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பும் விருப்பமாயிருந்தால், பின்னர் மனுமக்கள் எல்லாரும் சத்தியத்தை அறிந்து மீட்கப்படவேண்டும் என கடவுள் விரும்புவதாகத் திருதூதுவன் கூறுகிறாராக்கும். ஆனால் மனித இனத்தில் பெரும்பகுதியார் சத்தியத்தை அறியும் வாய்ப்பில்லாமல் பிறந்து வாழ்ந்து இறந்ததுண்டு. நற்செய்தியைக் கேட்க அவர்களுக்குச் சரியான சூழ்நிலை கிடைக்கவில்லை. ஆகவே, இந்த வசனத்தில் 'எல்லா மனிதரும்' ஒருவேளை 'நற்செய்தியைக் கேட்கும் எல்லா மனிதரும்'

எனப் பொருள்படக்கூடும். மனுமக்கள் எல்லாரையும் அந்தச் சொற்றொடர் குறிப்பது கூடாத காரியமாகும்.

மாறாக, மேற்படி வசனத்தில் கூறப்பட்டுள்ள கடவுளின் திருவுளம் தாம் செய்வதாக வகுத்த திட்டமாயிருந்தால், பின்னர் அது தப்பாமல் நிறைவேறியிருக்கவேண்டும். ''தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்'' (சங். 115:3) 'எல்லா மனிதரும்' என்ற சொற்றொடர் மனுமக்களின் ஒவ்வொரு தனி நபரையும் குறிக்குமேயானால், பின்னர் யாவரும் தவறாமல் மீட்கப்படுவர் என்பது உறுதி. இல்லையெனில் கடவுள் கொண்ட திருவுள திட்டம் தவறியாயிற்றே! அதுவோ, கனவில்கூட நாம் கொள்ளக் கூடிய ஒரு கருத்தன்று.

இவ்வசனத்தில் கூறியுள்ள கடவுளின் திருவுளம் தாம் செய்வதாக இட்ட திட்டமாயிருக்கிறது. ஆகவே அது நிகழத்தான் செய்யுமென அறிவோம். மனுமக்களெல்லாரும் இரட்சிக்கப்படுகின்றனர் என்று எண்ணுவதற்கு வழியேயில்லை; பின், 'எல்லா மனிதரும்' என்பதற்கு பொருள் என்ன? நற்செய்தி வரவர உலகத்தின் எல்லா நாடுகளிலும் அறிவிக்கப்பட்டு வருகிற இந்தக் காலத்தில் எல்லா மனித வகைகளிலும் இனங்களிலும் பலர் மீட்பைப் பெறவும் சத்தியத்தை அறிந்து கொள்ளவும் வேண்டுமென் பதே அவரது திருவுளம் என்ற கருத்து கொண்டு பவுல் எழுதியதாகத் தெரிகிறது. இந்தத் தெய்வ திட்டத்திற் கமைய நாம் எல்லா வகை மக்களுக்காகவும் (1 தீமோ.2:1,2) அரசர்கள், அதிகாரிகள், பெரியோர், சிறியோர் எல்லா விதமான மனிதருக்காகவும் வேண்டுதல் செய்ய வேண்டும். ஆண்டவர் இந்தக் காலத்தில் யூத மக்களை மட்டுமல்ல, எல்லா இனத்து மக்களையும் மீட்கத் திட்டமிட்டுள்ளார்.

நாம் ஆராய்ந்து வருகிற வசனத்தில் இரண்டு காரியங்கள் இணைபிரியா உறவில் சேர்க்கப்படுவதைக் கவனிக்கவும் :

அ. மனிதர் மீட்பு பெறுவதுமன்றி சத்தியத்தை அறிந்து கொள்ளவும் வேண்டுமென்பது கடவுளின் திருவுளம்.

ஆ. மனுமக்கள் எல்லாரும் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்பது கடவுளின் திருவுளமாயிருக்கிறது எனச் சாதிப்பதற்கு வேதத்தில் ஆதாரமே கிடையாது.

மாறாக, *சங் 147 : 19,20; மத். 11 : 25,26; அப். 14 : 16; அப். 17 ; 30; கொலோ. 1 : 28* முதலிய பகுதிகளைப் பார்க்கவும்.

''எல்லா மனிதரும்'' என்ற சொல் மனுமக்கள் ஒவ்வொருவரையும் குறிக்கும் என்ற கருத்துக்கு மேற்சொல்லிய பல நியாயங்களை ஆதாரமாகக் கொண்டு நாம் மறுப்பு கூறுகிறோம். எல்லா மனித இனங்களிலும் பலர் மீட்கப்பட வேண்டுமென்பது அவ்வசனத்தின் அர்த்தமாகும். இந்த விளக்கவுரையே வெளி. 5 : 9-ஆம் வசனத்தில் வருகிற பரலோக காட்சிக்கு ஏற்புடையதாய் இருக்கிறது.

2. *2 பேதுரு 3 ; 9—*

எல்லா மக்களையும் மீட்கக் கிறிஸ்து மாண்டார் என்ற தவறான கருத்துக்கு ஆதாரமாய்த் தோன்றும் இன்னொரு திருமறை பகுதியைப் பார்ப்போமாக.

அ. எவனும் கெட்டழியக் கூடாது எனக் கடவுள் விரும்புகிறார்.

ஆ. எல்லாரும் மனமாற்றமடைய வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

மனமாற்றம் கிறிஸ்துவின் மரணத்தால் மட்டும் ஆகும்; ஆதலால் கிறிஸ்து எல்லா மக்களையும் மீட்க மரித்திருப்பாராக்கும்.

திருத்தூதுவர் 'நம்மேல்' என்கிறார். 'நாம்' அல்லது 'நம்' என்ற பதிற்சொற்கள் யாரைக் குறிக்கின்றன? முன்

பின்னுள்ள வசனப் பகுதிகளை ஆராய்ந்து பார்த்தால் கீழ்க்காணும் முடிவு செய்வோம் :

'நாம்' யாவர் என்றால்

அ. உயர் மதிப்பும் சிறப்பும் வாய்ந்த வாக்குறுதிகளைப் பெற்றவர் (1;4).

ஆ. அன்பார்ந்தவர்களே என்றழைக்கப்படுபவர் (3 : 1).

இ. ஏளனமாகப் பேசுபவருக்கு வேறுபட்டவர் (3 : 3).

ஈ. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (1 பேதுரு 1 : 2).

உ. கடவுளுக்குச் சொந்தமான மக்கள் (1 பேதுரு 2 : 9).

மேற்சொல்லிய மக்களுள் எவனும் அழியக்கூடாது என்பது கடவுளின் விருப்பம். எல்லாரும், அதாவது மனுமக்கள் ஒவ்வொருவரும் மனமாற்றமடைய வேண்டும் என்பது கடவுள் விரும்புகிறார் எனக் கூறுவதற்கோ இப்பகுதியில் சிறிதும் ஆதாரம் கிடையாது, தாம் தெரிந்து கொண்ட மக்களில் எவனும் அழியக் கூடாது என்பது கடவுளின் விருப்பம், ஆகவே அழியாதவாறு அவர்கள் எல்லாரும் மனமாற்றமடைய வேண்டும் என்பது அவருடைய விருப்பமும் திட்டமுமாயிருக்கிறது.

3. அடுத்தபடியாக, எபிரெயர் 2 : 9-ஐ ஆராய்ந்து பார்ப்போம். "ஒவ்வொருவருக்காகவும்" மரணத்தை ருசி பார்த்தார்" (ப.தி.);

"அவர் அடைந்த மரணம் எல்லாருக்கும் பயனளிக்கும் மரணமாயிருக்க வேண்டும்" (பு.தி.).

ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவருக்காகவும் அல்லது ஏதோ ஓர் இனத்தில் எல்லாரும் என்பது சில வேளைகளில் மேற்கண்டபடி பெரிய எழுத்து சொற்களின் அர்த்தமாயிருக்கலாம். எடுத்துக்காட்டாக:—

1 கொரி 12:7- 'ஒவ்வொருவனைக் கொண்டும்' வரம் பெற்ற ஒவ்வொருவனைக் கொண்டும் என்பது அர்த்தம்.

கொர்லோ 1:28- 'ஒவ்வொருவனையும் நிறுத்தும் படி'', ''ஒவ்வொருவனுக்கும் அறிவுரைக் கூறி...''

பவுல் தம் கண்காணிப்பில் இருக்கும் மக்கள் ஒவ்வொருவனையும் முதிர்ச்சியடைந்தவனாக நிறுத்தும்படி முயற்சி செய்கிறார்.

ஆகவே, எபிரெயர் 2:9-ஐ முன்பின் வசனங்களுக்கேற்ப விளக்கினால்:-

அ. கிறிஸ்து, புதல்வர் பலருக்காக மரணத்தை ருசித்தார் (வச. 10).

ஆ. தாம் தூய்மையாக்குகிற மக்கள் யாவருக்காகவும் ருசித்தார் (வச. 11).

இ. சகோதரர் என்றழைக்கப்படுகிற யாவருக்காகவும் ருசித்தார் (வச. 11).

ஈ. கடவுள் தமக்களித்த பிள்ளைகள் யாவருக்காகவும் மரணத்தை ருசித்தார் (வச. 13).

மேற்சொல்லிய வகுப்பினர் யாவருக்காகவும் கிறிஸ்து மரித்தார். அவநம்பிக்கையில் நிலைத்திருக்கும் எந்த மனிதனும் இந்த வகுப்பாருள் ஒருவனாயிருக்க முடியாது. ஆகவே 2:9-இல் 'ஒவ்வொருவருக்காக' அல்லது 'எல்லாருக்கும்' என்ற சொற்கள் மனுமக்கள் எல்லாரையும் குறிக்கவே குறிக்காது.

4. 2 கொரிந்தியர் 5:14,15

இறந்தவர் (எபே.2:1) யாவருக்காகவும் கிறிஸ்து மாண்டார் என்பதாக அநேகர் இந்தப் பகுதியை விளக்கப் பார்க்கின்றனர். ஆனால் அதுவோ பவுலின் கருத்தன்று. மாறாக,

கிறிஸ்து யாருக்காக மாண்டாரோ அவர்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டு இறந்தவர்கள், இப்பொழுதோ கிறிஸ்துடன் இணைந்து அவருக்கென வாழ்ந்து வருகின்றனர். கிறிஸ்துவுடன் இணைந்திருக்கும் விசுவாசிகள் யாவருக்காகவும் ஆண்டவர் மாண்டதாகப் பவுல் இப்பகுதியில் கூறுகிறார்.

ரோமர் 6-ஆம் அதிகாரம் கூறுகிறபடி கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்கள் பாவத்தைப் பொருத்தமட்டில் இறந்தவர்களாயும் கடவுளுக்கென்று வாழ்கிறவர்களாயும் இருக்கிறார்கள்.

அனைத்துலக மீட்பு என்ற கொள்கை இப்பகுதியில் சிறிதும் காணப்படுவதில்லை. மாறாக குறிக்கப்பட்ட கடவுளின் மக்கள் கிறிஸ்துவின் மரணத்தின் பயனாகத் தூய்மையான வாழ்க்கை ஆற்ற வேண்டிய கடமையைப் பற்றியே இப்பகுதி பேசுகிறது.

5. *1 கொரி. 15 : 22*—''எல்லாரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாய் உயிர் பெற்றெழுவர்.'' 'எல்லாரும்' என்ற இந்த வகுப்பினர் யாவர்? 'அவருக்குரியவர்கள் உயிர்த்தெழுவார்கள்' *(வச. 23)*; 'கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்கள் உயிர் பெற்றெழுவர்' *(வச. 22)*; கிறிஸ்து யாருக்கென முதற்பலனாக எழுப்பப்பட்டாரோ அவர்களே *(வச. 20)*. நரகத்தில் தங்கள் படுக்கைபோட்டு நித்திரை செய்கிற மக்களுக்கு அவர் முதற்பலனாவர் அல்ல. ஆகவே, இப்பகுதியில் பவுல் விசுவாசிகளைப் பற்றியே கூறுகிறார். இந்த விசுவாசிகள் எல்லாரும் ஆதாமுக்குள் இறந்தனர்; எல்லாரும் கிறிஸ்துவுக்குள் உயிர்க்கப்படுவர். உலக மக்கள் எல்லாரும் ஆதாமுக்குள் இறந்தும் அவர்கள் எல்லாரும் கிறிஸ்துவுக்குரியவர்களா? எல்லாரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களா?

6. *ரோமர் 5:18*- கிறிஸ்துவினுடைய மரணம் எல்லா மனிதருக்கும் மெய்வாழ்வளிக்கும் என்ற கருத்துக்கு ஆதார

மாக இவ்வசனத்தைச் சிலர் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். சுருக்கமாக, பதில்கூறின் விடுதலையும் மெய்வாழ்வையும் அடைந்த மக்களுக்காக மட்டும் கிறிஸ்து மரித்திருப்பார். இவ்வசனத்தின் பிற்பகுதியில் கூறப்பட்ட 'எல்லா மனிதரும்' அவர்களேயாவர். 'பேரருளையும் கடவுளோடுள்ள நல்லுறவாகிய பெரிய ஈவையும் பெறுகிறவர்களே' (வச. 7). அந்த 'எல்லாரும்', 'ஜீவனை அடைந்து ஆளுபவர்களே' (வச. 17). அந்த 'எல்லாரும்; நீதிமான்களாக்கப்படுபவர்களே' (வச.19). அந்த 'எல்லாரும்'; உலகமக்கள் எல்லாரும் இந்தப் பெரிய ஈவைப் பெறுகின்றார்களா? ஜீவனை அடைந்து ஆளுகின்றார்களா? நீதிமான்களாக்கப்படுகிறார்களா?

சுருக்கமாக அவ்வாறு மறுப்பு செய்தது போதும் என்றாலும் இப்பகுதி பல கருத்து வேறுபாடுகளுக்குக் காரணமாயிருப்பதால் நாம் இன்னும் சற்று விரிவாகவும் நுட்பமாகவும் ரோமர் 5:14-20ஐ ஆராய்ந்து பார்ப்போமாக.

கவனம்: இப்பகுதியானது புதிய தமிழ் திருப்புதலில் (1975-1978) மூலத்திற்குச் சரியாய் மொழி பெயர்க்கப்படவில்லை. நிருபாசிரியர் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் வேண்டுமென்றே 'பலர்' 'எல்லாரும்' என்ற சொற்களை மாற்றி மாற்றி பயன்படுத்தினார், புதிய திருப்புதலோ இந்தச் சொல் வேற்றுமையை மறைத்து இப்பகுதியில் எங்குமே 'எல்லா' அல்லது 'எல்லாரும்' என்பதாக கூறுகிறது. பழைய திருப்புதல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

கிறிஸ்துவுக்கும் ஆதாமுக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது (வச. 14). எனினும், பல வேற்றுமைகளும் உண்டு-15,16,17 வசனங்களைப் பார்க்கவும். ஆகவே ஆதாமுடன் கிறிஸ்து எல்லா வகைகளிலும் ஒத்திருக்கிறார் என்று எண்ணலாகாது. ஆதாமின் செயல் அவனையும் பிறரையும் பாதித்ததுபோல கிறிஸ்துவின் செயலும் அவரையும் பிறரையும் பாதித்தது என்பதே இந்த ஒப்புமையாகும். ஆனால்

ஆதாமின் செயலினால் பாதிக்கப்பட்ட 'எல்லாரும்' கிறிஸ்துவின் மீட்பின் செயலினால் மீட்கப்பட்ட 'எல்லாரும்' ஒரே வகுப்பினர் என பவுல் கூறுகிறதில்லை. கீழ்க் காணும் ஏழு நியாயங்களினால் அந்தக் கூற்றை விளக்கு வோம்.

அ. பெண்ணின் வித்து என்றழைக்கப்படுகின்ற கிறிஸ்து (ஆதி. 3:15) தம்மோடு இணைந்திருக்கும் எல்லா மக்களின் பிரதிநிதியும் தலைவருமாயிருந்தார். அவர்களும் ஸ்திரியின் வித்து என்றழைக்கப்படுகின் றனர். ஆனால், ஆதாமின் பிள்ளைகளுள் அநேகர் சர்ப்பத்தின் வித்து என்றழைக்கப்படுகின்றனர். அவர்களோ கிறிஸ்துவுடன் இணைந்தவர்களல்ல. கிறிஸ்து அவர்களுக்குத் தலைமையான பிரதிநிதியா யில்லை.

ஆ. யோவான் 17:9--ஆதாமின் சந்ததி யாவருக்காக வும் பரிந்து பேசும் பிரதிநிதியாக தாம் இல்லையென இயேசு தாமே குறிப்பிடுகிறார்.

இ. எபிரெயர் 7:22இல் கிறிஸ்து புதிய உடன்படிக்கைக் குட்பட்ட மக்களின் பிணையாளியும் பிரதிநிதியுமா யிருக்கிறார். ஆனால் இந்த உடன்படிக்கை யாவ ரோடும், ஆதாமின் சந்ததியார் யாவரோடும் செய் யப்படவில்லை.

ஈ. ஏசாயா 53:5,6—கிறிஸ்து பிறருக்காகப் பாடுபட் டார் என்பது தெளிவு. ஆனால் சிலர் தங்கள் சொந்த பாவங்களினிமித்தம் பாடுபடப் போவ தாகத் திருமறை திட்டமாக தெரிவிக்கிறது. ஆகவே, கிறிஸ்து ஆதாமின் வழிவந்த யாவருக்கும் பதிலாளா கவும் பிரதிநிதியாகவும் பாடுபடவில்லை.

உ. கிறிஸ்து மக்களுக்கென்று பாடுபட்டதும் பிணை பட்டதும் ஒருபோதும் வீண்போகாது. ஆனால், அவர் யாவருக்கும் பிணைப்பட்ட பதிலாளியாயிருந்

தால் நரக தண்டனைக்குட்படுகிற மக்களுக்கென்றும் அவர் பிணைப்பட்டவராவாரோ? அவர்களுக்காக அவர் பட்டபாடு வீணன்றோ !

ஊ. தம் மைந்தர் ஆற்றிய செயல்கள் கடவுளுக்கு உகந்தவையாய் முழுதிருப்தியும் அளித்தது. ஆகவே குமாரன் யாருக்குப் பதிலாக செயலாற்றினாரோ அவர்களின் பேரிலும் கடவுள் பிரியமாயிருக்கவேண்டும். ஆனால் கடவுள் யாவர் பேரிலும் பிரியமாயிருக்கிறவர் அல்ல. ஆகவே கிறிஸ்து எல்லா மக்களின் பிணையாளியும் பதிலாளியுமாய் இருக்கவில்லை.

ஏ. ஆதாம் மனுமக்கள் யாவருக்கும் பிரதிநிதியாயிருப்பதுபோல் கிறிஸ்துவோ யாவருக்கும் பிணையாளியாகவோ, பிரதிநிதியாகவோயிருக்கவில்லை என்பதற்கு ஆதாரமாகும் தெளிவான வேத வாக்கியங்கள் கீழ்க்காணுமாறு:-

மத்தேயு 20:28 } புதிய திருப்புதல் இவ்விரண்டு பகுதிகளி
,, 26:28 } லும் நம்பதக்கதன்று! எச்சரிக்கை!!

யோவான் 10:15, 17:9

அப். 20:28

ரோமர் 8:33

**7. மீட்கப்படும் மக்கள் கெட்டு அழியக்கூடும் எனச் சில திருமறை வசனங்கள் போதிக்கிறதாம்; அவ்வாறு போதிக்கிறதாகத் தோன்றும் வசனங்களின் உண்மையான விளக்கம்**

கிறிஸ்து மனுக்குலம் முழுமைக்கும் மீட்பராக மரித்திருந்த போதிலும் அவருடைய மரணத்தின் புண்ணியங்கள் கெட்டழியும் மக்களைப் பொருத்தமட்டில் பயனற்றவை என்பது சிலருடைய கருத்தாகும். ஏனெனில் மீட்கப்பட்ட மக்களுக்குள் சிலர் கெட்டழியக்கூடும் என வேதம் கூறுகிறதாகக் கருதி இவர்கள் அனைத்துலக மீட்புக்கென வாதிட

முன்வருகின்றனர். அதாவது கிறிஸ்து யாவருக்காக மரித்திருந்த போதிலும் சிலர் மீட்படையாமல் கெட்டழிவர் என்று சில வேத பகுதிகள் கூறுவதாக இவர்கள் சாதிக்கின்றனர். இக்கருத்து உண்மையானால் அவர் எல்லாருக்காகவும் மரித்த போதிலும் எல்லாரையும் இரட்சிக்காமல் தோல்வியுறுவது ஒரு சிக்கலாக எழவில்லை அல்லவா? இவர்களுக்கு நான் கூறும் மறுப்பு கிறிஸ்து எவர்களுக்காக மரித்தாரோ அவர்களில் சிலர் கெட்டழிந்துப் போவதாகக் கூறுவது.

அவர் கெட்டழியும் எல்லாருக்காகவும் மரித்தார் என்பதை ஒருபோதும் நிரூபிக்கவில்லை (நிரூபிக்கமுடியாது). மேலும் இயேசு கிறிஸ்து தாம் பதிலாளாக மரித்து மீட்ட மக்கள் (கடவுளால் தெரிந்து கொள்ளபட்டவர்கள்) அழியக்கூடும் என்று எந்த திருமறைப் பகுதியும் கூறவில்லை. அவ்வாறு கூறுவதாக சாதிக்கபடுகிற வேத வசனங்களின் மெய்யான கருத்தென்ன என்பதை ஆராய்ந்து பார்ப்போமாக.

1. ரோமர் 14:15—''அவனை நீ உன் உணவு காரணமாகக் கெட்டழியும்படி செய்யாதே; கிறிஸ்து அவனுக்காகவுந்தானே உயிர் துறந்தார்?'' இவ்வசனத்தில் கிறிஸ்து மரித்து மீட்ட மக்களுள் ஒருவன் கெட்டழியக்கூடும் என பவுல் போதிக்கிறாராம். ஆனால் பவுல் அவ்வாறு போதிக்கிறதேயில்லை. நாம் மோசமான ஒரு தீமையைச் செய்யாதபடி அவர் நம்மை எச்சரிக்கிறார். நாம் கவனக்குறைவினால் தீமையை வருவிக்கக்கூடிய ஒரு காரியத்தைச் செய்வோமானால் நாம் குற்றவாளிகளாவோம் அல்லவா? அந்தத் தீமை நிகழாவிட்டாலும் நிகழக்கூடியது அல்லாவிட்டால் அத்தீமைக்கு ஏதுவாயிருக்கும்படி செயலாற்றுவது பாவமாகும்; அந்தப் பாவத்தைச் செய்யாதிருக்குமாறு டவுல் நம்மை எச்சரிக்கிறர்ர்.

தவிரவும் தங்களை கிறிஸ்தவ சபையார் எனச் சொல்லிக் கொள்கிற யாவரையும் வேதம் சிலவிடங்களில்

'பரிசுத்தவான்கள்' அல்லது 'சகோதரர்கள்' என்றழைக்கிறது. கிறிஸ்து எவர்களுக்காக மரித்தாரோ அவர்களில் யாரேனும் ஒருவர் முடிவாகக் கெட்டழிவர் என இவ் வசனம் நிருபிக்கவில்லை. மாறாக அது நிருபிப்பது நாம் சகோதரர்கள் என்று கருதிய சபையாருள் சிலர் கெட்டழிந்துப் போனால் அவ்வாறு கெட்டழிந்தவர்கள் மெய்யான விசுவாசிகளும் சகோதரர்களுமல்ல .என்பதுவே பொருள்.

2. 1 கொரி 8:11- ''பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப் போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே.'' இவ்விடத்திலும் 'கெட்டுப் போகுதல்' ஒருபோதும் 'நித்திய அழிவைக் குறிக்கவில்லை', என மறுப்பு கூறுகிறோம். பாவம் எப்போதுமே அழிக்கும் தன்மையுடையதுதான். ஆயினும் கிறிஸ்து தெரிந்துக் கொள்ளப்பட்ட பாவிகளுக்காக மரித்ததினால் அது அவர்களை நித்திய அழிவிற்கு கொண்டு செல்ல முடியாது அதே நேரத்தில் ஒரு சகோதரனை எந்தக் காரணத்தைக் கொண்டாகிலும் பாவக் குழியில் இடறி விழச் செய்வது பயங்கரமான ஒரு தவறு. நமது கவனக் குறைவினால் இடறி விழுந்த சகோதரனை ஆண்டவர் சீரடையச் செய்தாலும் நாம் செய்த தவற்றிற்குக் கணக்கு கொடுக்க வேண்டும் அல்லவா?

ரோமர் 14:15 இரண்டாம் பிரிவை இப்பகுதியுடன் ஒப்பிட்டு பார்க்கவும். தன்னைச் சகோதரன் என்றழைத்துக் கொள்ளுகிறவன் ஒருவேளை உண்மையான விசுவாசியாயிருக்கலாம்; அல்லாவிட்டால், ஒருவேளை பெயர் அளவுக்கு மட்டும் கிறிஸ்தவனாக இருக்கலாம். கிறிஸ்து மரித்து மீட்ட மக்களில் யாராவது என்றைக்குமாகக் கெட்டழியக் கூடும் என்ற கருத்துக்கு ரூபகாரம் ஒன்றுமில்லை இப் பகுதியில்.

3. 2 பேருது 2:1- கிறிஸ்து யாவருக்காகவும், அழிவின் மக்களுக்காகவும் மரித்தார் என்ற கருத்தை ரூபகாரப்

படுத்த இந்த வேதப்பகுதியை ஆதாரமாகப் பயன்படுத்து முன்னர் வரும் கூற்றுகள் கீழ்வருகிற கருத்துகளையே இவ் வசனத்தில் தருகின்றன எனக் காட்டவேண்டும். கிறிஸ்து வின் மரணத்தாலர்கும் மீட்பு

அ. ஆண்டவர்—ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

ஆ. தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட (ப-தி)
தங்களை விலை கொடுத்து மீட்ட (பு.தி)

இ. இந்தப் போதகன்மார் உண்மையான விசுவாசி களா? அல்லது தங்களைக் கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ளுகிற வெறும் பேர் கிறிஸ்தவர் களா?

ஈ. கடவுள் தெரிந்து கொண்ட மக்களுள் சிலர் கெட் டழியக்கூடும்,

உ. கிறிஸ்து யாவவரயும் மீட்க மரித்தார்,

மேற்படி கூற்றுகளில் எதையும் மெய்யெனக் காட்டு வது அரிது. இவ்வசனத்தில் நாம் அறியவேண்டிய மெய் யான அர்த்தங்களை நாம் காண்போம்.

அ. ஆண்டவர் எனத் திருப்பியிருக்கும் கிரேக்கபதம் புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வுக்குப் பொதுவாய் வழங்கப்படுகிற பட்ட பெயர் அல்ல. இந்தப் பதம் எல்லா மக்களுக்கும் முதலாளி யாயிருக்கிற கடவுளுக்கே பொருத்தமானது.

ஆ. கிரயத்துக்குக் கொண்ட என்று திருப்பியுள்ள கிரேக்க பதம் 'இரத்தம்' அல்லது 'மரணம்' என்ற சொற்களோடு பொதுவாய்ச் சேர்க்கப்பட்டிருக்கும். இப்பகுதியோ கிரயம் எது? அல்லது என்ன? என் பதைப் பற்றி ஒன்றும் சொல்கிறதில்லை. ஆகவே, ஏதோ இவ்வுலகில் நடமாடுகிற சில தீமைகளுக்குத் தப்பிய ஒரு விடுதலையையே இவ்வசனம் கூறுகிறது

என்று அறிகிறோம். 2:20-லும் பார்க்க. கடவுள் காருண்யம் மிக்க தெய்வமாயிருக்கின்றமையால் அநேகரை இவ்வுலகின் மோசமான கொடுமைகளிலிருந்தும், பொல்லாப்புகளின்றும் தப்புவிக்கிறார். அவர்களுள் சிலர், தங்கள் கள்ளப்போதனைகளால், தங்களை அற்புதமாய் காப்பாற்றிய கடவுளைப் புறக்கணித்து கெட்டழிவர் என்பது இவ்வசனத்தின் உண்மையான கருத்தாகும். இந்தப் பகுதியை ஆதாரமாகக்கொண்டு கிறிஸ்து யாவருக்காகவும் மரித்தார் என்ற கருத்தை மெய்ப்பிக்கக் காட்டுவது கூடாத காரியமாகும்.

4. எபி. 10:29—"கடவுளின் மைந்தரைக் காலால் மிதித்து, தன்னை கடவுளுக்கெனப் பிரித்துவைத்த உடன்படிக்கை இரத்தத்தை இழிவாகக் கருதி அருள் தரும் ஆவியைப் பழிக்கிறவன்." கடவுளுக்கெனப் பிரித்து வைக்கப்பட்ட சில மக்கள் கெட்டழிவதாகத் தோன்றுகிறதாம். கிறிஸ்து அவர்களுக்கென்றும் மரித்தும் அவர்களை முற்றுமுடிய ஈடேற்ற இயலவில்லை போலும். இதற்கு நாங்கள் கூறும் மறுப்பு:

அ. கடவுளைப் புறக்கணித்துத் தள்ளுதல் அல்லது மறுதலித்தல் என்கிற பாவத்தின் மிகவும் மோசமான தன்மையை எடுத்துக் காட்டுவதே இந்தப் பகுதியின் நோக்கம். மோசேயின் சட்டத்தை புறக்கணிப்பதும் மீறுவதும் எவ்வளவு மோசமானதாகும். கடவுளின் மைந்தர் சாற்றிய சுவிசேஷத்தை மீறுவதோ இன்னும் எவ்வளவு மோசமான ஒரு செயலாகும்.

ஆ. இப்பகுதியில் குறிக்கப்படுகிறவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள். அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாயிருப்பர் என்பதாகச் சாதிக்கவோ வழியில்லை.

இ. இக்கடிதம் பெற்ற வாசகர்கள் கெட்டழியாதபடி திருப்பாசிரியர் அவர்களைக் கடுமையாக எச்சரிக்

கிறார். 'வேண்டுமென்றே பாவம் செய்து வந்தால்' என்றிருக்கிறது. உண்மையான விசுவாசிகள் வேண்டுமென்று பாவஞ் செய்துவருவர் அல்லது செய்துவரக் கூடும் என்பது இதன் பொருளல்ல.

ஏரோதரசன் இயேசு என்னும் குழந்தையைக் கொன்று போடாதவாறு கடவுளின் தூதன் கனவில் தோன்றி யோசேப்பினிடம் எச்சரிப்பு கூறினார். இவ்வெச்சரிப்பின் நோக்கம் இயேசு கொல்லப்படக்கூடும் என்பது அர்த்தமன்று. குழந்தைப் பருவத்தில் இயேசு கொல்லப்படுவது கடவுளின் அனாதி திருவுளத் திட்டத்திற்கு மாறான ஒரு நிகழ்ச்சியாகுமன்றோ? கடவுள் தாம் வகுத்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு முறையாக இயேசுவை எகிப்து நாட்டுக்குக் கொண்டுபோகும்படி யோசேப்பிற்கு எச்சரிப்பு தந்தார்.

ஈ. 'உடன்படிக்கையின் இரத்தத்தால் கடவுளுக்கெனப் பிரித்து வைக்கப்படுதல்' இவ்வாறு பிரித்து வைக்கப் பட்டவர்கள் எல்லாரும் கிறிஸ்து தம் மரணத்தால் மீட்ட உண்மையான கிறிஸ்தவர்கள் என்பதாக நாம் எண்ணலாகாது.

i. ஆதித்திருச்சபையின் நாள்களில்: சபைபார் எல்லாரும் கூட்டுமொத்தமாக பரிசுத்தவான்கள் என்றழைக்கப்படுகின்றனர். சபையின் மக்கள் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் உண்மையான விசுவாசிகள் என்பது அதன் அர்த்தமாகும்.

ii. மேலும் ஞான முழுக்கு பெற்றவர் எல்லாரும் பரிசுத்மாக்கப்பட்டவர்கள் என்றழைக்கப்பட்டனர். அதாவது இச்செயலினால் அவர்கள் திருமுழுக்கு பெறாத மக்களிடமிருந்து பிரித்துவைக்கப்பட்டவர் அல்லவா?

2. கிறிஸ்துவைக் காலால் மிதித்தவர்கள் உண்மையான விசுவாசிகளாயிருந்தும் கெட்டழியும் மக்களாவர் என

யாராவது வற்புறுத்திச் சாதித்தால் கீழ்க்காணும் இரண்டு தவறான கருத்துகளில் சிக்கிக்கொள்வான் :—

i. கடவுள் தெரிந்துகொண்ட மக்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாச நம்பிக்கையும் தூய்மையும் இன்றியமையாத அவசியமானவை அல்ல.

ii. உண்மையான விசுவாசிகள் கிறிஸ்துவை விட்டு நித்தியமாக பிரிக்கப்படக்கூடும்.

ஆனால் இவ்விரண்டு கருத்துகளும் திருமறை உண்மைக்கு மாறானவை என்பதை நாம் ஏற்கெனவே நிருபித்துக் காட்டியுள்ளோம்.

இப்பகுதியின் இரண்டு முக்கியமான நோக்கங்களாவன:

அ. ஒரு மனிதன் பெயர் அளவுக்கு மட்டும் கிறிஸ்தவனாயிருந்தாலும் தான் நம்பியதாகக் கூறின உண்மைகளை மீறுவது பயங்கரமான ஒரு பாவச் செயலாகும் என்பதை எச்சரிக்க.

ஆ. உண்மையான விசுவாசிகள் இந்த மோசமான விசுவாச மறுதலிப்புப் பாவத்தில் சிக்காதபடி அவர்களையும் எச்சரிக்க.

ஆகவே, கடவுளின் துணைக்கொண்டு மேற்காட்டிய திருமறை பகுதிகளின் உண்மையான கருத்தை விளக்கமாகக் காட்ட முயற்சி செய்துள்ளேன். கிறிஸ்து யாவருக்காகவும் மாண்டார் என்ற கருத்தை நிலைநாட்டச் சிலர் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டாலும் உண்மையில் அவை அக்கருத்துக்கு ஒருபோதும் ஆதாரமளிக்கா. மாறாக கிறிஸ்து கடவுள் தெரிந்து கொண்ட மக்களையே மீட்க மரித்தார் என்ற அடிப்படையான திருமறை போதனையே உண்மையில் உண்மையானது என்பதை நிருபித்து காட்டியாயிற்று.

**சில தவறான தர்க்க முறைகள்**

இன்னும் சில தவறான தர்க்க முறைகளுக்கு சுருக்கமாக மறுப்புப் பதில் கூறுவேன். அவ்வாறு செய்து இந் நூலை முடித்துக்கொள்வேன்.

1. சிலர் இவ்விதமான முக்கூற்றுத் தர்க்க முறையை பயன்படுத்திக் கொள்வர்.

i. எல்லாரும் அவசியமாய் நம்பவேண்டியது உண்மையாயிருத்தல் வேண்டும்.

ii. தனக்காகக் கிறிஸ்து மரித்தார் என்று ஒவ்வொருவரும் நம்பவேண்டியது அவசியமாயிருக்கிறது.

iii. ஆகவே, கிறிஸ்து யாவருக்காகவும் மரித்திருப்பது உண்மையாகும்.

மேற்படி முக்கூற்றுத் தர்க்க முறையில் 'எல்லாரும்', உலக மக்கள்; ஒருவன்கூட விலக்கப்படாமல், ஒவ்வொருவரும் 'நம்வேண்டியது' கிறிஸ்துவைப் பற்றும் இரட்சிப்புக்கேதுவான விசுவாசம். உலகத்தார் எல்லாரும் ஒவ்வொருவரும் தவறுகளிலும் பாவங்களிலும் கிடந்து ஆன்மீக உயிரற்றவர்களாயிருக்கின்றனர்; கடவுளின் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுபவர் என்பதைப்பற்றிச் சந்தேகமே கிடையாது. இது மறுக்கப்படாத வேத உண்மை. அவ்வாறிருக்க, மேற்படி தர்க்கம் கூறுவது என்னவெனில், ஆன்மீக உயிரில்லாதவர்களாய் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டும் உலக மக்கள் எல்லாரும் கிறிஸ்து தங்கள் ஒவ்வொருவருக்காகவும் தனித்தனியாக மரிக்கும்படி தந்தையினால் அனுப்பப்பட்டார் என்று நம்பவேண்டியது அவசியமாயிருக்கிறது.

கிறிஸ்து ஏதோ இவனுக்காக அல்லது அவனுக்காகக் குறிப்பாகவும் திட்டமாகவும் மரித்ததாக வேதநூல் எங்குமே கூறுவதில்லை. அவர் பாவிகளை மீட்க மரித்தார் என்கிறது. பெயர் சொல்லி இந்தப் பாவிக்காய்

அல்லது அந்தப் பாவிக்காய் என்கிறதில்லை. வேதத்திலிருக்கிற எந்தக் கட்டளையாவது எந்த வாக்குறுதியாவது கிறிஸ்து தனக்காகக் குறிப்பாகவும் தனியாகவும் மாண்டார் என்பதை நம்புமாறு எந்த மனிதனையும் அழைப்பதில்லை.

தவிரவும், கிறிஸ்துவை நம்பவேண்டிய நற்செய்தி அநேகருக்கு அறிவிக்கப்படவில்லை. நற்செய்தியைக் கேட்காதவரும் கிறிஸ்து தங்களுக்காக மரித்தார் என்றும் அம்மரணத்தால் தாங்கள் மீட்கப்பட்டாயினர் என்றும் நம்பவேண்டியது அவசியமா? மோசேயின் நீதிச் சட்டத்திற்குட்படாதார் அந்தச் சட்டப்படி தீர்ப்பு பெறாமல் படைப்பின் மூலமும் தங்கள் மனித இயல்பின்மூலம் மனச் சான்றின் மூலமும் அறிந்துக் கொண்ட அறநெறிக்கு எதிராக வாழ்ந்த அநேகர் தண்டிக்கப்படுவர் என வேதம் ரோமர் 2:12இல் கூறுகிறது. அத்தகையோரிடமிருந்து கிறிஸ்துவைப் பற்றும் இரட்சிப்பின் விசுவாசம் எதிர்பார்க்கப்படவில்லை எனத் தெளிவாக தெரிகிறது.

ஆகவே, மேற்படி முக்கூற்றுத் தர்க்கமுறை திருததப்படவேண்டும்; கீழ்க்காணுமாறு:

1. சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்ட யாவரும், எதை நம்ப கடமைப்பட்டிருக்கிறார்களோ, அது உண்மையாக இருக்கவேண்டும்.

   சுவிசேஷத்தைக் கேட்கிற மக்கள் ஒவ்வொருவரும் தனக்காகக் குறிப்பாக கிறிஸ்து மரித்தார் என்று நம்பவேண்டியது அவசியம். ஆகவே, நற்செய்தியைக் கேட்கும் மக்கள் யாவருக்காகவும் கிறிஸ்து மரித்திருப்பது உண்மையாகும்.

ஆனால் எல்லாரையும் மீட்கக் கிறிஸ்து மரித்தார் என்ற யூகத்தை நிருபித்துக்காட்ட இந்தத் தர்க்கம் பயன்படாது என்பது யாவருக்கும் பிரத்தியட்சமான கண்கூடாகும்.

விசுவாசிப்பது உலகில் உள்ள எல்லா மக்களின் கடமையல்லாவிட்டாலும் நற்செய்தியைக் கேட்கிற எல்லா மக்களின் கடமையாயிருக்கிறதாம். அவர்களது இக்கூற்றே அனைத்துலக மீட்பை மறுக்கிறதாக உள்ளது. அனைத்துலக மீட்புக் கொள்கைக்கு நிலைத்து நிற்கக் கூடிய ஆதாரமே கிடையாது என்பது கண்கூடான முடிவாகும்.

தொடக்கத்தில் கூறிய முக்கூற்று தர்க்கத்திலுள்ள இரண்டாவது கூற்றும் மறுக்கப்படவேண்டும். நற்செய்தியைக் கூறும்போது நாம் பின்வரும் உண்மைகளைத் தைரியமாய் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். ''அருட்செய்தியில் நம்பிக்கை வைத்துத் திருமுழுக்குப் பெறுபவன் மீட்புப் பெறுவான்'' *(மாற்கு 16:16)* அல்லது ''இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எவர்மூலமாகவும் மீட்பு இல்லை; ஏனெனில் வானத்தின் கீழெங்கும் மனிதரிடையே நம்மை மீட்பதற்கு வேறு ஒரு பெயரும் அருளப்படவில்லை'' *(அப். 4:12)*. அதாவது, பாவிகளாகிய நமக்கு ஒரு மீட்பர் அவசியம் தேவை என்றும் இயேசு கிறிஸ்து ஒருவரே அந்த மீட்பர் என்றும் நற்செய்தியைக் கேட்கும் மக்கள் எல்லாரும் நம்பவேண்டும். கிறிஸ்து தங்களை மீட்கத் தங்கள் ஒவ்வொருவருக்காக குறிப்பாக மாண்டார் என்று நம்பவேண்டியது அவர்களின் கடமை அல்ல.

விசுவாசிக்கும்படியாக கடவுள் வைத்திருப்பவற்றில் இயற்கையாகவே ஒரு வரிசைமுறை அமைந்துள்ளது. அடிப்படையான சில உண்மைகளை விசுவாசித்தபிறகே கிறிஸ்து தனக்காகவும் மரித்தார் என நம்பவேண்டியது கடமையாக இருக்கலாம். ஏணியின் கீழ்ப்படிகளை விட்டுவிட்டு உச்சியிலுள்ள படியின்மீது கால் வைத்து ஏற ஒருவனுக்கு நாம் கட்டளையிடுவதில்லை. அது முடியாத ஒன்று. அவன் கிரமமாக நம்பவேண்டியவை:

i. பொதுவாக நற்செய்தியின் உண்மையைப்பற்றிய நம்பிக்கை.

ii. விசுவாசமே இரட்சிப்படைய ஒரே வழி என நம்புவது.

iii. தனக்கு ஒரு மீட்பர் அவசியம் தேவை.

iv. இயேசு கிறிஸ்து மட்டுமே தன்னை இரட்சிக்க வல்லவர்.

நற்செய்தியை விசுவாசிக்க வேண்டிய வரிசைக்கிரமமான உண்மைகள்:- 1. மனந்திரும்பி, நற்செய்தியானது கடவுளின் அருள் வார்த்தையாகும்; அந்தச் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இயேசுவே, கடவுள் ஏற்படுத்திய மீட்பின் ஒரே வழி. 2. விசுவாசத்திற்கும் இரட்சிப்புக்கும் இணைபிரியாத தொடர்பு உண்டு; அதாவது விசுவாசித்தாலொழிய யாரும் மீட்படைய முடியாது. 3. தூய ஆவியினாலே பாவம் உணர்த்தப்பட்டு தனக்குக் குறிப்பாக ஒரு மீட்பர் அவசியம் என்று உணருவதால்தான் வருத்தமுற்று பாரம் சுமக்கும் நிர்கதியான பாவியென்னும் மெய்யறிவு. 4. கிறிஸ்து தம்மிடம் வருகிற எந்தப் பாவியையும் புறம்பே தள்ளாமல் ஏற்றுக்கொள்வதான நற்செய்தியின் வாக்குறுதியை நம்பித் தன்னை முழுவதுமாக இயேசு கிறிஸ்துவினிடம் ஒப்புக்கொடுத்துவிட்டு அவர் பேரில் முற்றும் சார்ந்து விசுவாசித்தல்.

அதற்கு பிறகுதான், கிறிஸ்து குறிப்பாகத் தன்னிடத்திலும் அன்பு கூர்ந்து தன்னையும் மீட்க மரித்தார் என்ற உறுதியான நிச்சயமான நம்பிக்கை ஒரு விசுவாசிக்கு அருளப்படும். மேற்படி நான்கு விசுவாச செயல்களையாற்றும் கிருபை தனக்கு அருளப்பட்டதனால் தானும் கடவுளால் அன்பு கூரப்பட்டவன் என்றும் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்க்கப்பட்டவனென்றும் நம்பும்படியான உரிமையுண்டென அவன் விசுவாசிக்கலாம். கடவுளின் தூய ஆவியின் வல்ல செயலால் அன்றி யாரும் மேற்படி நான்கு ஆயத்த விசுவாச செயல்களை ஆற்றமுடியாது. அவ்வாறிருக்க இந்தக் கடைசி நிச்சயமான விசுவாசச் செய

லாற்றுவதற்குத் தூய ஆவியின் அருள் எவ்வளவு அவசியம் தேவையாக இருக்கிறது.

ஆகவே, முக்கூற்றுத் தர்க்கமுறை மீண்டும் திருத்தி எழுதப்படவேண்டும்:-

i. மீட்பரையும், மீட்பிற்கான ஒரே வழியின் அவசியத்தையும் உணர்ந்த மக்கள், இயேசு கிறிஸ்துவைப் பசித்தாகமுள்ளவர்களாய் வாஞ்சிக்கும் மக்கள் நம்ப வேண்டியது உண்மையாயிருத்தல் வேண்டும்.

ii. அவ்வாறான மக்கள் ஒவ்வொருவரும் தனக்காகக் கிறிஸ்து மரித்தார் என்று நம்பவேண்டியது அவசியமாகும்.

iii. ஆகவே, அப்படிப்பட்ட மக்களுக்காய் கிறிஸ்து மரித்தார் என்பது உண்மைதான்.

நற்செய்தியை கேட்கிற மக்கள் யாவரும் முதலாவதாகத் தங்கள் ஒவ்வொருவருக்காக குறிப்பாக கிறிஸ்து மரித்தார் என நம்பக் கடமைப்பட்டவர் அல்ல. மேற்கண்ட முதலாம் கூற்று கூறுகிற வண்ணம் ஆயத்தமாக்கப்பட்டவர்கள் மட்டும் அவ்வாறு நம்பக் கடமைப்பட்டுள்ளனர். கிறிஸ்து தனக்காக தனியாய் மாண்டதாக நம்பாதது எந்தப் பாவியின் ஆக்கினைத் தீர்ப்புக்கும் காரணமாகாது. கெட்டழியும் மக்கள் கடவுளின் ஒரே பேறான மைந்தரின் திருப்பெயரில் நம்பிக்கை வைக்காததால் (யோவான் 3:18) ஏற்கெனவே குற்றவாளிகள் என்ற தீர்ப்புக்குள்ளாகி விட்டனர். ஒளி உலகத்தில் வந்திருந்தும், அவர்கள் அந்த ஒளியை விரும்பாமல் இருளையே விரும்பினார்கள். அவர்களுக்கு இதுவே தெய்வத் தீர்ப்பு (யோவான் 3:19).

ஆகவே இம்முக்கூற்றுத் தர்க்கத்தை தர்க்க ரீதியாகவும் திருமறை உண்மைக்கேற்கும் வகையாகவும் முறைபடுத்திகூற முதல்கூற்றை இருமுறை திருத்தி எழுத நேர்ந்தது. முதன்முறையாக, திரள் திரளான எல்லா மக்களும் குறிப்பிடப்பட்டனர்; இரண்டாவதாக, அழைக்கப்பட்ட

பலர் குறிப்பிடப்பட்டனர். கடைசியாக, வேதத்தின்படி தெரிந்துக்கொள்ளப்பட்ட ஆயத்தமாக்கப்பட்ட சிலர் மட்டுமே குறிப்பிடப்படுகையில் அனைத்துலக மீட்புக் கொள்கைக்கு ஆதாரம் எது?

2. கிறிஸ்து தெரிந்து கொள்ளப்பட்ட மக்களுக்காக மட்டும் மரித்தார் என்ற கருத்து விசுவாசிகளுடைய மனத்தில் ஏராளமான சந்தேகங்களையும், அச்சங்களையும் குவித்து நிரப்பும் என்பதாகச் சிலர் ஆட்சேபனை கூறுவர்: கிறிஸ்து யாவருக்காகவும் மரிக்காத பட்சத்தில், பின்னை ஓர் ஏழை விசுவாசி தனக்காக கிறிஸ்து மரித்தாரோ இல்லையோ எனப் பயந்துயோசிக்க நேரிடும் அல்லவா?

இதற்குப் பதிலாக நாம் கூறுவது :—ஒரு பாவி கிறிஸ்துவின்'டம் வருவதற்கும், கிறிஸ்துவின் நற்செய்தியை நம்புவதற்கும் மேற்சொல்லியபடி குறிப்பானதும் திட்டமானதுமான தனக்காக மரித்தார் என்ற அறிவு தேவையில்லை. கிழ்க்காணும் நான்கு உண்மைகளை அறிந்துணர்ந்து நம்புவதே போதும்.

அ. கிறிஸ்துபட்டபாடு மரணத்தின் பலனாக விசுவாசிகள் யாவருக்கும் மீட்பு கிடைப்பது உறுதி.

ஆ. கடவுள் விடுத்த நற்செய்தியின் அழைப்புக்குக் கீழ்படிகிறவன் எவனோ அவன் ஏற்றுக்சொள்ளப்படுவது நிச்சயமான உறுதி.

இ. வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் மனச்சான்றுகளுள்ள மக்கள் யாவருக்கும் இலவசமான சுத்த கிருபை நிச்சயமாய்க் காட்டப்படும்.

ஈ. கிறிஸ்துவினிடம் வந்து மனம் இறுக்கி கெஞ்சிக் கேட்கிற மக்கள் யாவருக்கும் அவருடைய மரணத்தாலான புண்ணியப் பலன் போதுமே போதும்.

பேற்கொண்டு, என் ஆத்துமாவே! உனக்கென்ன தேவை? இது போதாதா? இக் கொள்கையில் ஐயுறவுக்காவது அவநம்பிக்கைக்காவது? மனக்கலக்கத்திற்கு காரணம் ஏது?

இதற்கு மாறாக, கிறிஸ்து யாவருக்காகவும் மரித்தும் அவரால் மீட்கப்பட்ட மக்களுள் சிலர் கெட்டழிவர் என்ற கொள்கையோ சந்தேகத்திற்கும் பயத்திற்கும் ஏதுவாகும். சிலர் கெட்டழியக் கூடுமானால் ஒருவேளை எல்லாம் கெட்டழியமாட்டார் என்பதற்கு உறுதிச்சான்று எது? எவர் ஒருவருக்கும் சிறிதும் நிச்சயமாய் நம்புவதற்கு ஆதாரமும் உரிமையும் கிடையாது.

3. யாவரையும் மீட்கக் கடவுள் தம் மைந்தரை அனுப்பி வைத்தார் என்ற கொள்கை கடவுளின் அளவற்ற பேரருளை மேலும் மேலும் மேன்மைப்படுத்தும் அல்லவா என்பர் சிலர்.

கடவுளின் எவ்வகையான அருள் அனைத்துலகத்திற் குறியது?

தெரிந்து கொள்ளும் அருளா? கடவுள் எல்லாரையும் தெரிந்துக் கொண்டார் இல்லை (ரோமர் 9:11-15). பாவிகளை அழைக்கும் அருளா? இல்லை; எவர் களைக் குறித்துக் கடவுள் முன்பே திட்டமிட்டாரோ அவர்களையே அவர் அழைத்துமிருக்கிறார் (ரோமர் 8 : 30).

பாவிகளைப் புனிதப்படுத்தும் அருளா? இல்லை! மணவாட்டியாகிய திருச்சபையின் விசுவாசிகளே பரிசுத்தமாக்கப்படுவர் (எபே. 5:25-27). பாவிகளை நீதிமான்களாக்கும் கிருபையா? அதுவுமில்லை! ஏனென்றால் எல்லாரும் நீதிமான்களாக்கப்படுவ தில்லை. விசுவாசிகள் மாத்திரம் நீதிமான்களெனத் தீர்க்கப்படுவர் (ரோமர் 3 : 22).

மக்களை மீட்கும் கிருபையா? மீட்கப்பட்டவர்கள் எல்லா நாட்டிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டுள்ள னர். ''எல்லாக் கோத்திரத்தார், மொழியினர், இனத்தவர், நாட்டினரிடையேயிருந்தும் மனிதரைக் கடவுளுக்கென்று (மீட்டு) வாங்கி கொண்டீர்''

(வெளி. 5 : 9). ஆகவே அனைத்துலக மக்களுக்கும் உரியதாகக் கூறப்படும் அருள் ஏது?

விசுவாசம் என்ற நிபந்தனையை நிறைவேற்றினால் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென கடவுள் விரும்புவது மெய்யானால் மக்களில் ஒருவராகிலும் நிறைவேற்ற இயலாத ஒரு நிபந்தனையை அவர் விதிப்பவராயிருப்பார். (நீ உன் கண்களைத் திறந்து பார்: அப்போது நான் உனக்கு ரூ. 100 தருவேன் என்று கண் தெரியாத குருடனிடம் வாக்குறுதி கூறுவது போலும்). இக்கருத்து கடவுளின் கருணையை மிகைப்படுத்துவது எங்ஙனம்? அனைவருக்கும் கூறப்படுகிற கிருபை கெட்டழியும் மக்களைப் பொருத்த அளவில் பயனற்ற அருளாகும். அவமாக்கப்படக்கூடிய கிருபை எல்லாம் வல்ல கடவுளின் கிருபை யாகுமோ? அவமாக்கப்படக் கூடும் என்று சாதிப்போர் அருளை மிகைப்படுத்திப் பேசுபவராவார்களா அல்லது கிருபையைக் குறைத்துப் பேசுபவர்களா?

4. கிறிஸ்துவின் மரணத்தாலாகும் நற்பேறுகள் உலகத்தின் மக்கள் யாவருக்குமுரியன என்றிருந்தால், அம்மரணத்தின் புண்ணிய பலன் மிகைப்படுத்தபடுமாம். நமது பதில், கிறிஸ்துவின் மரணப்பாடுகள் ஒருவேளை எல்லாரையும் இரட்சித்தாலும் இரட்சிக்கும் அல்லது கிறிஸ்துவின் இரத்தம் கடவுள் தெரிந்துக்கொண்ட மக்கள் எல்லாரையும் தவறாமல் நிச்சயமாய் மீட்டு ரட்சிக்கும்.

இவ்விரண்டில் உண்மையாய்க் கடவுளின் கிருபையை மிகைப்படுத்திப் பேசுவது எது? 'ஒருவேளை' என்கிற கூற்றா? அல்லது 'நிச்சயமாய்' என்கிற கூற்றா? கிறிஸ்துவின் மரணத்தால் விளையும் நற்பேற்றின் சிறப்பு எத்தனை பேருக்கு அது அளிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்ததல்ல. மாறாக கடவுள் கொண்ட நோக்கத்தை அது நிறைவேற்றியுள்ளதா என்பதுவே. கடவுளின் திருவுளச்சித்தத்தை நிறைவேற்றுவதைவிட மேலான சிறப்பு அதற்கு இல்லை.

5. கிறிஸ்து யாவரையும் மீட்க மரித்தார் என்ற கொள்கை எல்லா மனிதருக்கும் ஆறுதலளிக்கக்கூடிய ஒரு போதனையாகுமெனச் சிலர் கூறுவர்.

இதற்கு பதிலாக நாம் கூறுவது:

ஆன்மீக ஆறுதல் விசுவாசிகளுக்கு மட்டுமே உரியது (எபி. 6: 17, 18). அவிசுவாசிகள் யாவர் மீதும் கடவுளது கோபம் நிலைத்திருக்கிறது (யோவான் 3:36). மேலும் அவிசுவாசிகள் அவ்வாறான ஆன்மீக ஆறுதலை விரும்புவதுமில்லை. இவ்வாறாக, கடவுளது கோபத்திற்குட்பட்டவர்களையும் கிறிஸ்துவின் மரணத்தால் வரும் ஆசீர்வாதத்திற்கு உட்படுத்துவது விசுவாசிகளுக்கு எந்தக் கூடுதலான ஆறுதலையும் அளிக்காது.

சோதனை இக்கட்டு நேரத்தில் பின்வரும் முக்கூற்று தர்க்கத்தால் நீ உன்னை ஆற்றித் தேற்ற முடியுமா?

கிறிஸ்து எல்லா மனிதருக்காகவும் மரித்தார்.
நான் ஒரு மனிதன்.

ஆகவே, கிறிஸ்து எனக்காகவும் மரித்திருப்பாராக்கும் என்ற இந்தத் தர்க்க முறையானது நம்பத்தக்கதன்று. மனிதர் பலருக்குக் கடவுள் தம்மையும் தம் மைந்தரின் மீட்பையும் வெளிப்படுத்தினதேயில்லை. (மத். 11:26, 27). ஆகவே தாம் யாருக்குத் தம்மை வெளிப்படுத்தவில்லையோ அவர்களுக்காகவும் அவர் மரித்தார் எனச் சாதிப்பதினால் என்ன பயன்? என்ன ஆறுதல்?

கிறிஸ்து தம் மரணத்தால் மீட்டுரட்சித்த மக்களுக்காய் ஓயாமல் பரிந்து வேண்டுதல் செய்கிறார் என்ற உண்மை விசுவாசிகளுக்கு மிகவும் ஆறுதலானது (1-ஆம் பகுதி 7-ஆம் பிரிவு பார்க்கவும்). கிறிஸ்துவின் மரணம் எல்லா மனிதருக்காகவும் என்று கூறினாலும் அவருடைய பரிந்து பேசும் மன்றாட்டு அவ்வாறில்லை என்பதை யோவான் 17:9 திட்டமும் தெளிவுமாகக் கற்பிக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் மரணத்தைவிட்டு அவருடைய மன்றாட்டைப்

பிரித்துவிட்டால் மரணத்தாலாக வேண்டிய ஆறுதல் மறைந்து போகும். அவரது மன்றாட்டைவிட அவருடைய மரணத்தின் புண்ணியபலனை விரிவாக்கப் பார்ப்பதனால் நம்முடைய ஆறுதலை அகலமாக்க முடியாது; மாறாக நாம் அவ்வாறுதலை அவமாக்குவோம்.

தெரிந்துக்கொள்ளப்பட்ட மக்களின் விசுவாசமும் பரிசுத்தமும் கிறிஸ்துவின் மரணத்தால் அவர்களுக்குச் சம்பாதிக்கப்படவில்லையென்றால் பின் எங்கிருந்து வருகின்றன? கடவுள் கிறிஸ்துவின் பாடுகளினிமித்தம் கிருபையாய் அருளும் ஈவுகள் அல்லவென்றால் பின்னை அவை சுயேச்சையினால் நாம் ஆற்றும் செயல்களா? இதுவா நீங்கள் எங்களுக்கு அளிக்கப் போகிற விரிவான ஆறுதல்? கடவுளின் சுத்த கிருபையை நம்மிடமிருந்து எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நமக்குக் கள்ளச் சுயாதீனத்தை அளிப்பதா? விசுவாசத்தையும் தூய்மையையும் விரும்பும் மனிதனை யாரிடம் எங்கே அனுப்புவாய்? கடவுளிடம் அவனை அனுப்ப வேண்டாமா? கிறிஸ்து சிந்திய திரு இரத்தத்தினாலாகும் புண்ணிய பலனாகக் கடவுள் தம் மைந்தரைப் பற்றும் விசுவாசத்தையும் தூய்மையையும் இலவசமான ஈவுகளாய் அருளமாட்டாரா?

கிறிஸ்து யாவருக்காகவும் மரித்தாலொழிய எந்த மனிதனும் தனக்காகக் கிறிஸ்து மரித்ததாக நிச்சயமாய் நம்புவதற்கு வழியில்லையாம்.

ஆனால், இதுவோ உண்மையாகாது. ஏனென்றால் கிறிஸ்து யாவருக்காகவும் அன்று, தெரிந்தெடுக்கப்பட்ட மக்களுக்காக மட்டும் மரித்ததாக நம்புகிற விசுவாசிகள் அநேகர் கிறிஸ்து தங்களுக்காகக் குறிப்பாகவும் திட்டமாகவும் மரித்தார் என நிச்சயமாய் நம்புகின்றனர். கிறிஸ்து விசுவாசிகள் யாவருக்காகவும் மரித்த மரணமே உறுதியான நம்பிக்கைக்கு ஆதாரமாகும். அவர்கள் விசுவாசிகளாயிருப்பதனாலன்று, அவர்கள் விசுவாசிகளாவதற்குக் கிறிஸ்து அவர்களுக்கென்று மரித்தார். தெரிந்தெடுக்கப்

பட்ட மக்களுக்காக மரித்தார்; அம்மரணத்தின் விளைவாக அவர்கள் விசுவாசிகளாயினர். தங்களிடம் தூய ஆவி ஆற்றும் செயலால் தாங்கள் கிறிஸ்துவின் இரக்கத்தைப் பெறக் கிறிஸ்துவினிடம் வந்தனர் என்பதாகத் தெரிந்து கொள்கின்றனர். அவ்வாறு கிறிஸ்துவினிடம் வருவோர் யாவருக்கும் அவருடைய மரணத்தாலாகும் புண்ணிய பலன் போதுமே போதும் என வேதம் கூறுவதாக அறிந்துகொள்வர். தாங்கள் விசுவாசிகளாயிருப்பதனால் கிறிஸ்து தங்களுக்காக மரித்திருக்க வேண்டுமென நிச்சயமாக அறிந்துகொள்ளலாகும்.

வாசிக்கும் நண்பா! நீங்களே முடிவான தீர்ப்பு கூறுங்கள். மேற்கண்ட நிச்சயம் வேண்டுமா? அல்லது தவறான முக்கூற்று தர்க்கம் வேண்டுமா?

கிறிஸ்து எல்லா மனிதருக்காகவும் (கெட்டழியும் மக்கள் உட்பட) மரித்தார்.

நான் ஒரு மனிதன்

ஆகவே, அவர் எனக்காகவும் மரித்திருப்பாராக்கும். முடிவுரையாக நான் கூறும் ஆலோசனை என்னவெனில் ரோமர் 8:32-34-ஐப் பார்க்கவும். ஆவிக்குரிய நிலையான ஆறுதல் கிறிஸ்துவின் திரு இரத்தத்தையும் கிறிஸ்துவின் ஓயாத மன்றாட்டையும் ஆதாரமாகக் கொண்டது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக வெகு காலத்திற்குமுன் சிந்தப்பட்டதுமல்லாமல், அவரது பரிந்துரைக்கும் மன்றாட்டுத் தொடர்ந்து அவர்கள் நிமித்தம் இடைவிடாமல் அவரால் ஏறெடுக்கப்படுகிறது. அவர்களுக்காக மட்டும் பொருளாய் இரத்தஞ் சிந்திய நோக்கமும் அவர்களுக்காகப் பரிந்து மன்றாட்டு செய்யும் நோக்கமும் ஒன்றே. விசுவாசிகள் யாவருக்கும் என்றும் வாடாத கிரீடத்தைச் சூட்டுவதே அந்த முடிவான மாட்சிமை மிக்க நோக்கமாகும்.

—o—

Pub. No. 292

இப்புத்தகத்தின் ஆக்கியோன் தனது ஆத்தும பாரத்தில் நிரம்பி வெளிவந்த கருத்துக்களை அனைவரோடும் பகிர்ந்துக்கொள்கிறார். கிறிஸ்துவில் கிடைக்கும் ஜீவனையும், சிலுவையண்டை கிடைக்கும் புதுவாழ்வையும் அழகே விளக்குகிறார். இன்றைய கிறிஸ்தவத்தில் வேற்றுமைகளுக்கு மாற்று மருந்து கொடுக்கிறார். ஆவிக்குரிய வட்டத்தில் நடமாடும் குறைகளுக்கும், பிரிவுகளுக்கும் சரியான விளக்கவுரை தருகிறார். கிறிஸ்து தமது மரணத்தினால் எவற்றைச் செய்யவில்லை என்று கூறுவதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அவரின் மரணத்தினால் எவற்றை நிறைவேற்றினார் என்றும் விளக்கமளிக்கிறார். இந்நூலை எழுத ஏழு வருடங்கள் திருமறையையும் இதர நூல்களையும் படித்து பல புது சத்தியத்தைத் தொகுத்தளித்துள்ளார்.

தேவ ஊழியருக்கும், தேவ பிள்ளைகளுக்கும், தேவ சபைக்கும் நெருங்கியதோர் ஐக்கியத்தை வளர்க்க ஓர் ஐக்கிய மலராக இப்புத்தகம் பூத்திருக்கிறது.

The Death of Death in the Death of Christ

John Owen

விலை ரூ 12-00

EVANGELICAL LITERATURE SERVICE
95-A, VEPERY HIGH ROAD, MADRAS – 600 007.